
Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU




முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 ஆனி 31 திங்கட்கிழமை (15.07.2013) பக்கங்கள் 20 ஓசை – 288


அரச ஊழியருக்கு கிடைக்கும் 07




பெருவெற்றி! 09



நீ யார்? 11



துரித நடவடிக்கை 14




தொடர்பு? 18



# முதல்வர் வேட்பாளரின் தடுமாற்றம் தீர்வை தயாரிக்குமா கூட்டமைப்பு

## கேட்கிறார் பேராசிரியர் சிற்றம்பலம்




முதலமைச்சர் வேட்பாளரைத் தெரிவு செய்யத் தெரியாமல் தடுமாறும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழருக்கான தீர்வுத் திட்டத்தை எப்படித் தயாரிக்குமென தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்களில் ஒருவரான பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் கேள்வி எழுப்பியுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் இன்று பதவிப் பிசாசுகள் உள் நுழைந்துள்ளனர். தமிழ் மக்களைப் பற்றி சற்றேனும் சிந்திக்காமல் இன்று செயற்படுகின்றது கூட்டமைப்பு. வடக்கில் மக்கள் போரின் கொடுமையால் அந்தரித்துக்கொண்டு இருக்கும் போது அதைக் கவனிக்காதவர்கள் இன்று கொழும்பிலிருந்து முதலமைச்சர் கதிரைக்கு ஆசைப்படுகின்றார்கள். கடந்த மூன்று தினங்களாக முதலமைச்சரைத் தெரிவு செய்யத் தெரியாத இந்தக் கூட்டமைப்பு தமிழருக்கான தீர்வுத்திட்டத்தை எப்படித் தயாரிக்கும்? எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு புதிய தலைமை வேண்டும். தமிழ் மக்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்று தந்தை செல்வா அன்று கூறியிருந்தார். இன்று நான் கூறுகின்றேன், அதாவது தமிழ் மக்களை கூட்டமைப்பின் தற்போதைய தலைமையிடமிருந்து கடவுள்தான் காப்பாற்றவேண்டும் என மேலும் தெரிவித்தார்.

# முதல்வர் வேட்பாளராக மாவை தவறின் கூட்டமைப்பிற்கு புதிய தலைமை

## போர்க்கொடி தூக்குகிறது தமிழரசுக் கட்சி



வடமாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளராக மாவை சேனாதிராஜாவை களமிறக்காவிட்டால் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுவை உடனடியாகக் கூட்டுமாறும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு புதிய தலைமை வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

வடக்குத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளர் யார் என்பதைத் தெரிவு செய்வதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் இழுபறி நிலை தொடர்கின்றது. முதலமைச்சர் வேட்பாளரை

(19) ஆம் பக்கம் பார்க்க

# ஈ.பி.டி.பி.யின் பெயரைப் பயன்படுத்தி களங்கம் விளைவிக்கப்படுகிறது

## மக்களை விழிப்புடன் இருக்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் பெயரைப் பயன்படுத்தி யாழ். குடாநாட்டில் தேவையற்ற அநாகரிகமான செயற்பாடுகளில் சிலர் ஈடுபடுவதாக அறியக் கிடைத்துள்ளது. எனவே இது தொடர்பில் மக்கள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டுமென ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் விடுத்துள்ள ஊடகச் செய்தியில் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நேற்றைய தினம் யாழ். நகரிலுள்ள பிரபல உணவகம் ஒன்றுக்கு 57-9467 என்ற இலக்கம்

(19) ஆம் பக்கம் பார்க்க

# சரணடைந்து காணாமற்போனவர்களின் ஆட்கொணர்வு மனு விசாரணை இன்று

2009 மே 18 ஆம் திகதி போரின் முடிவில் படையினரிடம் சரணடைந்த பின்னர் காணாமற்போன, ஐந்து பேர் தொடர்பான ஆட்கொணர்வு மனுக்கள் வவுனியா மேல்நீதிமன்றத்தில் இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

போரின் முடிவில் படையினரிடம் சரணடைந்த தமது உறவுகள் எங்கே என்று கண்டுபிடிக்கக் கோரி, அவர்களின் உறவினர்கள் இந்த ஆட்கொணர்வு மனுக்களை சமர்ப்பித்துள்ளனர்.

மனுதாரர்களின் சார்பில் சட்டவாளர் கே.எஸ்.இரத்தினவேல் முன்னிலையாகவுள்ளார். 2009 மே 18 ஆம் திகதி முல்லைத்தீவு செல்வபுரத்தில்,

(19) ஆம் பக்கம் பார்க்க

# 13 ஐ நீர்த்துப் போகச் செய்ய இந்தியா இடமளிக்கக்கூடாது

## பிரதமர் மன்மோகனுக்கு ஜெயலலிதா கடிதம்



13 ஆவது திருத்தச்சட்டத்தை நீர்த்துப் போகச்செய்யும் இலங்கை அரசின் நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்தவேண்டும் என்று கோரி, தமிழ்நாடு முதல்வர் ஜெயலலிதா, இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கிற்கு கடிதம் எழுதியுள்ளார். இந்தக் கடிதத்தில் அவர், இலங்கைத் தமிழர்களின் அரசியல் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் அரசியல் சட்டத்தின் 13 ஆவது பிரிவை நீர்த்து போகச் செய்யவோ, அல்லது இரத்துச் செய்யவோ வழிவகை செய்யும் நடவடிக்கை

(19) ஆம் பக்கம் பார்க்க

# மூழ்கிய படகில் இலங்கையரும்

அவுஸ்ரேலியா நோக்கிப் பயணித்தபோது கவிழ்ந்த படகில் இலங்கையர்கள் இருந்தமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அந்நாட்டிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம் குறிப்பிட்டுள்ளது. அவுஸ்ரேலிய குடிவரவு, குடியகல்வு அதிகாரிகளால இந்த விடயம் உறுதிப்படுத்தப்

(19) ஆம் பக்கம் பார்க்க

# மாகாண சபைக்கு பொலிஸ் அதிகாரம் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல்

## மேனனிடம் தெரிவித்தார் கோத்தா

13 ஆவது திருத்தச்சட்டங்களின் கீழ் உள்ள பொலிஸ அதிகாரங்கள் நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு விரோதமானது என்பதால், இதில் எந்த விட்டுக்கொடுப்புக்கும் இடமில்லை என்று பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ, இந்தியாவிடம் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார். கடந்த திங்கட்கிழமை இலங்கைக்கு பயணம் மேற்கொண்டிருந்த இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனனுடன் நடத்திய தனியான சந்திப்பிலேயே

(19) ஆம் பக்கம் பார்க்க



# உயர்தரத்தில் சிறப்பு சித்தி எய்திய வவுனியா மாணவர்கள் கௌரவிப்பு




(வவுனியா)
வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் கல்வி கற்று க.பொ.த. (உ/த) பரீட்சையில் சிறப்புச் சித்திகளைப் பெற்று பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

2012ஆம் ஆண்டுக்கான க.பொ.த. (உ/த) பரீட்சையில் சிறப்புச் சித்திகளைப் பெற்று பல்கலைக்கழகத்திற்கு தெரிவான 90 மாணவர்களே கல்வி அமைச்சர் பந்துல குணவர்தனவினால் கௌரவிக்கப்பட்டனர்.

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கம் மற்றும் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன, சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த, கல்வி அமைச்சின் செயலாளர் கோத்தாபய ஜயரட்ன, வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.அன்ரன் சோமராஜா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## நடமாடும் சேவை நாவற்காட்டில் நாளை

சாவகச்சேரி பிரதேச செயலகத்தினால் அடையாள அட்டை பெறல், பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் பெறல் என்பவற்றுக்கான நடமாடும் சேவை ஒன்று இடம்பெறவுள்ளது. நாவற்காடு கணபதிப் பிள்ளை வித்தியாலயத்தில் நாளை பி.ப. 1.00 மணி முதல் 4.30 மணிவரை இடம்பெறவுள்ளது.

இந்நடமாடும் சேவையானது குடமியன், இயற்றாலை, தாவளை இயற்றாலை, கொடிகாமம் வடக்கு போன்ற 4 கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்தோருக்கே இடம்பெறும் என்றும் இக்கிராமசேவகர் பிரிவுகளுக்கு உட்பட்ட பயனாளிகளை இச்சேவையில் தவறாது கலந்துகொண்டு பயன்பெறுமாறு சாவகச்சேரி பிரதேச செயலகம் அறிவித்துள்ளது. (130)

## வெடிப்புச் சம்பவத்தில் காயமடைந்த ஹலோ ட்ரஸ்ட் பணியாளர் மரணம்

நாகர்கோவில் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்தார்.

ஹலோ ட்ரஸ்ட் கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தில் பணிபுரியும் பிரஸ்தாப குடும்பஸ்தர் கடந்த வெள்ளியன்று கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டவேளையில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலை விபத்துப் பிரிவின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தார். நேற்று சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

மாமுனையைச் சேர்ந்த ஜேசுதாஸ் லியோ (வயது - 29) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

நேற்று மாலை இவரது சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (இ)

## வாடகைக்குப் பெற்ற வாகனங்கள் அடகு

(யாழ்ப்பாணம்)
வாடகைக்காக பெறப்பட்ட வாகனங்களில் 13 வாகனங்கள் அடகு வைக்கப்பட்டு மோசடி செய்யப்பட்டுள்ளதாக யாழ். பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

கடவத்தையைச் சேர்ந்த வாகன உரிமையாளரே இவ்வாறு யாழ். பொலிஸில் முறையிட்டுள்ளார்.

திருமண வைபவம் மற்றும் இதர தேவைகளுக்காக தம்மிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்களில் 13 வாகனங்கள் அடகு வைக்கப்பட்டுள்ளதாக அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (25)

## மதிய உணவு திடீர் நிறுத்தம் காரணம் புரியாமல் மாணவர்கள் ஏக்கம்

(அச்சுவேலி)
பாடசாலை மாணவர்களுக்கான மதிய உணவிற்கான சமையற் பொருட்கள் உரியநேரத்திற்கு பாடசாலைக்கு அனுப்பி வைக்கப்படாமையினால் மாணவர்கள் பசியுடன் கற்க வேண்டிய பரிதாப நிலை காணப்படுவதாக பெற்றோர்களால் தெரிவிக்கப்படுகின்றது.



மதிய உணவுக்கான அரிசி, பருப்பு, எண்ணெய், ரின்மீன் போன்ற பொருட்கள் யாழில் உள்ள அநேகமான பாடசாலைகளில் கையிருப்பு முடிவடைந்தமையால் கடந்த வெள்ளிக்கிழமை வரை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கப்படவில்லை.

இதேவேளை, மாணவர்களின் பசியினை மேலும் தூண்டும் வகையில் யானைப் பசிக்கு சோளப் பொரியிட்டது போல் ஒவ்வொரு மாணவருக்கும் மதிய இடைவேளையின்போது மிகவும் சொற்ப அளவிலான பேரீச்சம் பழங்கள் வழங்கப்பட்டு வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (03)

## பரிசளிப்பு விழா

ஆனைக்கோட்டை ஸ்ரீ கண்ணகை இராஜேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு மாணவர்களிடையே நடத்தப்பட்ட சைவ சமய அறநெறிப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில் வழங்கும் நிகழ்வு கடந்த வாரம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் மற்றும் அகில இலங்கை சின்மயாமிஷன் சுவாமிகள் பிரமச்சாரி யாக்ரத்சைதன்யா ஆகியோர் சிறந்த பெறுபேறுகள் பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தனர். மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (10)

## "வட்டுக்கோட்டை சந்தை" சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி

(யாழ்ப்பாணம்)
வலி. தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள வட்டுக்கோட்டை சந்தையின் பெயர் தொடர்பில் ஏற்பட்ட சட்டப்பிரச்சினை தீர்க்கப்பட்டுள்ளது.

இதன்படி இந்தச் சந்தை தொடர்ந்தும் "வட்டுக்கோட்டை சந்தை" என்றே அழைக்கப்படும் என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

குறித்த சந்தையின் பெயரை முந்திய பெயரான சிவன் கோயிலடி அல்லது விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களால் அழைக்கப்பட்ட சிந்துபுரம் என்று இனி அழைப்பதில்லை என்று நீதிமன்றத்தில் மனுதாரரும் எதிர் மனுதாரரும் ஏற்றுக்கொண்டனர்.

வலிகாமம் மேற்கு பிரதேச சபையினால் வட்டுக்கோட்டை சந்தைக்கு சிந்துபுரம் சந்தை என்ற பெயர் சூட்டப்படவுள்ளதாக கூறி அதற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுமீதே விசாரணைகள் இடம்பெற்று வந்தன. குறித்த சந்தையின் பெயர் மாற்றப்படுவதால் மக்கள் மத்தியில் இயல்பற்ற சூழல் ஏற்படும் என்று மனுதாரர் குறிப்பிட்டிருந்தார்.


சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2443 திகதி 13.07.2013

ஆங்கில எழுத்து: Q

வெற்றி எண்கள்: 10 24 65 67 போனஸ் இல: 14

ஜக்பொட் பரிசு ரூ. 15,314,775/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 255155 | 20/- | 5,103,100/- |
| 2 இல | 18176 | 100/- | 1,817,600/- |
| 3 இல | 388 | 1,000/- | 388,000/- |
| 4 இல | 02 | 1,000,000/- | 2,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 10378 | 40/- | 415,120/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 717 | 1,000/- | 717,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 16 | 10,000/- | 160,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 15,314,775/- | - |
| 1 இல + போனஸ் இல | 12209 | 100/- | 1,220,900/- |
| 2 இல + போனஸ் இல | 558 | 500/- | 279,000/- |
| 3 இல + போனஸ் இல | 05 | 100,000/- | 500,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 484 | 200/- | 96,800/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 34 | 1,500/- | 51,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 298122 | | 12,748,520/- |

ஊதா நிற டிக்கட்டுகள் 2013 ஜூலை 17 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 16,011,275/-

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை. யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

(C/2942)


## கஞ்சாவுடன் கைதான இருவருக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)
இளவாலைப் பகுதியில் கஞ்சா போதைப் பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட இரு சந்தேக நபர்கள் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் மல்லாகம் நீதவான் முன்னிலையில் நேற்று முன்தினம் ஆஜர் படுத்தப்பட்ட வேளையிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

கைதான சந்தேகநபர்களிடமிருந்து 38.652 கிலோகிராம் கஞ்சா போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்டவர்களில் பெண்ணொருவரும் அடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மிதிபலகையில் பயணிப்போரால் பயணிகளுக்கு இடையூறு

(அச்சுவேலி)
யாழ்ப்பாணத்தில் சேவையில் ஈடுபடுகின்ற இ.போ.ச. பஸ்கள் சிலவற்றில் நடத்துநரைத் தவிர வேறு நபர்கள் பேருந்தின் மிதிபல்கையில் நின்று பயணம் செய்வதனால் பேருந்தில் ஏறும் போதும் பேருந்திலிருந்து இறங்கும்போதும் பயணிகள் தாம் பல்வேறு அசௌகரி யங்களை எதிர்நோக்குவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக வயோதிபர்கள் மற்றும் கைக்குழந்தையுடன் வருவோர், நோயாளர்கள் எனப் பலரும் இவ்வாறு மிதிபலகையில் பயணம் செய்வோரால் பல்வேறு இடையூறுகளைச் சந்திப்பதாக தெரிவிக்கின்றனர்.

அத்துடன் பயணிகள் அதிகமான வேளைகளிலும் இவ்வாறான செயற்பாடுகள் அதிகம் இடம்பெறுவதாகவும் பயணிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

எனவே நடத்துநரைத் தவிர எவரையும் பயணிகளுக்கு இடையூறான விதத்தில் மிதிபலகையில் நின்று பயணம் செய்வதை தடுத்து பயணிகள் சிக்கலின்றி பேருந்தில் ஏறி இறங்குவதற்கு வகை செய்ய வேண்டும் என பேருந்து சாரதிகளையும் நடத்துநர்களையும் பயணத்தில் ஈடுபடும் பல்வேறு தரப்பினரும் கேட்டுக் கொண்டுள்ளனர். (85)

# உரிமைகளை பறிப்பவர்கள் யார்? அவர்களை மரத்துடன் கட்டுங்கள்

## யாழ்ப்பாணத்தில் மேர்வின்



"மக்களின் உரிமையில் தலையிடுபவர்களை மரத்தில் கட்டிவையுங்கள். நான் அவர்களைப் பார்த்துக்கொள்கிறேன்" என மக்கள் தொடர்பாடல அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்தார்.

யாழ். நாவாந்துறைப் பகுதியில் சுதந்திரக் கட்சியின் அலுவலகத்தினை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்து உரையாற றிய அவர் " முஸ்லிம் பெண்கள பர்தா அணிவதைத் தடை செய்ய வேண்டும். என்று சிலர் கோரிக்கை விடுத்துள்ளனர். மக்களின் உரிமையில் தலையிடுவற்கு பௌத்த துறவிகளுக்கும் ஏனைய மதத் தலைவர்களுக்கும் அதிகாரம் கிடையாது.

நாட்டில் நடைபெற்ற யுத்தத்தினால் எம்மை விட அதிகமான பாதிப்புக்களை எதிர்கொண்டவர்கள நீங்கள் யுத்தம் முடிந்து தற்போது மீள்குடியேற்றம் செய்யப்பட்டு மக்கள் அபிவிருத்தியின் பலனை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த அபிவிருத்தி இங்கு வாழும் மக்களுக்கே தவிர மாவை சேனாதிராசாவிற்கு அல்ல பல உயிர்களை காவுகொண்ட மாவை சேனாதிராஜா, இரா சம்பந்தன் போன்றோர்களை இல்லாது ஒழித்து மக்கள் இந்தப் பிரதேசத்தின் அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்யவேண்டும்.

இதயம் இல்லாத வேலுப்பிள்ளை பிரபாகரன் தமிழ் மக்களுக்கு ஜாதி, மதத்தினை போதித்து மனிதர்களின் உயிர்களை காவுகொண்டார். அத்துடன் துரையப்பா முதல் நீலம் திருச்செல்வம் வரையானவர்களின் உயிர்களையும் பறித்தார்கள். அந்த சந்தர்ப்பத்தில் தான் இந்த நாட்டின் முப்படைகளும் தமிழ் மக்களின் உயிர்களை விடுதலைப்புலிகளிடம் இருந்து மீட்டாரர்கள்.

யுத்தத்தினால், இழந்தவற்றின்ன மீண்டும் பெற்றுக் கொடுக்கும் நோக்குடனேயே கல்வியிலும் செல்வத்திலும் இந்தப் பகுதி மக்களை இணைத்துக் கொள்வதற்கு ஜனாதிபதி பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றார்.

நான் களனிப் பிரதேசத்தைச் சேர்ந்தவன். இங்கு வாழும் மக்களுக்கு பணியாற்ற அதிகம் விருப்பம் கொண்டுள்ளேன். ஜனாதிபதி விரும்பினால் நான் யாழ்ப்பாணத்திற்கு வந்து மக்களுக்கு சேவையாற்ற தயாராக இருக்கின்றேன்.

இங்கு வாழும் 6000 முஸலிம் மக்களும் ஜனாதிபதியை நம்புங்கள். அவர் தேவையான அனைத்து வசதிகளையும் ஏற்படுத்தி தருவார். என்று தெரிவித்தார்.

# ஒளித்தெறிப்புக் கற்கள் பொருத்தும் பணி துரிதம்



(யாழ்ப்பாணம்)

ஏ9 நெடுஞ்சாலைகளின் அபிவிருத்திப்பணிப்பாளர்களின் ஒருகட்டமான வீதிகளுக்கான ஒளிதெறிப்புக் கற்கள் பொருத்தும் பணிகள் துரித கதியில் நடைபெற்று வருகின்றன.

தற்போது மஞ்சட் கடவைகளுக்கான ஒளிதெறிப்புக் கற்கள் பொருத்தும் பணிகள் பூர்த்தியான நிலையில் வீதி நடுப்பகுதியில் வெள்ளக் கற்கள் வேலைகள் தற்போது நாவற்குழியில் நடைபெற்று வருகின்றது. போக்கு-வரவு பாதையை இரவு வேளைகளில் துல்லியமாக சாரதிகளுக்கு வெளிக்காட்டுவதற்கு ஏதுவாக இந்தக் கற்கள்அமைவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் சாரதிகள் சரியான வழிமுறைகளைக் கையண்டு வாகனம் செலுத்த முடியும். அத்துடன் விபத்துக்களை பெருமளவு தவிர்க்க முடியும் எனவும் சாரதிகள் பலரும் கருத்துக்கள் தெரிவித்துள்ளனர். (இ)

# சீராகியது பஸ்சேவை பயணிகள் சிரமம் நீங்கியது



யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து மாலை 6.45 இற்கு பருத்தித்துறை நோக்கிப் புறப்படும் 51 இலக்கப் பேருந்துச் சேவையானது தற்போது குறித்த நேரத்துக்கு இடம்பெறுவதாக பயணிகள் மகிழ்ச்சி தெரிவிததுள்ளனர்.

எனினும் கடந்த சிலதினங்களுக்கு முன்னர் இந்தச் சேவையானது நேரம் தவறியே இடம்பெற்றதாகவும் தற்போது உரிய நேரத்துக்கு இடம்பெறுவதால் அரச தனியார் துறைகளில் பணி புரியும் தாம் அலுவலகப் பணிகளை முடித்துக்கொண்டு இந்தப் பேருந்தில் பயணித்து உரிய நேரத்திற்கு தமது இடங்களுக்கு செல்லக்கூடியதாக இருப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் தனியார் பேருந்துகளில் செல்வதை விட இ.போ.ச பேருந்துகளில் தாம் செல்வதால் நேர விரயம் தவிர்க்கப்பட்டு வருவதாகவும் பயணிகள் தெரிவிக்கின்றனர். (85)

# மஹோற்சவம்

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 7 ஆம் திகதி கொடியேற்றத்துடள் ஆரம்பமாகி திருவிழா சிறப்பாக நடைபெற்று வருகிறது. திருவிழா தொடர்ந்து 16 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரதோற்சவமும் மறுநாள் 22 ஆம் திகதி திங்கட் கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (10)

# கதைசொல்லும் உடப்பு" நூல் வெளியீட்டு விழா

மூத்த ஊடகவியலாளரும், எழுத்தாளருமான உடப்பூர் வீரசொக்கன் எழுதிய "கதை சொல்லும் உடப்பு" நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு உடப்பு ஶ்ரீ திரௌபதையம்மன் ஆலய" அரங்க மேடையில் நடைபெறவுள்ளது.

உடப்பு இந்து ஆலய பரிபாலன சபைத் தலைவர் வை.சிவநாதன் கலாபூசணம் மு.சொக்கலிங்கசாமி ஆகியோரின் இணைத்தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கந்தசாமி. தெட்சணாமூர்த்தி திறந்த பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் வ.சிவயோகதாச சிறப்பு விருந்தினராக வடமேல் மாகாண இந்து கலாசார ஒன்றியத் தலைவர் ஆறுமுகம் கனகரெத்தினம் வர்த்தகப்பிரமுகர் கா. மகாலிங்கம் ஆகியோர். கலந்துகொள்கின்றனர்.

நூலின் ஆய்வுரையை கலாபூசணம் கி.ஶ்ரீஸ்கந்தராசாவும், நயவுரையை ஆசிரியர் ஆகியோர் ச.கோபாலும், மதிப்புரையை சலாபூசணம் மு.சொக்கலிங்க சாமியும் அறிமுக உரையை சிரேஷ்ட விரிவுரையாளர் வ.சிவயோகதாசனும் நிகழ்த்துவர். ஓய்வுநிலை அதிபர் எஸ்.கேசவமூர்த்தி வரவேற்புரையை உடப்பூர் வீரசொக்கன் ஏற்புரையும் நிகழ்த்துவர். (10)

# விஞ்ஞான தொழில்நுட்ப கற்கை நெறி வேலணையில் இன்று ஆரம்பம்

(யாழ்.நிருபர்)

கல்விப் பொதுதராதர உயர்தர மாணவர்களுக்கான தேசிய ரீதியிலான விஞ்ஞான தொழில் நுட்பத்துறை வகுப் பிற்கான அங்குரார்ப்பன நிகழ்வு வொன்று இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணியளவில் வேலணை மத்திய கல்லூரியில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வு விஞ்ஞான தொழில் நுட்பத்துறை பொறுப்பாசிரியர் ந.வாகீசன் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தீவக கல்வி வலயப் பணிப்பாளர் தி.ஜோன் குயின்ரஸ் கலந்து தொழில் நுட்பத் துறையினை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

விஞ்ஞான தொழில்நுட்ப பாடத்தினை கற்றுக்கொள்ள விருமபுகின்ற மாணவர்கள் அனைவருக்கும் விடுதி வசதிகள் உணவு என்பன இலவசமாக கொடுக்கப் படவிருக்கின்றன.

எனவே மாணவர்களை உடனடியாக வேலணை மத்தியகல்லூரி அதிபர் சி.கிருபாகரனுடன தொடர்பு கொண்டு தங்களது பதிவுகளை மேற்கொள்ளலாமென தெரிவிக்கப்படுகின்றது. (105)

# சிறுவர் நன்னடத்தை திணைக்களத்தில் போதனாசிரியர் பதவிக்கு வெற்றிடம்

(யாழ்.நிருபர)

சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சின் கீழ் இயங்கும் நன்னடத்தை சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தினால் முறைசாராக் கல்விப் போதனாசிரியர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இந்தப்பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் கல்விப் பொதுத தராதர சாதாரணதரப் பரீட்சையில் தமிழ், கணிதம் உட்பட 4 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 6 பர்டங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

நேர்முகப் பரீட்சையில் உச்சப்புள்ளிகளைப் பெறுவோர் இந்தப் பதவிக்குச் சேர்த்துக் கொள்ளப்படுவர். இந்தப் பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன்னர் ஆணையாளர், சிறுவர் நன்னடத்தைப் பராமரிப்பு சேவைகள் திணைக்களம், இல.69. எஸ்.டி.எஸ் ஜெயசிங்க மாவத்தை கொஹீவளை நுகேகொடை என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாமென மேற்படி திணைகள ஆணையாளர் தெரிவித்துள்ளார் (10)



பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் அபிவிருத்தி செய்யப்பட்டு வரும் சாந்தை சிற்றம்பலம் வித்தியாசாலையின் அபிவிருத்திப் பணிகளை ஈ.பி.டி.பி.யின் மானிப்பாய் பிரதேச அமைப்பாளர் அன்ரன் ஜோன்சன் (ஜீவா) மரம் நாட்டி ஆரம்பித்து வைப்பதைக் காணலாம் (54)

மனிதனை மனிதனாக்குபவை உதவிகளும் வசதிகளுமல்ல. இடையூறுகளும் துன்பங்களுமே. - மாத்யூஸ்.

தினமுரசு THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## மாவையாருக்கு ஏன் இந்த ஆப்பு?

தேர்தலுக்குத் தேர்தல் தமிழ்மக்களின் ஒற்றுமையை வலியுறுத்தியும், இல்லாவிட்டால் சர்வதேசம் வராது என்று பயமுறுத்தியும் வாக்குகள் கேட்டுவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, வட மாகாணத்துக்கான முதல்வர் வேட்பாளரை அறிவிப்பதில் தங்களுக்கிடையே ஒற்றுமை ஏற்பட முடியவில்லை என்பதைக் காட்டியிருப்பது, 'ஊருக்குத்தான் உபதேசம் நமக்கு வேறு சுய லாபம்' என்ற அவர்களது சொந்த அரசியல் பாணியை சூனியம் வைத்துக் காட்டியதுபோல் ஆகிவிட்டது.

எம்.பி. பதவியென்றால் ஏதோ ஐந்தாறு பதவிகளேனும் வரும் என்பதால் பங்கு பிரித்து எடுத்துக் கொண்டுவிடலாம்; முதலமைச்சர் பதவியோ ஒன்றே ஒன்றுதான் என்பதால் யாருக்கு அது என்பதில் சண்டை வந்துவிட்டது. 'நீ கொஞ்சக் காலத்துக்கு முதலமைச்சர் நான் கொஞ்சக் காலத்துக்கு முதலமைச்சர்' என்று பதவியைத் தங்களுக்குள் பங்கு பிரித்துக் கொள்வதில் குறியாயிருக்கிறார்களே தவிர, மக்களுக்குத் தீர்வை எடுத்துத் தர என்ன செய்யப் போகிறார்கள் என்ற கதையே அவர்களிடமிருந்து இல்லை.

வழக்கம் போல, "தீர்வை வைக்க வேண்டியது அரசின் வேலை; அவர்கள் அதை வைக்கப் போவதில்லை; அவர்களை மிரட்டுவதற்கு சர்வதேசம் வரவேண்டும்; அதற்கு நீங்கள் ஒற்றுமையாக வாக்குகளை அள்ளித் தரவேண்டும்" என்று மைக்கைப் பிடித்து உணர்ச்சிகரமாகப் பேசிவிட்டால் மக்கள் வாக்குகளை அள்ளிப் போட்டுவிடுவார்கள் என்பதில் நம்பிக்கையோடிருக்கிறார்கள்.

மக்களும், கடந்த நான்கு வருடமாய் நடந்த மூன்று தேர்தல்களில் வாக்குக் கேட்டு வந்தபோதும் இதைத்தானே உறுதிபடச் சொன்னார்கள்; அந்தத் தேர்தல்கள் முடிவிலெல்லாம் சர்வதேசம் வந்துவிடவில்லை; இந்தத் தேர்தல் முடிந்தால் மட்டும் எப்படி வரும் என்றெல்லாம் கூட்டமைப்பினர் நம்பிக்கை. அந்த மாதிரியெல்லாம் இவர்களது ஏமாற்றை மக்கள் யோசிக்கவிடாமல் திசைதிருப்பி கோபத்திலும் வெறுப்பிலும் கொந்தளிக்க வைத்து வாக்குகளை அள்ளிவிடும் தந்திரம் அவர்களிடம் உண்டு.

காணிபறிப்புப் பிரச்சினை, இராணுவம் முழுதாய் வெளியேறாமலிருக்கும் பிரச்சினை, வடக்கு கிழக்கு விரைவில் சிங்களக் குடியேற்றங்களால் நிரம்பப் போகிறது போன்ற உணர்ச்சிகரப் பயமுறுத்தல்களை மேடைகளில் பேசி, மக்கள் ஒற்றுமையாய் வாக்களித்தால் இவைகளைத் தடுத்துவிடலாம் என்ற பிரமையை ஊட்டிவிடுவார்கள். பிறகு தடுக்காமல் போனாலும், அதற்கான முழுப்பழியும் அரசுதான் என்று அரசவெறுப்பை மேலும் வளர்த்துத் தாங்கள் எந்தத் துரும்பையும் அசைக்காமலே வழக்கம்போல தப்பிக்கொண்டுவிடலாம் என்பதும் அவர்களுக்கு நன்கு தெரியும்.

அறுபது வருடங்களுக்கும் மேலாக மக்களுக்கு இதேவிதமாக மிளகாய் அரைத்தரைத்து மக்கள் தேய்ந்தழிய தாங்கள் மட்டுமே வென்றுவரும் அப்புக்காத்து மூளைகளல்லவா? அப்புக்காத்து மூளை என்றவுடன் ஞாபகம் வருகிறது. முதல்வர் கனவிலிருந்து மாவையாரை இறக்கி முன்னாள் நீதியரசரை ஏற்றுவதற்கு தலைவர் சம்பந்தன் பிரயோகித்த அஸ்திரமும் இந்த "படித்தவர்" ஒருவர் முதல்வராக வேண்டும் என்பதுதான்.

உள்நாட்டு - சர்வதேச சட்டங்கள் தெரிந்த, நல்ல இங்கிலீஷ் தெரிந்த, சர்வதேசத்தை மடக்கக் கூடிய புத்திஜீவி ஒருவரே வடக்கிற்கு முதல்வராக வேண்டும் என்றுதானாம் மாவைக்கு ஆப்பு வைக்கப்பட்டிருக்கிறது. அப்படியானால் இதற்கு மிகப் பொருத்தமாய் சட்டவல்லுனரான மேல்நாட்டு வெள்ளைக்காரர் ஒருவரையே முதல்வர் வேட்பாளராக அறிவித்திருக்கலாம் என்பது ஒருபுறமிருக்க, மாவையார் இதற்குத் தகுதியில்லாத மக்குத்தான் என்பதை எப்படி தமிழரசுக் கட்சியினரும் மாவையாரும் ஒப்புக்கொள்கிறார்கள் என்பதே பெரிய விநோதம்! - ஆசிரியர்

# கட்டுமீறுகிறது திருடர் தொல்லை
# தடுத்து நிறுத்துவது யார்?

## யாழ். குடாவின் இன்றைய யதார்த்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் அண்மைக் காலமாக வழிப்பறிச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதால் மக்கள் அச்சத்துடன் தமது பயணங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

கடந்த வாரம் தனது கடையைப் பூட்டிவிட்டு இரவுவேளை மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்த வர்த்தகர் ஒருவரை நாயன்மார்கட்டு குளத்தடியில் வழிமறித்த இரண்டு இளைஞர்கள் அவரைத் தள்ளி விழுத்தி தாக்கிவிட்டு அவரிடமிருந்த கைப்பையை அபகரித்துச் சென்றுள்ளனர்.

கைப்பையினுள் இருந்த 68 ஆயிரம் ரூபா பணம் வங்கிக் கடன் அட்டை, தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம், மோட்டார் சைக்கிள் வரிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம், மூக்குக் கண்ணாடி, கடைத்திறப்பு என்பன கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

குறித்த திருடர்கள் கடன் அட்டையைப் பயன்படுத்தி பொருட்கொள்வனவில் ஈடுபட்டபோது கைது செய்யப்பட்டுள்ளதாகவும், இது குறித்து தற்போது யாழ். பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுவருவதாகவும் குறித்த வர்த்தகர் எம். செல்வநாதன் தெரிவித்தார்.(10)

# அதிபர் பற்றாக்குறையுடன் இயங்கும் 36 தேசிய பாடசாலைகள்

பல வருட காலமாக 36 தேசிய பாடசாலைகள் அதிபர் பற்றாக்குறையுடன் இயங்கி வருவதாகவும் அப் பாடசாலைகளுக்கான அதிபர் நியமனம் குறித்து கவனம் செலுத்தியுள்ளதாகவும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இன்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் குறித்த பாடசாலைகளுக்கான அதிபர் நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் கோத்தபாய ஜயரத்ன தெரிவித்தார்.

நாடு முழுவதிலுமுள்ள தேசிய பாடசாலைகளுக்கான அதிபர் பற்றாக்குறை தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார். இந்நிலையிலேயே அதிபர் பற்றாக்குறை நிலவும் பாடசாலைகளுக்கான அதிபர் நியமனம் தொடர்பில் நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் கூறினார்.

இதேவேளை பாடசாலை அதிபர்களினால் மேற்கொள்ளப்படும் லஞ்ச ஊழல் மோசடி குறித்து விசாரணை நடவடிக்கைகள் கடுமையாக்கப்பட்டுள்ளதாக கோத்தபாய ஜயரத்ன குறிப்பிட்டார்.

பண மோசடி உள்ளிட்ட பல குற்றச் செயல்கள் தொடர்பில் நாட்டின் பல பாடசாலைகளின் அதிபர்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். இதன்போது அதிபர்கள் குற்றவாளிகள் என இனங்காணப்பட்சத்தில் அவர்கள் தமது பதவிகளை இழக்க நேரிடும் என கல்வி அமைச்சின் செயலாளர் கோத்தபாய ஜயரத்ன குறிப்பிட்டார்.

# கணக்காளர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்.நிருபர்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் கிளிநொச்சி மாவட்டத்தில் கடமையாற்றுவதற்காக உதவிக் கணக்காளர் பதவிக்கான விண்ணப்பத்தைக் கோரியுள்ளது.

ஒப்பந்த அடிப்படையிலான இப்பதவிக்கு தகுதியான விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 23 யூலை 2013 இற்கு முன்னதாக பணிப்பாளர் நாயகம், இலங்கை செஞ்சிலுவைச்சங்கம், 104, தர்மபால மாவத்தை, கொழும்பு -7 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிட்டு இலக்கத்துடன் குறிப்பிடுதல் வேண்டும். (10)

## மஹோற்சவம் ஆரம்பம்

(யாழ்.நிருபர்)

வரலாற்றுச் சிறப்பு மிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவம் கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகி திருவிழா சிறப்பாக நடைபெற்று வருகிறது.

இம் மஹோற்சவ தினங்கள் 25 நாட்களும் வலி.வடக்கு தெல்லிப்பழைப் பிரதேச செயலக கலாசார பேரவையின் ஒழுங்கமைப்பில் வலி.வடக்கு பிரதேசத்தில் செயற்படுகின்ற மன்றங்கள் மற்றும் கழகங்களின் ஏற்பாட்டில் முற்பகல் 11.00 மணி தொடக்கம் 12.00 மணி வரை ஆலயத்தில் கூட்டுப்பிரார்த்தனை நிகழ்வுகள் நடைபெறவுள்ளதாக வலி.வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் எஸ்.தட்சாயினி தெரிவித்துள்ளார்.(10)

## பூநகரியில் அங்குரார்ப்பணம்

(பூநகரி)

கல்விப் பொதுத்தராதர சாதாரணதர மாணவர்களுக்கான தொழில்நுட்பப்பாட அங்குரார்ப்பண நிகழ்வு பூநகரியில் இன்று நடைபெறவுள்ளது.

பூநகரி மகாவித்தியாலயத்தில் இன்று காலை 9.00 மணியளவில் இந்த அங்குரார்ப்பண நிகழ்வு இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.சந்திரகுமார் பிரதம விருந்தினரா கக் கலந்து கொள்ளவுள்ளார்.(112)

# பூநகரியில் காணி சுவீகரிப்பு
## மாற்றுக் காணி வழங்கவும் ஏற்பாடு

(பூநகரி)

பூநகரிப் பகுதியில் நிலைகொண்டிருக்கும் 66 ஆவது படைப்பிரிவினர் பூநகரி பழைய மருத்துவமனைக் கட்டடத்தைச் சூழவுள்ள தனியாருக்குச் சொந்தமான 12 காணித் துண்டுகளை சுவீகரிக்கவுள்ளனர்.

இதன் ஆரம்பகட்ட நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

இவ்விடயம் குறித்து கிளிநொச்சி மாவட்ட காணி அலுவலர் மற்றும் பூநகரியில் நேர காணிப்பயன்பாட்டு உத்தியோகத்தர், கிராம அலுவலர் ஆகியோர், அண்மையில் மேற்படி காணி உரிமையாளர்களுடன் கலந்துரையாடியுள்ளனர்.

இக்காணிச் சொந்தக்காரர்களுக்கு வேறுபகுதிகளில் காணி வழங்குவதற்கும் இப்போது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. (112)

# விஞ்ஞானப் போட்டிகள் ஒத்திவைப்பு

(அச்சுவேலி)

யாழ்ப்பாணம் கல்வி வலயத்தின் விஞ்ஞானக் கல்விப் பிரிவினால் தரம் 6 முதல் தரம் 11 வரையான மாணவர்களுக்கு நடாத்தப்படவிருந்த கோட்ட மட்ட மற்றும் வலயமட்ட விஞ்ஞானப் போட்டிகள் தவிர்க்க முடியாத காரணத்தால் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட தினத்தில் இடம்பெறாது எனவும், மேற்படி போட்டிகள் யாவும் ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்த கால அட்டவணைக்கேற்ப 07.09.2013 சனிக்கிழமை இடம்பெறும் என விஞ்ஞானக் கல்விப் பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாளரினால் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டிகள் தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் நடைபெறவுள்ளதுடன் யாழ்ப்பாண வலயப் பாடசாலைகளுக்கு யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையிலும், நல்லூர் கோட்டப் பாடசாலைகளுக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும், கோப்பாய் கோட்டப் பாடசாலைகளுக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும் நடைபெறவுள்ள அதேவேளை அனைத்து வகுப்புக்களுக்குமான ஆங்கில மொழி மூலமான போட்டிகள் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையிலும் இடம்பெறவுள்ளது. (03)

# 13ஆவது திருத்தம் இந்தியாவால் பலவந்தமாகத் திணிக்கப்பட்டதா?

**களனிப்பிரியன்**

இலங்கை அரசியல் சாசனத்தின் 13ஆவது திருத்தம் பற்றிய சர்ச்சைகள் தற்போது சூடு பிடித்துள்ளது. இலங்கை அரச படைகளுக்கும் தமிழ் போராளி குழுக்களுக்கும் இடையே யுத்தம் உச்ச கட்டத்தை அடைந்து, அப்போதைய (1987) ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசு தமிழ் போராளிக் குழுக்களை அழித்தொழிக்கக்கூடிய ஒரு நிலை உருவான போதுதான், அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி தலைமையிலான காங்கிரஸ் அரசாங்கம் அதில் தலையிட்டது.

இலங்கையுடன் இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டது. அந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் இலங்கையின் அரசியல் சாசனத்தில் 13ஆவது திருத்தம் மேற்கொள்ளப்பட்டு மாகாணசபை முறைமை கொண்டு வரப்பட்டது. அந்த ஏற்பாட்டைச் செய்யும் பொழுது, சிங்கள இனவாதிகளால் வரக்கூடிய எதிர்ப்புகளைச் சமாளிக்கும் பொருட்டு, வடக்கு கிழக்கிற்கு மட்டுமின்றி, இலங்கையின் 9 மாகாணங்களுக்கும் மாகாண சபை முறைமை ஏற்படுத்தப்பட்டது. இந்த மாகாண-சபை முறைமை சமஸ்டி முறை அளவுக்கோ அல்லது பிராந்திய சுயாட்சி முறை அளவுக்கோ ஏற்ற அளவு அதிகாரப் பகிர்வைக் கொண்டிராத போதிலும், பூரண அதிகாரப் பகிர்வுக்கான முதல்படியாக அமைந்தது என்பதில் சந்தேகம் இல்லை.

இந்த 13ஆவது திருத்தம் இலங்கை மீது இந்தியாவால் பலவந்தமாகத் திணிக்கப்பட்டது என, இன்று சிங்கள இனவாதிகள் மட்டுமின்றி, இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவே பகிரங்கமாகக் குற்றம் சாட்டுகிறார்கள். அவர்கள் சொல்வதில் ஓரளவு உண்மையில்லாமலும் இல்லை.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் உருவான போதே, ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசின் பிரதமர் ஆர்.பிரேமதாச, பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி உட்பட பல ஐ.தே.க தலைவர்கள் அதைத் தீவிரமாக எதிர்த்தனர். அதுமட்டுமல்லாமல் அப்போது எதிர்க்கட்சியாக இருந்த சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான சிறீலங்கா சுதந்திரக் கட்சி, ரோகண விஜேவீர தலைமையிலான ஜே.வி.பி என்பனவும் கடுமையாக எதிர்த்தன.ஜே.வி.பி. ஐ.தே.க அரசுக்கெதிராக ஆயுதக் கிளர்ச்சியிலும் ஈடுபட்டது. இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வந்த இந்தியப் பிரதமருக்கு வழங்கப்பட்ட இராணுவ மரியாதை அணிவகுப்பின் போது, இலங்கை சிப்பாய் ஒருவன் தனது துப்பாக்கிப் பிடியால் ராஜீவைத் தாக்கிக் கொலை செய்யவும் முயன்றான். எனவே அப்போதுமே இந்த 13ஆவது திருத்தத்துக்கு சிங்கள அரசியல் சக்திகளின் ஒரு கணிசமான பிரிவினரிடையே எதிர்ப்பு இருந்தது என்பது உண்மையே.

மறுபக்கத்தில் இந்த ஒப்பந்தம் காரணமாக புலிகளைத் தவிர ஏனைய தமிழ் போராளிக் குழுக்கள் ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டு, ஆயுதங்களை ஒப்படைத்த போதிலும், புலிகள் ஆயுதப் போராட்டத்தைத் தொடர்ந்ததுடன், தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு வழங்கிய அந்த ஒப்பந்தத்தை எதிர்த்த பிரேமதாசவுடன் இணைந்து இந்திய அமைதிப்படைக்கு எதிராகப் போர் செய்ததுடன், இந்திய அமைதிப் படையை பிரேமதாச அரசின் மூலம் இலங்கையிலிருந்து வெளியேற்றி, ஒன்றிணைந்த வடக்கு கிழக்கு மாகாண-சபையையும் கலைக்க வைத்தனர். பின்னர் அவர்கள் பிரேமதாச அரசு உட்பட அதன் பின் வந்த எல்லா அரசுகளுடனும் யுத்தம் புரிந்து, கடை-சியாக மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் 2009இல் முற்றுமுழுதாக அழிந்தும் போயினர்.

13ஆவது திருத்தத்தை இந்தியா இலங்கை மீது திணித்தது என்று சொல்பவர்கள், ஏன் அந்த நிலை உருவானது என்பதை ஆராய்ந்து பார்ப்பது அவசியம். அரசியல் ரீதியாகத் தீர்வு காணப்பட வேண்டிய தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு, ஜே.ஆர். அரசு இராணுவ ரீதியாகத் தீர்வுகாண முற்பட்டதே.தமிழ்இளைஞர்களை ஆயுதம் தாங்கவும், இந்தியா அதில் தலையிடவுமான ஒரு சூழ்நிலையை உருவாக்கியது. அத்துடன் அமெரிக்க - சோவியத் பனிப்போர் நிலவிய அந்தக் காலகட்டத்தில், இந்தியா சோவியத் யூனியனின் ஒரு நெருங்கிய நட்பு நாடாக இருந்த சூழலில், பிரசித்தி பெற்ற அமெரிக்க விசுவாசியான ஜே.ஆர்.ஜெயவர்த்தன இந்தியாவுக்கு விரோதமாக இலங்கையை அமெரிக்க நவ காலனியாக எடுத்த முயற்சியே நிலைமையைச் சிக்கலாக்கியது.

ஆனால் ராஜீவ்காந்தி மேற்கொண்ட நடவடிக்கைகள் இலங்கை மீது ஓரளவு நிர்ப்பந்தம் செலுத்தியதாக இருந்தாலும், மறுபக்கத்தில் தமிழ் போராளிக் குழுக்கள் இந்திய ஆதரவுடன் ஆயுதப் போராட்டத்தைத் தொடர்ந்து நடாத்தி இலங்கையில் தமிழர்களுக்கென்று ஒரு தனிநாட்டை உருவாக்குவதைத் தடுத்தது.

உண்மையில் இந்த நிலைமையை உருவாக்கிய ராஜீவ் காந்திக்கு இலங்கை நன்றி தெரிவிப்பதுடன், அவரது அணுகுமுறையைப் பற்றிப் பிடித்து இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டிருக்க வேண்டும். இலங்கை அவ்வாறு செய்திருந்தால், இல்ங்கையில் அதன் பின்னர் தொடர்ந்த கொடூர யுத்தத்தைத் தடுத்து நிறுத்தியிருக்கலாம். புலிகளும் 20 ஆண்டுகளுக்கு முன்னரே செயல் இழந்து போயிருப்பர்.

ஆனால் இப்பொழுது 13ஆவது திருத்தத்தை இந்தியா இலங்கை மீது திணித்தது எனச் சொல்பவர்கள் கடந்த 26 வருடங்களாக அதை ஏன் சொல்லவில்லை என்ற கேள்வி இங்கு எழுகின்றது. அந்தத் திருத்தத்தை கொண்டு வந்தபோது எதிர்த்த ஐ.தே.கவின் ஒரு பிரிவினர், சிறீ.ல.சு.க, ஜே.வி.பி என்பன கடந்த 26 ஆண்டுகளாக மாகாண-சபைத் தேர்தல்களில் போட்டியிட்டு, முதலமைச்சர், அமைச்சர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் பதவிகளையும், அவற்றுக்கான சம்பளம், சலுகைகள் என்பவற்றையும் தாராளமாக அனுபவித்து வந்துள்ளனர். அப்படியெல்லாம் செய்துவிட்டு, வட மாகாணசபைக்கு தேர்தல் நடாத்தப்பட இருக்கும்வேளையில் மட்டும் 13ஆவது திருத்தத்தில் திருத்தங்கள் செய்ய வேண்டும் என ஒரு சாராரும், அந்த சட்ட மூலத்தையே முற்றுமுழுதாக இல்லாமல் செய்ய வேண்டும் என ஒரு சாராரும் கூச்சல் போடுவதின் காரணம் என்ன? அவர்கள் கூறுவதின்படி 13ஆவது திருத்தச் சட்டத்தை அப்படியே வைத்துக் கொண்டு வட மாகாணசபைத் தேர்தலை நடாத்தினால், அதைக் கைப்பற்றக்கூடிய நிலையில் இருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, வட மாகாணத்தை தனி நாடாக்கி விடும் என்ற வாதம் உண்மையானதா? இலங்கை அரசின் சட்ட திட்டங்களையும், இராணுவ பலத்தையும் மீறி வடக்கில் பெறும் ஒரு தேர்தல் வெற்றியை வைத்துக்கொண்டு தனி நாடொன்றை அமைக்கும் பலம் வெறும் வாய்ச்சவடால்காரர்களான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இல்லை என்பது சிறு குழந்தைக்குக்கூடத்தெரியும்.



அரசாங்கம் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நியாயமான ஒருதீர்வைக் காணுமாக இருந்தால்,வடமாகாண சபையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றும் என்ற பேச்சுக்கேகூட இடமில்லை. அப்படியிருக்க தமிழ் தேசியக் கூட்டமைப்பு வடக்கு மாகாணத்தை தனிநாடாக்கி விடும் என்ற சிங்கள இனவாத சக்திகளின் பிரசாரம் போலியானது மட்டுமின்றி, விசமத்தனமானதும்கூட.

உண்மை என்னவெனில், தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் எண்ணம் இன்றைய அரசுக்கோ அல்லது ஐ.தே.க, ஜே.வி.பி என்பனவற்றுக்கோ இல்லை என்பதுதான் யதார்த்தமான நிலைமை. சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாக இருந்த போது 2000ஆம் ஆண்டில் மாகாண-சபை முறைமைக்குப் பதிலாக ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைத்தார். அது 13ஆவது திருத்தச் சட்டத்தையும்விட கூடுதலான அதிகாரங்களைத் தமிழ் மக்களுக்கு வழங்கியது. ஒற்றையாட்சி முறையை ஒழித்தது. அதையும் ஐ.தே.க, ஜே.வி.பி என்பன நடைமுறைப்படுத்த விடாது தமிழ்த் தலைமையின் உதவியுடன் முறியடித்தன என்பது வரலாறு.

இன்று 13ஆவது திருத்தச் சட்டத்தைத் திருத்த வேண்டும் எனச் சொல்கிற மகிந்த அரசு, சந்திரிகா செய்தது போல, ஏற்கக்கூடிய ஒரு மாற்றுத் திட்டத்தை முன்வைத்துவிட்டு, 13 ஆவது திருத்தத்தைத் திருத்துவதற்கு அல்லது மாற்றுவதற்கு மக்களிடம் அனுமதி கோரினால் அதில் நியாயம் இருக்கும். அதை விடுத்து ஒன்றையும் முன்வைக்காமல், இருக்கிறதையும் இல்லாமல் செய்ய அரசு எடுக்கும் முயற்சி, தமிழ் மக்களை இந்த நாட்டின் பிரஜைகள் என அரசு ஏற்றுக் கொள்ளாததிற்குச்சமம்.

சுதந்திரத்துக்குப் பின்னர் பதவிக்கு வந்த அரசுகள் ஒவ்வொன்றுமே தமிழ் மக்களின்நியாயமான அபிலாசைகளை மறுத்து வந்தது போல, மகிந்த அரசும் அதே தவறைச் செய்யுமாக இருந்தால், இலங்கை இதுவரை காலமும் எதிர்நோக்கிய நெருக்கடிகளைவிட, மோசமான ஒரு நெருக்கடியை எதிர்காலத்தில் எதிர்நோக்கும் நிலை ஏற்படலாம். அப்படி நிகழாமல் மகிந்த அரசு தடுக்குமா என்பதில்தான் இலங்கையின் எதிர்காலம் தங்கியிருக்கிறது.

(வானவில் 30)


> இப்பொழுது 13ஆவது திருத்தத்தை இந்தியா இலங்கை மீது திணித்தது எனச் சொல்பவர்கள் கடந்த 26 வருடங்களாக அதை ஏன் சொல்லவில்லை என்ற கேள்வி இங்கு எழுகின்றது. அந்தத் திருத்தத்தை கொண்டு வந்தபோது எதிர்த்த ஐ.தே.கவின் ஒரு பிரிவினர், சிறீ.ல.சு.க, ஜே.வி.பி என்பன கடந்த 26 ஆண்டுகளாக மாகாண-சபைத் தேர்தல்களில் போட்டியிட்டு, முதலமைச்சர், அமைச்சர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் பதவிகளையும், அவற்றுக்கான சம்பளம், சலுகைகள் என்பவற்றையும் தாராளமாக அனுபவித்து வந்துள்ளனர். அப்படியெல்லாம் செய்துவிட்டு, வட மாகாணசபைக்கு தேர்தல் நடாத்தப்பட இருக்கும் வேளையில் மட்டும் 13ஆவது திருத்தத்தில் திருத்தங்கள் செய்ய வேண்டும் என ஒரு சாராரும், அந்த சட்ட மூலத்தையே முற்றுமுழுதாக இல்லாமல் செய்ய வேண்டும் என ஒரு சாராரும் கூச்சல் போடுவதின் காரணம் என்ன?

# பள்ளிவாசல்களை பாதுகாக்க வேண்டும்

## கோத்தாவிடம் அவசர கோரிக்கை



(கொழும்பு)

மஹியங்கனை பள்ளிவாசல் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு பொருளாதார பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ் தனது கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளதோடு. பள்ளிவாசல்கள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் தொடர்பில் கடும் நடவடிக்கையினை எடுக்குமாறு கோரி பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அவசர கடிதம் ஒன்றையும் அனுப்பிவைத்துள்ளார். கடந்த 20 வருடங்களுக்கு மேலாக மஹியங்கனை அரபாப் பள்ளிவாசல் இடம்பெற்றுவருகிறது.

மேலும் 5 நேரத்தொழுகையும் மிக அமைதியாக யாருக்கும் இடையூறு இல்லாத வகையிலும் இடம்பெற்று வருகிறது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். அப்படிப்பட்ட அப்பள்ளிவாசலையும் அதனுடன் சம்பந்தப்பட்டவர்களையும் இப்புனிதமான றமழான் மாதத்தில் தாக்கியதோடு மட்டுமல்லாது பன்றியின் இரத்தமும் சிந்தச் செய்யப்பட்டுள்ளமையானது இனங்களுக்கிடையில் பிரச்சினைகளை ஏற்படுத்தும் செயலாகும்.

இனங்களுக்கிடையில் முறுகலை ஏற்படுத்தி மீண்டும் நாட்டில் ஒரு இனக் கலவரத்தை ஏற்படுத்தும் இந்த சக்திகளை அடையாளம் கண்டு, அவ்வாறானவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கையினை பெற்றுக் கொடுக்க வேண்டுமென பாதுகாப்பமைச்சின் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவுக்கு அவசரகடிதம் ஒன்றையும் பிரதியமைச்சர் அனுப்பிவைத்துள்ளார்.

பள்ளிவாயில்கள் மீது இவ்வாறான தாக்குதல் இடம்பெறும் வேளையில் இராணுவத்தினரோ பொலிஸாரோ எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பது கடும் கவலையளிப்பதாக தெரிவித்த பிரதியமைச்சர் இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் கவனத்திற்கு பலமுறை தகவல் வழங்கியபோதும் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும், இந்நாசகார சக்திகள் கைது செய்யப்படாமையால் இவ்வாறான தாக்குதல்கள் தொடர்வதாகவும் உடனடியாக இவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என குறிப்பிட்டுள்ள பிரதியமைச்சர் இனிமேலும் பொலிஸார் கண்களை மூடிக்கொண்டு இருக்க வேண்டாம் எனவும் தெரிவித்துள்ளார்.

# நிலுவைகளை செலுத்த திறைசேரி இணக்கம்

சிறீலங்கன் எயார்லைன்ஸ் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு செலுத்த வேண்டிய 25 பில்லியன் ரூபாய்களை தாமே செலுத்த இலங்கையின் திறைசேரி முன்வந்துள்ளது.

இலங்கையின் தேசிய விமான சேவையான சிறீலங்கா எயார்லைன்ஸ் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு 36 பில்லியன் ரூபாய்களை நிலுவையாக செலுத்த வேண்டியிருந்தது.

பல வருடங்களாக இந்த நிலுவை இருந்தபோது எயார்லைன்ஸ் நட்டத்தில் இயங்கியமையால் அதனை செலுத்த முடியவில்லை. இந்தநிலையிலேயே குறித்த 36 பில்லியன் ரூபாய்களில் 25 பில்லியன் ரூபாய்களை திறைசேரி செலுத்தவுள்ளது.

மீதமுள்ள 11 பில்லியன் ரூபாய்களை சிறிலங்கா எயார்லைன்ஸ் செலுத்த உடன்பாடு காணப்படுகிறது.

# தேர்தல் களத்தில் தனித்துப் போட்டி

## "ஈரோஸ்" துணிகர முடிவு

(கொழும்பு)

செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள வடக்கு மற்றும் மத்திய மாகாண சபைத்தேர்தல்களில் ஈழவர் ஜனநாயக முன்னணி (ஈரோஸ்) தனித்துப்போட்டியிடவுள்ளதாக அதன் செயலாளர் நாயகம் இரா.பிரபாகரன் தெரிவித்தார்.

இம்மாகாண சபைத்தேர்தல்களுக்கான வேட்பாளர் தெரிவுகள் நிறைவடைந்துள்ள நிலையில் விரைவில் வேட்பு மனுக்களை தாக்கல் செய்யவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# தெரிவுக்குழுவில் இணைய ஐ.தே.கட்சி ஆவல்

## கூறுகிறார் கிரியல்ல

(கொழும்பு)

13 ஆம் திருத்தச்சட்டம் தொடர்பில் அரசாங்கத்தில் உள்ள அனைத்து கட்சிகளும் ஒரே நிலைப்பாட்டுக்கு வந்தால், தேசிய பிரச்சினைக்கான விசேட நாடாளுமன்ற குழுவில் தாம் பங்கேற்பதாக ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளது.

கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியல்ல இதனைத்தெரிவித்துள்ளார். 13 ஆம் திருத்தச்சட்டம் தொடர்பில் அரசாங்கத்தின் கூட்டு கட்சிகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு நிலைப்பாட்டை வெளிப்படுத்தி வருகின்றன.



இதனால் தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண்பது சாத்தியமற்றது. இந்தநிலையில் அரசாங்கம் தங்களின் கட்சிகளுக்கு இடையிலான நிலைப்பாட்டில் இணக்கப்பாட்டை ஏற்படுத்த வேண்டும் என்று அவர் கோரியுள்ளார்.

# தேர்தலுக்கு முன் படைக்குறைப்பு அரசிடம் கோருகிறார் சுமந்திரன்

(கொழும்பு)

வடமாகாண சபை தேர்தலுக்கு முன்பு இராணுவத்தினர் எண்ணிக்கையை கணிசமாகக் குறைக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையத்திடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தி உள்ளது.

இலங்கையில் தமிழர் வாழும் வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் செப்ரெம்பரில் நடைபெற உள்ளது. 25 ஆண்டுகளுகுப் பின்னர் நடைபெறும் இத்தேர்தல் தொடர்பாக தேர்தல் ஆணையம் அனைத்து கட்சிகளுடனும் ஆலோசனை நடத்தி வருகிறது.



இந்த ஆலோசனையின்போது இராணுவத்தினரின் எண்ணிக்கையை வடக்கில் இருந்து கணிசமாகக் குறைக்க வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளனர்.

இது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பி. சுமந்திரன் கூறுகையில்,

வடக்கு மாகாணத்தில் இராணுவம் குவிக்கப்பட்டுள்ளதால் மக்கள் சுதந்திரமாக நடமாட முடியவில்லை. வரும் செப்ரெம்பரில் தேர்தல் நடைபெற உள்ளதால் அதற்கு முன்னதாக இராணுவ வீரர்களின் எண்ணிக்கையை குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையரிடம் வலியுறுத்தி உள்ளோம்.

ஆனால் அதை தேர்தல் ஆணையம் நிராகரித்துவிட்டது. எனினும், நிர்வாக நடவடிக்கைகளில் இராணுவ த[illegible]யட்டை குறைத்து பொலிஸாரை ஈடுபடுத்த தேர்தல் ஆணையம் உறுதி அளித்துள்ளது என்றார்.

# சுனாமி பேரவலத்துக்கு பொறுப்பு ஏற்பது யார்?

(கொழும்பு)

கடந்த 2004 ஆம் சுனாமி தாக்கம் ஏற்பட்டபோது ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டமைக்கு இலங்கையின் வானிலை அவதான நிலையமே பொறுப்பேற்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ச இந்தக் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார்.

சுனாமி தாக்கம் ஏற்படப்போவதை உணர்ந்த ஹவாய் காலநிலை மத்தியநிலையம் இலங்கையின் வானிலை அவதான நிலையத்துடன் தொடர்பு கொண்டது.

எனினும் இலங்கை வானிலை அவதான நிலையத்தினால் ஹவாய் நிலையத்துக்கு வழங்கப்பட்டிருந்த தொலைபேசி இலக்கங்களில் தொடர்பை ஏற்படுத்தமுடியவில்லை.

இதன் காரணமாக காலை 7.15 மணியளவில் சுனாமி இலங்கையைத் தாக்கி பல உயிர்களை பலியெடுத்தது.இதனை ஆவண ரீதியாக நிரூபிக்க முடியும் என்று விஜயதாஸ ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

# துணைத்தூதரகத்துக்கு ஆபத்து

## பாதுகாப்பு அதிகரிப்பு

(கொழும்பு)

இந்தியாவில் நுங்கம்பாக்கத்திலுள்ள இலங்கை பிரதி உயர்ஸ்தானிகராலயத்திற்கு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. இரண்டு நாட்களுக்கு முன்னர் அச்சுறுத்தும் வகையிலான கடிதமொன்று கிடைக்கப்பெற்றமை தொடர்பில் அதிகாரிகள் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதனைத்தொடர்ந்தே இலங்கை பிரதி உயர்ஸ்தானி கராலயத்திற்கான பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாக இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.



ஐக்கிய தேசியக் கட்சியால் தயாரிக்கப்பட்டுள்ள. உத்தேச புதிய அரசியல் யாப்பு நகல் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்திடம் நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டது. இந்த நிகழ்வு இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைமையகத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்ரமசிங்க, பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான விஜேதாஸ ராஜபக்ஷ, லக்ஷமன் கிரியல்ல மற்றும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தலைவர் உபுல் ஜயசூரிய உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

# மூதூர் படுகொலை விசாரணை இடைக்கால அறிக்கை பூர்த்தி

(கொழும்பு)

மூதூர் தன்னார்வ தொண்டர் படுகொலைச்சம்பவங்கள் குறித்த விசாரணைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

2006 ஆம் ஆண்டில் அக்செய் பெய்ம் என்ற பிரெஞ்சு தன்னார்வ தொண்டு நிறுவனப் பணியாளர்கள் 17 பேர் கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவம் குறித்த விசாரணைகளை மூதூர் காவற்துறையினர் தீவிரப்படுத்தியுள்ளனர்.

உண்மையைக்கண்டறியும் ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய புலனாய்வுப்பிரிவினர் இந்த விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மூதூர் தன்னார்வ தொண்டர் படுகொலைச்சம்பவம் குறித்த விசாரணை அறிக்கை சட்ட மா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவம் குறித்த இடைக்கால விசாரணைகள் உரிய முறையில் நடத்தப்படவில்லை என சர்வதேச ரீதியில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கடன் தொல்லையால் அஞ்ஞாதவாசம் யாழ்.குடாவில் அரங்கேறும் மோசடிகள்

(திருநெல்வேலி)

கல்வியங்காட்டுப் பகுதியைச் சேர்ந்த கணவனும் மனைவியும் கடன் தொல்லை தாங்க முடியாமல் தலைமறைவாகியுள்ளனர்.

கடந்த சில நாட்களாக இவர்கள் வசித்து வந்த வீட்டில் இவர்களைக் காணக் கிடைக்கவில்லையாதலால் இவர்கள் பணம் கொடுக்க வேண்டியவர்கள் இவர்களைப் பல இடங்களிலும் தேடி வருகின்றனர்.

தொடக்கத்தில் இவர்கள் பலருக்கு வட்டிக்குப் பணம் கொடுத்துள்ளனர். மனைவி பல இலட்சம் ரூபாவுக்கு சீட்டுப் பிடித்துள்ளார்.

பின்னர் பண நெருக்கடியினால் அவதிப்பட்ட இவர்கள் வீட்டை விட்டு வெளியேறி விட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்வியங்காட்டுப் பகுதியில் இவர்களால் புதிதாகக் காணி கொள்வனவு செய்யப்பட்டுக் கட்டப்பட்ட புதிய வீடும் வேறு ஒருவருக்கு சில தினங்களுக்கு முன்னர் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

நம்பிக்கையின் பேரிலும், கைத்துண்டில் கையெழுத்துப் பெற்றுக்கொண்டும் சிலர் இவர்களிடம் பணம் வட்டிக்குக் கடனாகக் கொடுத்துள்ளனர். வடடிக்கு ஆசைப்பட்டுக் கொடுககப்பட்ட பணம் கடைசியில் வட்டியும் இல்லாமல் முதலும் கிடைக்காமல் போய்விட்டதை எண்ணிக் கடன் கொடுத்தவர்கள் ஏக்கத்துடன் தலையில் கை வைத்தவாறு உள்ளனர்.

அண்மைக் காலமாக யாழ். மாவட்டத்தில் பண நெருக்கடி அதிகமாகி அதனை ஈடுசெய்ய முடியாத நிலையில் பலர் தலைமறைவாகும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

இதனால் பணம் கடன் கொடுப்பவர்களும், பெரும் தொகை சீட்டுப் பிடிப்பவர்களும் மிகவும் அவதானத்துடன் செயற்படல் வேண்டும் எனப் பலராலும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (137)

# டெங்கு நுளம்பை விரட்ட கூட்டு நடவடிக்கை

(அச்சுவேலி)

கடந்த வாரம் கரவெட்டி கிழக்கு, நெல்லியடி, இராச கிராமம், கனபொல்லை போன்ற பகுதிகளில் சுகாதாரப்பிரிவினர், பட்டதாரிப் பயிலுநர்கள் மற்றும் பொலிஸார் இணைந்து வீடு வீடாகச் சென்று டெங்கு விழிப்புணர்வுச் செயற்பாடுகளில் ஈடுபட்டனர்.

டெங்கு நுளம்பு பெருகும் இடங்கள் எவை என்பது பற்றியும் அவற்றைத் தடுக்கும் வழிமுறைகள் சுற்றுப்புறச் சூழலை எவ்வாறு பாதுகாப்பாக வைத்திருத்தல் போன்ற பல்வேறு அறிவுரைகளையும் வழங்கிச் சென்றதுடன் எவ்வாறு கட்டுப்படுத்தலாம் போன்ற வழிமுறைகளையும் இவர்கள் எடுத்துக் கூறினர். (85)

## யுத்தத்தால் சிதைந்த ஆலயம் புனரமைப்பு காணுகிறது

போர் ஓய்ந்து நான்கு வருடங்களாகியும் இன்னமும் பூசைகள் ஆரம்பிக்காமல் இருக்கும் பரந்தன் சந்தி உமையாள்புரம் ஞானவைரவர் ஆலயம் தற்பொழுது வழிபாடுகள் ஆரம்பிப்பதற்காக ஆலய புனரமைப்பு வேலைகள் நடைபெறுகின்றன.

மேலும் இவ் ஆலய புனரமைப்பு வேலைகளில் பொது மக்களுடன் சேர்ந்து இராணுவத்தினரும் ஈடுபட்டு வருகின்றனர். (130)

## புனரமைப்பு துரிதம்

(வரணி)

வரணி வடக்கு கும்பிட்டான் புல கற்பக விநாயகப் பெருமான் ஆலய பழமைவாய்ந்த (கண்ட கல்கட்டு) கட்டடங்கள் இடித்தழிக்கப்பட்டு தற்போது புனரமைப்பு வேலைகள் நடைபெற்ற வண்ணமுள்ளன.

இவ்வாலய புனரமைப்புக்கு பெருமளவு நிதி தேவை ஏற்பட்டுள்ளது. எனினும் தற்போது ஆலய நிர்வாகம் மிகவும் ஆர்வத்துடன் கட்டட வேலைகளைச் செய்து வருவது குறிப்பிடத்தக்கது. (150)


## பஸ் நிலையம் புனரமைப்பு

(வட வரணி)

வரணி வடக்கு கறுக்காய் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த பஸ்தரிப்பிடம் தனிநபரால் கட்டப்பட்ட நிலையில் சுமார் 1 வருடம் கழித்து தற்போது மீண்டும் அவ் பஸ்தரிப்பிடத்திற்கு வர்ணப்பூச்சு இட்டுப் புதுப்பொலிவுடன் காட்சி அளிக்கின்றது.

இப்பகுதி வீதியில் பஸ் தரிப்பிடம் இன்றிப்பயணிகள் மழை, வெயில் காலங்களில் மிகுந்த சிரமத்தின் மத்தியில் பிரயாணம் செய்ததை அவதானித்த குறிப்பிட்ட பொது மக்கள் அவ்விடத்தில் பஸ்தரிப்பிடத்தை சுமார் ஒரு இலட்சம் ரூபா செலவில் புனரமைப்பு செய்ததால் பயணிகள் பெரிதும் நன்மை அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (150)

## பரமர் சங்கமம்



'அற்பனுக்கு மவுசுவந்தால் அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பான்" எண்ட பழமொழிதான் நினைவுக்கு வருகுது. எதுக்கெண்டு கேக்கிறியளே!

இவ்வளவு காலமும் எண்ணேக்கை, சிலர் குறிப்பிடுவது போல மூண்டு தசாப்த காலமும் உந்த யாழ்ப்பாண வீதியள் கிடந்த கேவலம் தெரியுந்தானை? கே.கே.எஸ் வீதியில் முட்டாசுக் கடை சந்திக்கும் வை.கு.சந்திக்கும் இடைப்பட்ட பகுதிகள் குச்சொழுங் கையாத்தான கிடந்தது. இப்ப காங்கேசன் துறை வீதி, கொழும்பு கோல்பேஸ் வீதி மாதிரி அகலிச்சு காப்பற்போட்டு போக்குவரவுக்கு அந்தமாதிரி மாறிட்டுது. தமிழகத்து எழுத்தாளர்கள் நாவல்களில் எழுதுவது போல் வாகனங்கள் வீதியில் வழுகிக்கொண்டெல்லே ஓடுது.

கண்டறியாததைக் கண்டால் கட்டாடிகொட்டப் பெட்டியில என்னு மாப்போல இதுவரையும் கண்டறியாததுகளுக்கு இதுபெரும் புதினந்தான். மோட்டைச்சைசயிக்கிள் என்ன முச்சக்கரவண்டி எல்லாம் றோட்டில ஒடுறேல்லை. வழுக்க விட்டு வேடிக்கை பாக்கினம். சிலவேளை தாச்சி விளையாட்டுகளும் இடம்பெறும். இவ்வளத்துக்கும் ஒட்டுநர் அனுமதிப்பத்திரம் ஒருதருக்கும் கிடையாது. அண்டைக்கொரு நாள் சிவலிங்கப் புளியடியில பின்னால வந்த மோட்டச் சைக்கிள் முன்னால் போன முச்சக்கரவண்டி சடுதியாக பிறேக் போட்டதும் முட்டிப் போட்டுது. இருவரிலும் பிழை, அதேநேரம் இருவரிடமும் அனுமதிப்பத்திரமும் இல்லை. முந்திக்கொண்ட ஆட்டோக்காரன் மோட்டச்சைக்கிள் காரனிடம் சாவியைப் பறிச்சுப் போட்டான். சாவியைப் பறிச்சவன் பொலிசுக்கு அறிவிக்கப் போவதாகச் சொன்னதும் 'காசுதாறன்" வீடுவரையும் வரச் சொல்லிக் கூப்பிட்டான். அதற்கு ஒத்துவராத ஆட்டோ ஓட்டியும், மோட்டார் சைக்கிள் செலுத்தியும் அரைமணி நேரமாக நடத்திய வாதாட்ட நாடகத்தை குழுமி நிண்டு கூட்டமொன்று வேடிக்கை பாத்துக் கொண்டு நிண்டுதுகள். இருபகுதியும் பொலிசிடம் போகத் தயாரில்லை. இந்தமாதிரிக் காட்சிகள் மலிஞ்சு போச்சு. குச்சொழுங்கை போலிருந்த வீதியில் பயணித்த ஒழுங்கு இப்ப இல்லை. அதற்கு மேலுமொரு புதுநடைமுறை தோன்றியுள்ளது. குறிப்பிட்ட அந்த இடத்தில் முன்பு வாகனங்கள் நிறுத்தப்படுவதில்லை. இப்போ இடது, வலது கரைகள் இரண்டிலும் வாகனங்கள் தரித்து நிற்கின்றன. ஒருவழிப் பாதையும் இருவழிப்பாதையாக பாவனைக்கு வந்துள்ளது. நெருக்கடிக்குள் முடங்கி வாழ்ந்தவர்களுக்கு புதிய மவுசு ஏறபட்டால் எப்படி இருக்கும். கண்டறி யாததைக் கண்டால் கட்டாடி கொட்டப் பெட்டியில' எண்ட மாதிரி எல்லையற்ற நடைமுறையும் நடக்கு. அதனாலதானை இண்டைக்கு ஒருகாலத்திலும் கேள்விப்பட்டறியாத விபத்துகளும், சாவுகளும் மலிஞ்சு வருகுது. இல்லையே பின்னை சொல்லுங்கோ பாப்பம்...

# அரச ஊழியர்களுக்கு விசேட வீடமைப்புக் கடன்

(கிளிநொச்சி)

அரச வங்கியின் அனுசரணையுடன் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் செயன்முறைப்படுத்தப்படும் கடன்வேலைத்திட்டத்தின் கீழ் அரச ஊழியர்களுக்கு ரூபா 350,000 வரையிலான கடன்கள் வழங்கப்படவுள்ளன.

இது சம்பந்தமான விபரங்களை தங்கள் பிரதேச செயலகங்களில் கடமைபுரியும் வீடமைப்பு தொழில்நுட்ப உத்தியோகத்தரையோ அல்லது தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட காரியாலயத்திலோ தொடர்பு கொண்டு விபரங்களை பெற்றுக்கொள்ளலாம் என தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் கிளிநொச்சி மாவட்ட முகாமையாளர் அறிவித்துள்ளார். (130)

# முரசின் இன்றைய பலன்



(15.07.2013 -திங்கட்க்கிழமை)

விஜய வருஷம் ஆனி மாதம் 31 ஆம் திகதி. அத்தநட்சத்திரம் மாலை 06.07 வரை ஸப்தமிதிதி, சித்தம்யோகம்.

இராகுகாலம 07.30 - .09.00வரை. சுபநேரம 12.00- 01.30வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** பயணம் இடைத்தங்கல் நாட்டில் சேர்த்தல், புதிய பொறுப்புக்கள் தேடிவரல், சுற்றாடல் சுத்திகரிப்பு, பட்டப்பின் படிப்பை மேற்கொள்ளும் முயற்சி, பிதாவின் உடற்சுகம் மேம்பாடு, பங்குத்தொழிலைக் கைவிடும் உத்தேசம், மனைவியுடன் ஏற்பட்ட கருத்து முரண்பாடு அகன்றுவிடல்.

**ரிஷபம்** கடன் தொல்லையால் தொழிலை மூடும் சிந்தனை, குழந்தைப்பேறு, வாகனம் தொல்லை கொடுத்தல், இளைப்பாறும் யோசனை, திருமணப் பேச்சில் கலத்தல், கௌரவ பதவிக்கு சிபார்சு, புதிய இணைப்புக்கள் கிடைத்தல்.

**மிதுனம்** மூட்டுநோய் வருத்துதல், வெளியூர் புதல்வர்கள் பற்றிய கவலை, திருடர் பற்றிய அச்சம், ஆவணமின்மையால் தண்டம், வெளியூர் பயணம் பற்றிய மதில் மேல் பூனையின் நிலைப்பாடு, நோய் கட்டுப்பாட்டில் வரல், சுவீப் அதிர்ஷ்டம்.

**கடகம்** எதிர்பாராமல் காவல்துறையில் சிக்குதல், தாயாரின் நோய் பற்றியகவலை, இயந்திரக்கோளாறு பயணத்தடை ஏற்படுத்தல், மனை, நிலம் பற்றிய தகராறு, காதலில் சோதனையும் வேதனையும் கையடக்கத் தொலைபேசி மூலம் உறவுகள்.

**சிம்மம்** தொலைபேசி மூலம் மிரட்டல், குருமாற்றம் குபேர வாழ்வைத் தரல், குழந்தைப்பேறு, வங்கியால் கடன் உதவி, காதல் திருமணம், மேலதிகாரிகளின் பாராட்டு, புதிய நட்பு, வாகனயோகம், நோய் பற்றிய பயம் நீங்கல்.

**கன்னி** பயணத்திற்கான சுபசெய்தி, நட்பு தொழில் சச்சரவு, திடீர் பயணஏற்பாடு, சத்திரசிகிச்சை, நம்பியவர் கைவிடல், சகோதரவழிக்கவலை, புதிய மனை அமைக்கும் திட்டம், அயல் நாட்டினின்றும் உறவினர் வருகை.

**துலாம்** கைவிட்டிருந்த உறவு மீண்டும் தொடர்தல், ஏழரைச் சனியால் நோய் பற்றிய கவலை, பிதாவின் உதவி கிட்டல், அதிர்ஷ்ட இலாபச்சீட்டினால் பணம், விருந்துபசாரம், வாகனயோகம், காதலில் வீசிய புயல் தணிதல்.

**விருச்சிகம்** திருமணவிடயமாக அலைச்சல், ஏழரைச் சனியினால் காரியங்கள் தொல்லை கொடுத்தல், கடன்பட்டதால் திண்டாட்டம் மக்கள் மனைவியால் கவலை, உள்ளூர் தொழில் வாய்ப்பினால் பயணத்தைக் கைவிட தீர்மானம்.

**தனுசு** உள்ளொன்று வைத்து புறமொன்று பேசும் நண்பரால் கெடுதி, நோய் மாறும் அறிகுறி தென்படல், தொழில் பயணத்தினால் தாரப்பிரிவு, நடமாடும் சேவையினால் நன்மை, சொத்துப்பிரச்சினை சுமுகமாதல்.

**மகரம்** பதவி நிரந்தரமாக்கல் கடிதம், விபத்தினால் சிறு காயம், மாமன்மார் உறவில் முறுகல் நிலை, பயணம் பற்றிய மீளாய்வு, தாயாரின் உடற்சுகமேம்பாடு, ஒன்றை நினைக்க இன்னொன்றாக முடிதல்.

**கும்பம்** கையடக்கத் தொலைபேசி மூலம் காதல் உறவு, பதவி ஏற்றம், புதிய காரியம் ஆரம்பித்தல், பயணம் பற்றிய சுபசெய்தி, குழந்தைப்பேறு, சுவீப்பில் பணம், பணிவினால் உயர்வு, கைவிட்டதிருமணம் துளிர்த்தல்.

**மீனம்** முடிவு நெருங்கும் போது காரியம் சிதறல், பயண முயற்சியில் இரண்டும் கெட்டான் நிலை, கடன் அடைக்கமுடியாது திண்டாட்டம், சளிநோய் வருத்துதல், சகோதரவழி உதவி, மாமன் உறவு சீர்கெடல், பணப்பற்றாக்குறையால் காசோலை திரும்புதல்.

# உலகக்கிண்ண கால்பந்து பிரான்ஸ் வசம் கிண்ணம்




(இஸ்தான்புல்)

சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனம் (பிபா) உலக கிண்ணக் கால்பந்து (20 வயதுக்குட் பட்டோர்) தொடரில் பிரான்ஸ் அணி சம்பியன் பட்டம் வென்றது.

துருக்கியில், 20 வயதுக்குட்பட்டோருக்கான 19ஆவது பிபா உலக கோப்பை கால்பந்து தொடர் நடைபெற்றது. இஸ்தான்புல் நகரில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் பிரான்ஸ், உருகுவே அணிகள் மோதின.

ஆட்டநேர முடிவில் (90ஆவது நிமிடம்) இரு அணி வீரர்களால் ஒரு கோல் கூட அடிக்க முடியவில்லை. பின், இரு அணிகளுக்கும் வழங்கப்பட்ட கூடுதல் நேரத்திலும் (தலா 15 நிமிடம்) ஒரு கோல் கூட அடிக்கவில்லை. இதனால் போட்டி தண்ட உதை மூலம் தீர்மனிக் கப்பட்டது. இதில் அபாரமாக செயற்பட்ட பிரான்ஸ் அணி 4-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று, சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது. இது, உலக கோப்பை (20 வயது) வரலாற்றில், பிரான்ஸ் அணி வென்ற முதலாவது கோப்பை. கடந்த 2011இல், மூன்றாவது இடம் பிடித்தது. இரண்டாவது முறையாக (1997, 2013) இறுதிப் போட்டிக்கு முன்னேறிய உருகுவே அணி, மீண்டும் இரண்டாவது இடம் பிடித்தது.

மூன்றாவது இடத்துக்கான போட்டியில் கானா, ஈராக் அணிகள் மோதின. அபாரமாக ஆடிய கானா அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று, மூன்றாவது இடத்தை கைப் பற்றியது.



# வென்றது ஸ்பெயின்

இங்கிலாந்துக்கு எதிரான, பெண்களுக்கான யூரோ கோப்பை கால்பந்து லீக் போட்டியில், ஸ்பெயின் அணி வெற்றி பெற்றது. சுவீடனில், பெண்களுக்கான 11ஆவது யூரோ கோப்பை கால்பந்து தொடர் நடைபெற்று வருகின் றது. இதில் ஜேர்மனி, இத்தாலி உள்ளிட்ட 12 அணிகள் மூன்று பிரிவுகளாக லீக் சுற்றில் விளையாடுகின்றன. சி பிரிவில் நடந்த லீக் போட்டியில் ஸ்பெயின், இங்கிலாந்து அணிகள் மோதின.

ஆட்டத்தின் 5ஆவது நிமிடத்தில் ஸ்பெயின் அணியின் வெரோனிகா முதல் கோல் அடித்தார். இதற்கு, 8ஆவது நிமிடத்தில் இங்கிலாந்தின் அலுகோ பதிலடி கொடுத்தார். முதல் பாதி முடிவு 1-1 என சமநிலை வகித்தது.

இரண்டாவது பாதியின் 86ஆவது நிமிடத்தில் ஸ்பெயின் வீராங்கனை ஹெர்மோசோ ஒருகோல் அடித்தார். உடனடி யாக சுதாகரித்துக்கொண்ட இங்கிலாந்து அணிக்கு 89 ஆவது நிமிடத்தில் பசட், ஒரு கோல் அடிக்க மீண்டும் 2-2 என சமநிலை அடைந்தது. ஸ்டாபேஜ் நிமிடத்தில் (90) ஸ்பெயின் அணியின் புடெல்லாஸ் ஒரு கோல் அடித்தார். ஆட்டநேர முடிவில் ஸ்பெயின் அணி 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது



# எகிறியது மவுசு

ஆஷஸ் தொடரில், தனது அறிமுக டெஸ்டில் அசத்திய அவுஸ்ரேலிய வீரர் ஆஷ்டன் ஏகாருக்கு மவுசு அதிகரித்துள் ளது. இவரை ஒப்பந்தம் செய்ய முன்னணி விளம்பர நிறுவனங்கள் ஆர்வமாக உள் ளன. இங்கிலாந்து சென்றுள்ள அவுஸ் ரேலிய அணி, 5 போட்டிகள் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடரில் பங்கேற்று வருகிறது.முதல் டெஸ்டின் முதல் இனி ங்சில் 11ஆவது வீரராக களமிறங்கிய இளம் சுழற்பந்து வீச்சாளர் ஆஷ்டன் ஏகார் 98 ஓட்டங்கள் குவித்து உலக சாதனை படைத்தார். இவருக்கு விளம்பர வாய்ப்புகள் தேடி வருகின்றன.

இது குறித்து இவரது முகாமையா-ளர் ஜேசன் பெக்கர் கூறியது: கிரிக்கெட் துடுப்புத்தயாரிக்கும் பல நிறுவனங்கள், அவர்களது விளம்பரத்தில் ஆஷ்டன் ஏகாருடன் நடிப்பது குறித்து பேசின. பிரிமியர் தொடர் அல்லது இலங்கை பிரிமியர் லீக் தொடர்களில் இவர் பங் கேற்க வேண்டுமென்று இரசிகர்கள் விரும்புகின்றனர். தற்போதைக்கு இவர் டெஸ்ட் கிரிக்கெட் வீரராக மட்டுமே இருக்கிறார். ருவெண்ரி-20போட்டிக்கென வேறு விதமான திறமை தேவை. ஆஷஸ் தொடரில் மீதமுள்ள போட்டி களில் பந்து வீச்சாளராகவும் திறமை வெளிப் படுத்துவதிலேயே கவனமாக உள்ளார் எனத்தெரிவித்தார்.

# புரொட்டுக்குத் தடை; வலுக்கிறது கோரிக்கை



(நொட்டிங்ஹொம்)

ஆஷஸ் டெஸ்ட் தொடரின் முதல் டெஸ்டில், ஆட்டமிழப்பு எனத் தெரிந்தும் தானாகவே வெளியேற மறுத்த இங்கிலாந்தின் ஸ்ருவெட் புரொட்டுக்கு தடை விதிக்க வேண்டுமென கோரிக்கை எழுந்துள்ளது.

இங்கிலாந்து, அவுஸ்ரேலிய அணிகள் மோதும், ஆஷஸ் டெஸ்ட் தொடரின் முதல் போட்டி நொட்டிங்ஹொமில் நேற்று நிறை வடைந்தது. மூன்றாம் நாள் ஆட்டத்தில், அவ்ஸ்ரேலியாவின் அறிமுக சுழற்பந்துவீச்சாளர் ஆஷ்டன் ஏகார் வீசிய பந்தை, இங்கிலாந்தின் புரொட் எதிர்கொண்டார். துடுப்பில் உரசி சென்ற பந்து, விக்கெட் காப்பாளர் ஹடின் கையுறையில் (கிளவுசில்) பட்டு பறந்தது. இதனை சாமர்த்தியமாக அவுஸ்ரேலிய கப்டன் மைக்கல் கிளார்க் பிடித்தார். உடனடியாக ஆட்டமிழப்புக்கேட்கப்பட்டது. ஆனால் பாகிஸ்தான் நடுவர் அலீம் ஆட்டமிழப்புக் கொடுக்க மறுத்தார். இதுகுறித்து அவுஸ்ரேலிய வீரர்களுக்கு சந்தேகம் ஏற்பட்ட போதும், நடுவர் தீர்ப்புக்கு மறுபரிசீலனை செய்யும் (டி.ஆர்.எஸ்.,) வாய்ப்பை ஏற்கனவே பயன்படுத்திவிட்டதால், அதிருப்தியுடன் முடிவை ஏற்றுக்கொண்டனர்.

தொலைக்காட்சி ரிப்ளேவில் பந்து, துடுப்பில் பட்டது நன்றாக தெரிந்தது. ஆட்டமிழப்பு என தெரிந்தும் வெளியேறாத புரொட் மீது, முன்னாள் மேற்கிந்தியத்தீவு வீரர் மைக்கல் ஹோல்டிங் குற்றம் சாட்டியுள்ளார்.

பந்து துடுப்பில் பட்டுச் சென்றது நன்றாக தெரிந்தும் வெளியேறாமல், நடுவர் தீர்ப்புக்காக காத்திருந்த புராட்டின் செயல் வருத்தமளிக்கிறது. சமீபத்தில் லண்டனில் நடந்த பாகிஸ்தானுக்கு எதிரான சம்பியன்ஸ் கிண்ண ஒரு நாள் லீக் போட்டியில், தவறுதலாக ஆட்டமிழப்புக் கேட்டதற் காக, மேற்கிந்தியத்தீவு விக்கெட் காப்பாளர் தினேஷ் ராம்டினுக்கு இரண்டு போட்டியில் விளையாட, புரொட்டின் தந்தையும், போட்டி நடுவருமான கிறிஸ் புரொட் தடை விதித்தார். ராம்டின் செயல் விளையாட்டு உணர்வுக்கு எதிரானது என்றால், டிரொட் நடந்து கொண்டதை எப்படி எடுத்துக் கொள்ள் வேண்டும். ஐ.சி.சி., இந்த விடயத்தை கவனமாக கையாண்டு, நல்ல தீர்ப்பளிக்கும் என நம்புகிறேன் என மைக்கல் ஹோல்டிங் குற்றம் சாட்டினார்.

புரொட்டின் இச்செய்லுக்கு முன்னாள் அவுஸ் ரேலிய விக்கெட் காப்பாளர் ஆடம் கில்கிறிஸ்ட், தனது டுவிட்டர் இணையத்தளத்தில் வெளியிட்ட செய்தியில், சிலர், நடுவரின் தீர்ப்பின் படி நடக்க வேண்டும் என்கின்றனர். இது தவறு, நேர்மையாக நடந்து கொள்வது தான் சிறந்தது என்றார்.

இங்கிலாந்து வீரர் கெவின் பீற்றர்சன் கூறுகை யில், கிரிக்கெட் விளையாடும் ஒவ்வொருவரும், நடுவர் தீர்ப்புக்காக காத்திருப்பதில் தவறில்லை என்றார்.



# மீள் எழுச்சி நிச்சயம் உண்டு

(புதுடில்லி)

சேவாக், கௌதம் கம்பீர், சகீர்கான் ஆகியோர் மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பி அணியில் இடம்பிடிப்பார்கள் என நம்பிக்கை எனக்கிருக்கின்றதென இந்திய அணியின் முன்னாள் விக்கெட் காப்பாளரும், முன்னாள் தேர்வு குழுத் தலைவருமான கிரண்மோரே தெரிவித்துள்ளார்.

சேவாக், கம்பீர், சகீர்கான் ஆகியோரது கிரிக்கெட் வாழ்க்கை முடிந்து விடவில்லை. உள்ளூர் போட்டியில் அவர் கள் திறமையை வெளிப்படுத்தி இந்திய அணிக்கு மீண்டும் திரும்புவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது. இந்திய கிரிக்கெட் டில் தற்போது ஆரோக்கியமான போட்டி நிலவுகிறது. திறமை யாக விளையாடினால் மட்டுமே அணியில் இடம் பெற முடியும். உடல் தகுதி இல்லாத சேவாக், கம்பீர், சகீர்கான் அனுபவம் வாய்ந்த வீரர்கள். அவர்கள் தங்கள் திறமையை வெளிப்படுத்தி முன்னேறுவார்கள் என்று நம்புகின்றேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# நஷ்டஈடு கோர முடிவு

(டர்பன்)

அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணிக்கு பயிற்சியாளராக இருந்த தென்னாபிரிக்காவின் ஆர்தர் சமீபத்தில் நீக்கப்பட்டார். இந்நிலையில் ஒப்பந்தம் முடிவதற்கு முன்னர் நீக்கியதால் நஷ்டஈடு கேட்டு சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்க ஆர்தர் முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இது குறித்து சிலர் ஆர்தருக்கு சாதகமாக கருத்துத் தெரிவிக்கும் அதேவேளை, பாதகமாகவும் கருத்துத் தெரிவித்து வருகின்றனர். பயிற்சியாளரின் பணி திருப்தி இல்லையென்றால் எந்த நாட்டு கிரிக்கெட் சபையும் இவ்வாறான முடிவையே எடுக்கும். அந்த வகையில் ஆர்தரை பயிற்சியாளர் பதவியிலிருந்து நீக்கியதில் த்வறில்லை எனச் சுட்டிக்காட்டப்படுகிறது. அத்துடன் அவருக்கு தனிப்பட்ட ரீதியில் பாதிப்பு ஏற்பட்டிருந்தால் அவர் நஷ்டஈடு கோருவதிலும் தவறில்லை எனவும் சிலர் சுட்டிக்காட்டுகின்றனர். இது குறித்து ஆர்தர் எந்தவித கருத்தையும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# விளையாட்டுச் செய்திகள்

# டிமுத் அதிரடிச் சதம் பற்றிக்ஸ் பெரு வெற்றி



(யாழ்ப்பாணம்)

டிமுத்தின் அதிரடிச் சதத்தின் மூலம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி பெரு வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான ஒரு நாள் கிரிக்கெட் தொடரின் ஆட்டமொன்று கடந்த மூன்றாம் திகதி சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணியும், சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி டிமுத், டனியல், கேவின், அனோஜன் ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப்பெற்றது. இறுதியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 50 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 380 ஓட்டங்களைப் பெற்றது. இதில் டிமுத் 107 பந்துகளை எதிர்கொண்டு 24 பவுண்டரிகள் அடங்கலாக 117, டனியல் 67, கேவின் 61, அனோஜன் 50 ஓட்டங்களைப் பெற்றனர். மூன்றாவது விக்கெட்டுக்காக டிமுத் மற்றும் அனோஜன் இணை 109 ஓட்டங்களையும், ஆறாவது விக்கெட்டுக்காக டனியல், கேவின் இணை 115 ஓட்டங்களையும் இணைப்பாட்டமாகப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. பந்து வீச்சில் பிரசாத் நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 381 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி 42 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 112 ஓட்டங்களைப்பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் லோகதர்சன் 31, சஞ்சீவன் 14,கௌதம் 16 ஓட்டங்களைப் பெற்றனர். மற்றைய அனைத்து வீரர்களும் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர். பந்து வீச்சில் சறோன், பியட்றிக், அனோஜன் தலா மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

(எஸ்.பி.)

## வடமாகாண மட்ட தடகளம் சிறந்த வீர,வீராங்கனைகள்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டியின் சிறந்த வீர,வீராங்கனைகள் வெளியிடப்பட்டுள்ளன.

வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டி கடந்த 4ஆம் திகதி முதல் எட்டாம் திகதி வரை யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. இதில் ஒட்டுமொத்த புள்ளிகள் அடிப்படையில் யாழ். கல்வி வலயம் முதலிடத்தைப்பிடித்துக்கொண்டது.

இதில் 15,17,19,21 என நான்கு வயதுப்பிரிவிலும் சிறந்த வீர,வீராங்கனைகள் தெரிவு செய்யப்பட்டு விருதுகள் வழங்கப்பட்டன. அதன் விபரம் வருமாறு:

15 வயது ஆண்கள் பிரிவு சுவட்டு நிகழ்வு கே. நப்தலி ஜோய்சன் (அளவெட்டி அருணோதயாக் கல்லூரி), மைதான நிகழ்வு பி. கனிஸ்ரன் (இளவாலை சென். ஹென்றியரசர் கல்லூரி) பெண்கள் பிரிவில் சுவட்டு நிகழ்வு : ஜி. தொசிபா லம்பேர்ட் (மன்னார் சென். அன்ரனீஸ் மத்திய மகாவித்தியாலயம்), மைதான நிகழ்வு : எஸ். பிரியதர்சினி (மன்னார் கௌரியம்பாள் பாடசாலை)

17 வயது ஆண்கள் பிரிவு : சுவட்டு நிகழ்வு எம். நிலோஜன் சென். ஜோண்ஸ் கல்லூரி), மைதான நிகழ்வு ஆர். செந்தூரன் (யாழ். இந்துக் கல்லூரி) பெண்கள் பிரிவு : சுவட்டு நிகழ்வு பி. தனுஜா (விசுவமடு மகாவித்தியாலயம்), மைதான நிகழ்வு எஸ். அனிற்றா (உடுப்பிட்டி பெண்கள் பாடசாலை)

19 வயது ஆண்கள் பிரிவு சுவட்டு நிகழ்வு ஏ. அனோஜன் (சென். ஜோண்ஸ் கல்லூரி), மைதான நிகழ்வு எஸ். வெனிலன் மார்க் (மன்னார் சென். அன்ரனீஸ் மத்திய மகாவித்தியாலயம்) பெண்கள் பிரிவில் சுவட்டு நிகழ்வு ஏ. அனற் (மாதகல் சென். ஜோசப் மகாவித்தியாலயம்), மைதான நிகழ்வு எம். கமலினி (வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி)

21 வயது ஆண்கள் பிரிவு சுவட்டு நிகழ்வு பி. பிரசாந் (வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம்), மைதான நிகழ்வு ஜஸ்மினன் (யாழ். இந்துக் கல்லூரி), பெண்கள் பிரிவு சுவட்டு நிகழ்வு கே.லேகாகினி (வவுனியா சைவப்பிரகாச பெண்கள் கல்லூரி), மைதான நிகழ்வு எம். நித்திலா (சுண்டிக்குழி பெண்கள் கல்லூரி)

## கிண்ணம் வென்றது அல்வாய் நியூபவர்

(வதிரி)

வதிரி ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழகம் நடாத்தி மென்பந்து கிரிக்கெட் தொடரில் அல்வாய் நியூபவர் அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

கடந்த 8ஆம் திகதி வதிரி ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற இந்த இறுதிப் போட்டியில் கரவெட்டி ஞானம்ஸ் அணியும், அல்வாய் நியூபவர் அணியும் மோதின.

10 ஓவர்களைக் கொண்ட இந்த இறுதிப் போட்டியில் நாயணச் சுழற்சியில் வெற்றிபெற்ற அல்வாய் நியூபவர் அணி முதலில் ஆடியது. இதற் கமைய ஆடிய அல்வாய் நியூபவர் அணி 10 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 78 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கமல் 18, கிருசாந்த 17 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சுதர்சன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 78 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கரவெட்டி ஞானம்ஸ் அணி 7.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 52 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் குணதீபன் 18, ரொனி 11 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நிபந்தன் மூன்று, ராம் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகன் மற்றும் தொடர் நாயகன் விருதை ராம்சங்கர் பெற்றுக் கொண் டமை குறிப்பிடத்தக்கது.

## கிரிக்கெட் போட்டிக்கு பதிவு செய்யக் கோரல்

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் 13 வயது, 19 வயது மாணவர்களுக்கு இடையிலான சுற்றுப்போட்டிக்கு விண்ணப்பங்களை கோரியுள்ளன.

இம்மாதம் 20ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். 13 வயதுப் பிரிவினருக்கு ஒரு அணிக்கு 1000 ரூபாவும் 19 வயது அணியினருக்கு ஒரு அணிக்கு 2000 ரூபாவும் போட்டிக் கட்டணமாக அறவிடப்படும். ஒரு பாடசாலையில் இருந்து எத்தனை அணிகளும் பங்குகொள்ள முடியும்.

ஒரு அணியில் பதிவு செய்த மாணவர் அதே பாடசாலையின் வேறு அணியில் பங்குகொள்ள முடியாது. தற்போது 15 வயது, 17 வயது முதலாம் சுற்று போட்டிகள் நிறைவடைந்துள்ளன.

இந்நிலையில் இச்சுற்றுப் போட்டிகளில் பங்குகொள்ள விரும்பும் பாடசாலை அணிகள் தயார் நிலையில் இருக்குமாறும், போட்டிகள் இரண்டாம் தவணை விடுமுறையில் ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## மட்டுவில் வளர்மதி சனசமூக நிலைய ஆண்டு நிறைவு பெரு விளையாட்டு

## கரப்பந்து காலிறுதியில் புத்தூர் கலைமதி, நாயன்மார்கட்டு பாரதி

(மட்டுவில்)

மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையத்தின் 48ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடாத்தப்பட்டு வரும் கரப்பந்தாட்டத் தொடரின் காலிறுதிப் போட்டிக்கு புத்தூர் கலைமதி மற்றும் நாயன்மார்கட்டு பாரதி அணிகள் தகுதி பெற்றுள்ளன.

மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையத்தின் 48 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட அணிகளுக்கிடையில் மாபெரும் கரப்பந்தாட்டத் தொடர் மின்னொளியில் நடாத்தப்பட்டு வருகின்றது. இதில் இரண்டு பிரிவுகளில் போட்டிகள் நடாத்தப்படுகின்றன.

மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வரும் இப்போட்டித் தொடரின் ஏ பிரிவுக்கான முதல் போட்டியில் பன்னாலை கணேஷா அணியும், புத்தூர் கலைமதி அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய புத்தூர் கலைமதி அணி 2-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற பி பிரிவுக்கான போட்டியில் மட்டுவில் ஐங்கரன் அணியும், நாயன்மார்கட்டு பாரதி அணியும் மோதின. இதில் இரு அணிகளும் விறுவிறுப்பாக ஆடிய போதிலும் நாயன்மார்க்கட்டு பாரதி அணி 2-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது. இன்றைய தினம் இடம்பெறவுள்ள ஏ பிரிவுக்கான போட்டியில் ஆவரங்கால் மத்திய அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன் அணியும், பி பிரிவுக்கான போட்டியில் அச்சுவேலி கலைமகள் அணியும், மீசாலை சீமா அணியும் மோதவுள்ளன. (இ)

## கால்பந்து இரண்டாவது சுற்றில் ஊரெழு றோயல், யாழ். ஐக்கியம்

மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையத்தின் ஆண்டு நிறைவை முன்னிட்டு நடாத்தப்பட்டு வரும் கால்பந்தாட்டத் தொடரின் இரண்டாவது சுற்றுக்கு யாழ். ஐக்கியம், ஊரெழு றோயல் ஏ அணிகள் தகுதி பெற்றுள்ளன.

மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையத்தின் 48ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ். மாவட்ட கால்பந்தாட்ட அணிகளுக்கிடையில் மாபெரும் கால்பந்தாட்டத் தொடரை நடாத்தி வருகின்றது.

மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வரும் இப்போட்டித் தொடரில் நேற்று முன் தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் யாழ். ஐக்கியம், ஊரெழு றோயல் அணிகள் வெற்றிபெற்றன.

முதலாவதாக நடைபெற்ற போட்டியில் யாழ். ஐக்கியம் அணியும், ஊரெழு றோயல் பி அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே தாக்குதல் ஆட்டத்தை மேற்கொண்ட யாழ். ஐக்கியம் அணி 5-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது போட்டியில் ஊரெழு றோயல் ஏ அணியும், புத்தூர் வீனஸ் அணியும் மோதின. ஊரெழு றோயல் அணியின் வலையில் சிக்கித் தவித்த புத்தூர் வீனஸ் அணி படுதோல்வியடைந்தது. இறுதியில் ஊரெழு றோயல் அணி 7-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியது.

இன்று நடைபெறவுள்ள போட்டிகளில் நாவாந்துறை சென் நீக்கல்ஸ் ஏ அணியை எதிர்த்து புத்தூர் எவெரஸ்ட் அணியும், நாவாந்துறை சென். நீக்கலஸ் பி அணியை எதிர்த்து அரியாலை ஐக்கியம் அணியும் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

மக்களின் விடிவிற்கான போராட்டத்தில் மரணித்தவர்களை நினைவுகூர்வது சீரிய பண்பாடு. அது இன்றைய எமது வரலாற்றுச் சூழலில் மேலதிக முக்கியத்துவம் வாய்ந்தது. இவர்களையெல்லாம் மறந்து விடுவோம். அந்தச் சுவடே தேவையில்லை என்று ஒரு கூட்டம் புறப்பட்டிருக்கிறது. அது மக்களின் இன்ப துன்பங்களில் பங்கு பெறாத எந்த தியாகமும் செய்யாத கடந்த 30 ஆண்டுகளாக தமிழ்மக்கள் பேரழிவுகளையும் அவலங்களையும் சந்தித்தபோது சம்பந்தமில்லாமல் இருந்து விட்டு இப்போது தமிழ் மக்கள் மீது அதிகாரம் செலுத்த புறப்பட்டிருக்கிறது.

போராட்டத்தில் ஈடுபட்டு உயிரிழந்தவர்களின் குடும்பங்கள் பஞ்சமும் நோயுமாக வாழ, இந்த சௌகரியமான கூட்டம் இவர்களை ஆளப் புறப்பட்டிருக்கிறது. இது பற்றி மிக மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டிய தருணமிது.

சமூகத்தின் விடியலுக்காக என்றே ஒவ்வொரு போராளியும் வீட்டிலிருந்து புறப்பட்டிருக்கிறார்கள். தவறான வழிகளில் சிக்குண்டவர்களும் இருக்கிறார்கள். ஆனால் உயிர்த்தியாகம் நிகழ்ந்திருக்கிறது. இந்த தியாகங்கள் வியர்த்தமாவதை, இழிவு படுத்தப்படுவதை தார்மீக உணர்ச்சி உள்ள எவரும் சகித்துக் கொண்டிருக்க முடியாது. எமது சாதாரண குடும்பங்களின் பிள்ளைகளின் தியாகங்களை கனவான்களிடம் விட்டு விட முடியாது.



# தென்னிலங்கை ஜனநாயக இடதுசாரி சக்திகளுடன் இணைந்து செயற்பட வாய்த்திருக்கும் சந்தர்ப்பம்

- சுகு-ஸ்ரீதரன் (வீரமக்கள் தின கட்டுரையிலிருந்து)

இலங்கையில் தமிழர்கள் பேரழிவுகளை அனுபவித்திருந்தாலும் அனைத்து சமூகங்களும் ஏதோ ஒரு அளவில் அழிவுகளைச் சந்தித்திருக்கிறார்கள். இதில் தேசிய இன சுதந்திரம், ஜனநாயகம், சமூக சமத்துவத்திற்காக போராடியவர்களை நாம் மறந்து விடமுடியாது.

கிராமசேவகர் அலுவலகம், பிரதேசசெயலகம், மாவட்ட செயலகம், பொலிஸ் நிலையம், வைத்தியசாலை எந்த இடங்களிலும் சாதாரண மனிதனுக்கு மரியாதை எதுவும் கிடையாது. அதிகார மமதையே மேலோங்கிக் காணப்படுகிறது.

ஒரு சில விதிவிலக்குகள் இருக்கலாம். சாதாரண மக்களுடனான சாதாரண வார்த்தையாடல்களில் கூட வன்முறை விரவிக்கிடக்கிறது. அதிகார வர்க்கத்தின் செயற்பாடுகளை தட்டிக் கேட்கும் அரசியல், கலாசார இயக்கம் தேவைப்படுகிறது. மனித தன்மையற்ற அதிகார கட்டமைப்பில் பாரிய சீர்திருத்தங்கள் - தகர்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருக்கிறது.

லஞ்சம், ஊழல், முகஸ்துதி, சலுகை என்பன நிர்வாணமாகவே உலாவித்திரிகின்றன. 30 ஆண்டுகள் போராடிய சமூகத்திற்கு கிடைத்த பரிசு இதுதான் என்றால் நாம் தீவிரமாக சிந்திக்க வேண்டும். போராட்டத்தில் தார்மிகவலு- அறம் என்பன எந்தளவுக்கு இருந்தன என்பது பற்றி நாம் மீளாய்வு செய்ய வேண்டும். இந்த வரலாற்று படிப்பினை மிக மிக முக்கியமானது. ஏனெனில் நம்பிக்கை வறட்சி விஸ்வரூபம் எடுத்துள்ளது.

கண்ணியமான சுயமரியாதையுடன் கூடிய வாழ்வொன்று எம் மக்களுக்கு கிட்ட வேண்டும். சுதந்திரமான வாழ்வை நோக்கியே போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் திசை தடுமாறி எங்கெங்கோ சென்று முன்னர் இருந்ததை விட மோசமான வாழ்நிலை.

அதிகாரப்பரவலாக்கல் என்ற விடயம் 13ஆவதை தாண்டிச் செல்லவில்லை. அந்த 13ஆவதில் மிச்ச மீதியாக உள்ளவற்றையும் பறித்தெடுக்கும் போக்கு. இதற்கெதிராக தெற்கின் இடதுசாரி ஜனநாயகசத்திகள் குரல் எழுப்புகிறார்கள். 13ஆவதில் உள்ள பொலிஸ் - நில அதிகாரங்கள் உள்ளவாறே இருக்க வேண்டும் அதில் மாற்றம் செய்யக்கூடாது என்று இவர்கள் உறுதிபடத் தெரிவித்திருக்கிறார்கள்.

ஆனால் தமிழ்த் தரப்பில் 13ஆவதை பாதுகாக்க வேண்டும் என்ற கருத்து பகிரங்கமாக வெளிப்படுத்தப்படவில்லை.

இது அதிகாரப்பரவலாக்கல் சம்பந்தமான இதய சுத்தியை கேள்விக்குள்ளாக்குகிறது. 13ஆவதை பாதுகாப்பதற்கு தெற்கின் ஜனநாயக இடதுசாரி சக்திகளுடனும், மலையக, முஸ்லிம் மக்களுடனும் இணைந்து செயற்பட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வர வேண்டும். எமது மக்களின் இருப்பு பாதுகாப்பிற்கு உத்தரவாதமளிப்பதாக ஏதோ ஒரு அளவில் அதிகார பரவலாக்கல் அரசாங்க கட்டமைப்பு அமைய வேண்டும். அதிலிருந்து தான் தொடங்க வேண்டும்.

தமிழ் ஜனநாயக சக்திகளின் ஐக்கியமும், முஸ்லிம், மலையக மக்களுடன் ஐக்கியமும், தென்னிலங்கை ஜனநாயக இடதுசாரி சக்திகளுடனும் ஐக்கியமும்... இவ்வாறான முறையிலேயே நாம் இயங்க வேண்டும்.


தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க சிறுபான்மைச்சமூகங்களின் உரிமைகளை வென்றெடுக்க இலங்கை ஜனநாயகமானதும் - பல்லினங்களின் நாடாக மாறுவதற்கும் இது அவசியம். இன்று அதற்கு சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது. நாம் தமிழ் மக்களுக்கும் இலங்கையின் அனைத்து சமூகங்களுக்கும் கண்ணியம் சுயமரியாதையுடன் கூடிய வாழ்வை வென்றெடுக்க வேண்டும்.

மறைந்த போராளிகள் பொதுமக்களுக்கு செய்யும் அர்த்தமுள்ள அஞ்சலியாக அது இருக்கும்!!

---

# எழுத்தாளரின் சமூகப் பொறுப்பு

எழுத்தாளர் அமிதவ் கோஷின் கட்டுரை ஒன்றை முகநூலில் படித்தேன். ஆங்கிலத்தில் எழுதும் இந்திய எழுத்தாளர்களில் முக்கியமானவர் அமிதவ் கோஷ். ஒக்ஸ்ᐟ.போர்டில் பி.எச்டி முடித்துவிட்டு, டில்லிப் பல்கலைக் கழகத்தில் ஆசிரியப் பணி செய்து கொண்டிருந்தபோது நடந்த ஒரு சம்பவம் அவரை எழுத்துத் துறைக்கு ஈர்த்துள்ளது.



அது 1984ஆம் ஆண்டு ஒக்டோபர் இறுதி, நவம்பர் தொடக்கம். பிரதமர் இந்திரா அவரது மெய்க் காப்பாளர்களால் சுட்டுக் கொல்லப்படுகிறார். கொன்றவர்கள் சீக்கிய மதத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களின் புனிதத்தலமான பொற்கோவிலுக்குள் புகுந்து இராணுவம் மேற்கொண்ட நடவடிக்கையைக் கண்டித்து அவர்கள் இந்திரா காந்தியைக் கொன்றனர். கொன்றவர்கள் சீக்கியர்கள் என்பதால் டில்லியில் வாழ்ந்த சீக்கியர்கள் மீது மிகப்பெரிய வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது. அவர்களின் சொத்துக்கள் அழிக்கப்பட்டன. வீடுகள் எரிக்கப்பட்டன. டில்லியில் மட்டும் 2500 சீக்கியர்கள் கொல்லப்பட்டனர். பிற வட மாநில நகரங்களிலும் பலர் கொல்லப்பட்டனர். காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் சிலர் திட்டமிட்டு இதை நடத்தி முடித்தனர். எனினும் கலவரத்தைத் தூண்டியவர்கள் யாரும் இதுவரை தண்டிக்கப்படவில்லை.



இந்தக் கலவரத்தின் நேரடி சாட்சியாக இருந்த அமிதவ் கோஷ் தனக்கு நேர்ந்த மூன்று அனுபவங்களைச் சொல்கிறார். ஒன்றில் அவர் பயணம் செய்து கொண்டிருந்த பஸ்ஸில் இருந்த ஒரு சீக்கியரை, தாக்க வந்தவர்களிடமிருந்து பயணிகள் மறைத்துக்காப்பாற்றுகின்றனர். மற்றது ஒரு இந்துக் குடும்பம் ஆபத்து என்று தெரிந்தும் பக்கத்து வீட்டில் வசித்த ஒரு முதிய சீக்கியத்தம்பதியரைக் கொல்ல வந்தவர்களிடமிருந்து காப்பாற்றிய சம்பவம். மூன்றாவதில் கலவரக்காரர்களுக்கு எதிராக முழக்கமிட்டுச்சென்ற அமைதி ஊர் வலத்தில் அவரும் பங்கேற்ற அனுபவம். கலவரக் கும்பல் அவர்களைக் கடும் ஆயுதங்களுடன் கொல்ல வருகிறது. ஊர்வலத்திலிருந்த பெண்கள் ஆண்களைச்சுற்றி வளையமிட்டு நின்றதைக்கண்ட வன்முறையாளர்கள் தயங்கிப் பின்வாங்குகின்றனர்.

18 ஆண்டுகளுக்குப் பின் இதை நினைவுகூரும் அமிதவ் கோஷ், ஒரு எழுத்தாளனின் பணி என்ன? எழுதுவதா, இல்லை ஊர்வலத்தில் பங்கு பெறுவதா? அதாவது சமூக அரசியல் செயற்பாடுகளில் பங்கு பெறுவதா? என்கிற கேள்வியை எழுப்புகிறார்.

பங்குபெறும்போது நமது அனுபவம் விரிவடைகிறது. இது போன்ற பேரழிவுக் கலவரங்கள் வெறும் வன்முறையால் மட்டும் நிரம்பி இருக்கவில்லை. மானுட நேயமும் இன, மத, மொழி வேறுபாடுகளைத்தாண்டிய மனித நேயமும் இந்த வன்முறை களுக்கிடையே ஊடாடி நிற்கின்றன.

இந்தக்கலவரங்களை எழுதுவது என்பது எத்தனை பேர் செத்தார்கள், எப்படியெல்லாம் அந்தப்பேரழிவு நிகழ்ந்தது என விவரிப்பது மட்டுமல்ல. அதை ஒரு தொலைக்காட்சி செய்தி நிகழ்ச்சியே இன்னும் சிறப்பாகச் செய்துவிட முடியும். எழுத்தாளனின் பணி வேறு. இந்த வன்முறையை மட்டுமல்ல, இது போன்ற வன்முறைகளின் அர்த்தத்தை, எல்லாவற்றினூடாகவும் விகசிக்கும் மானுடத்தை அது வெளிக்கொணர வேண்டும்.

அத்தகைய அழகியல் ஒன்று இன்று உருப்பெற்றுள்ளதா? இல்லை என்றுதான் தோன்றுகிறது. ஒருவகையான aesthetics of indifference, சமூகப் பிரச்சினைகளிலிருந்து ஒதுங்கிய அழகியல், அல்லது ஒரு வகையான வரட்டுக் கோட்பாட்டுடன் சமூகப் பிரச்சினைகளை அணுகி அரசியல் கறார்த்தன்மையை நிலை நாட்டுதல் என்பதுதான் இன்றைய பெரும்பான்மைப் போக்காக இருக்கிறது. இது அத்தனை உவப்பளிக்கக்கூடிய ஒன்றல்ல.

- அ.மார்க்ஸ் -



தியான முறைகள் பற்றித்தெரிந்து கொள்ள விரும்பி அந்தப் பெரிய வரை அணுகியபோது என்னை மேலும் கீழுமாக ஏற இறங்கப்

# இதயத்தில் கை வை!

பார்த்துவிட்டு, அவர் கேட்ட முதல் கேள்வி இது:

"நீ யார்?"

என்ன பதில் சொல்வது - குழம்பினேன்.

"நானா...ம்ம்... என் பெயர் கனகசுப்புரத்தினம் சாமி!"

"உன் பெயரைக்கேட்கவில்லை. நீ யார், அதைச் சொல்லு?"

அவர் எதைக்கேட்கிறார் என்றே புரியவில்லை. சரி நமக்குத்தோன்றுவதைச் சொல்லுவோம் என்று தீர்மானித்து "நான் ஒரு மனிதன்!" என்றேன்.

"போதாது... உணர்வோடு சொல்... நீ யார்?"

எனக்கு அலுத்துவிட்டது. "இந்தக்கிழவனிடம் ஏன்டா வந்தோம்?" என்றிருந்தது. இருந்தாலும் பணிவுடன், "நான் மனிதன் சாமி!" என்றேன்.

"ம்ம்.... அப்படிவா, வழிக்கு!"

என்ன வழிக்கு வந்துவிட்டோம்? அதே பதிலைத்தானே திரும்பச்சொன்னோம். குழப்பமாய்ப்பார்த்தேன்.

"இப்போது உன் கையை எங்கே வைத்து "நான் மனிதன்" என்று சொன்னாய்?"

"ஏன்... கையை நெஞ்சில் வைத்து மனிதன் என்று சொன்னேன்!"

"நான் என்பதைக்காட்டுவதற்கு கையை எங்கே வைக்கிறோம்?"

"இதயத்தின் மீது!"

"ஏன் மூளை இருக்கக்கூடிய தலையில் கைவைத்து நான் என்று சொல்லவில்லை?"

"தெரியவில்லை சாமி!"

"இந்த உல்க வாழ்க்கைக்கு முதலில் இதயம்தான் வேண்டும். அதன்பிறகுதான் மூளை. அதனால்தான் "நான்" என்பதைக்காட்ட இதயத்திற்கு நேராக கைவைக்கிறோம். மூளையில் கை வைப்பதில்லை. போ.. இதயத்தில் அன்பை நிறைத்து, கண்ணை மூடு. தியானம் தன்னால் கூடும் என்று சொல்லி என்னை அனுப்பிவிட்டார்!

('நினைவாற்றல் வளரச் சில எளிய பயிற்சிகள்' நூலில் இரா. கனகசுப்புரத்தினம்.)

பான்கெய் என்ற ஜென் குரு. தன்னுடைய சிஷ்யர்களுக்குப் போதனை செய்துகொண்டிருந்தார்.

அப்போது அங்கே ஒரு பூசாரி வந்தார். உள்ளூர்க் கோவிலில் வழிபாடு நடத்துகிறவர் அவர். புத்தர்மீதோ ஜென்மீதோ அவருக்கு நம்பிக்கை இல்லை.

ஆகவே, அவர் புத்தரை இழிவுபடுத்திப் பேசினார். "ஜென் என்பது சுத்தப் பைத்தியக்காரத்தனம்" என்றார்.

பான்கெய் அவரைக் கண்டிக்கவோ மறுக்கவோ இல்லை. "ஐயா, உங்களுக்கு என்ன பிரச்சினை?" என்றார் அமைதியாக.

"எங்களுடைய சாமி என்னென்ன அதிசயங்கள் செய்திருக்கிறது, தெரியுமா?"


"தெரியவில்லை, சொல்லுங்கள்!"

"அவர் நீர்மேல் நடப்பார், தீயை அள்ளி விழுங்குவார், அவர் ஒரு சொடக்குப் போட்டால் தங்கம் கொட்டும், நடனம் ஆடினால் பூமியே நடுங்கும்!" என்றார் பூசாரி. "இதுபோல் எந்த அதிசயமும் செய்யாத உங்கள் புத்தரையோ மற்ற ஜென் துறவிகளையோ கடவுள் என்று எப்படி என்னால் ஏற்றுக்கொள்ளமுடியும்?"

"நீங்கள் நினைப்பது சரிதான் ஐயா" என்றார் பான்கெய். "ஆனால், எங்களால் வேறொரு பெரிய அதிசயத்தைச் செய்யமுடியும்."

"அதென்ன?"

அமைதியாகச் சொன்னார் பான்கெய். "யாராவது தப்புச்செய்தால், எங்களுக்குத் துரோகம் இழைத்தால், அவமானப்படுத்தினால், அவர்கள் மீது எந்த வன்மமும் மனத்தில் வைத்துக்கொள்ளாமல் முழுமையாக மன்னித்துவிடுவோம்!"



# ஜென் கதை

# முதலாளி

மாடர்ன் தியேட்டர்ஸில் கதை, நடிப்பு, இசை, நடனம், பாட்டு என ஒத்திகை நடத்துவதற்கு பல அறைகளுடன் கூடிய மண்டபம் இருந்தது. இங்கு நடிகர்கள், பாடகர்கள், இசையமைப்பாளர்கள், கதை இலாகாவினர், ஸ்டண்ட்காரர்கள் எல்லோரும் நிரந்தரமாகவே தங்கியிருந்தனர். எல்லோருக்கும் மாதச்சம்பளம் வழங்கப்பட்டது. நடிகர்கள் மனோகர், நம்பியார், ஓ.ஏ.கே.தேவர், கே.கே. சவுந்தர், மனோரமா, வரலட்சுமி, பாடகர்கள் டி.எம்.சௌந்தரராஜன், சீர்காழி கோவிந்தராஜன், ஏ.எல்.ராகவன், எஸ்.சி.கிருஷ்ணன், இசையமைப்பாளர்கள் ஜி.ராமநாதன், எம்.எஸ்.விஸ்வநாதன், கே.வி.மகாதேவன் போன்றோரெல்லாம் நிரந்தரமாக ஒத்திகை மண்டபத்தில் தங்கியிருப்பரர்கள்.

அங்கேயே சாப்பாடு. சனிக்கிழமை, புதன்கிழமைகளில் எண்ணெய் தேய்த்து குளிக்க ஏற்பாடு. தண்ணீருக்குள் நின்று சாதகம் செய்வோருக்கு குளம். ஸ்டண்ட்காரர்கள் கத்திச்சண்டை, சிலம்பாட்டம், மல்யுத்த பயிற்சிகளைப்பெற வசதி எல்லாம் உண்டு. நடிகர்களுக்கு, காளி.என்.ரத்னம் யோசனைகள் சொல்லி பயிற்சியளிப்பார்.

படப்பிடிப்புக்கான வசன ஒத்திகை, நடன ஒத்திகை எல்லாம் இங்குதான் நடக்கும். தினமும் காலையில், ஒரு தடவை டி.ஆர்.சுந்தரம் இங்கே வந்து பார்த்துவிட்டு போவார்.

மாடர்ன் தியேட்டர்சின் ஆரம்பகால படங்களில், துணை நடிகராக தன் வாழ்க்கையை ஆரம்பித்தவர் வேணு. அவரது சுறுசுறுப்பாலும், கடுமையான உழைப்பாலும் சீக்கிரத்தில் முன்னுக்கு வந்தார். ஒத்திகை அலுவலகத்துக்கு அவரே பொறுப்பாக நியமிக்கப்பட்டார். நல்ல பெயரெடுத்தார். "வேணுவைக் கேள்!" என்ற பேச்சு எல்லாப்புறமும் எதிரொலிக்கும்.

மனிதனுக்கு நல்ல நேரம் வந்தால், அது நிரந்தரமாக நிலைத்து நிற்பதில்லை. தொடர்ந்து வருவது கெட்ட நேரம் தான்... என்றாலும், இதை யாரும் தெரிந்து கொண்டதாக தெரியவில்லை.

ஸ்டுடியோவில் எடுத்த, இரண்டொரு படங்கள் வியாபார ரீதியாக சரியாக போகவில்லை. அஞ்சலிதேவி, டி.ஆர். மகாலிங்கம் நடித்த, மாயாவதி ரிலீஸ் ஆன முதல் நாளே, படத்தின் ரிப்போர்ட் சரியாக இல்லை என்பது, தெரிந்துவிட்டது. டி.ஆர்.சுந்தரம், மாலையில் வழக்கம் போல் ஒத்திகை மண்டபத்திற்கு வந்தார். அங்கே இருக்க வேண்டிய மனேஜர் இல்லை. விசாரித்தபோது, வேணு, மாயாவதி படத்தைப் பார்க்க தன் குடும்பத்தாருடன் மாடர்ன் தியேட்டர்ஸ் காரில் போயிருப்பதாக கூறினர். வேணு வந்த பின், அவரை அருகில் அழைத்து, அவரது கன்னத்தில் ஓங்கி ஒரு அறை கொடுத்தார் சுந்தரம்.

அடிவாங்கிய வேணுவிற்கு ஆத்திரம் வந்தது. கோபத்தில் என்ன பேசுகிறோம் என்று தெரியாமல், முதலாளியை கண்டபடி திட்டிவிட்டார். மறுகணமே, வெளியேறி விட்டார். வேணுவின் சகாப்தம் முடிந்தது என்று எல்லாரும் முடிவு கட்டினர். மறுநாள் காலை,




டி.ஆர்.சுந்தரம் ஒரு ஆளை அனுப்பி, வேணுவை அழைத்து வரச் சொன்னார். வேணுவும் வந்தார்.

டி.ஆர்.சுந்தரம் எதுவும் பேசாமல், ஒரு கட்டு பணத்தை, அவரது கையில் கொடுத்து, "போய்... எங்காவது நல்லபடியாக பிழைத்துக்கொள்..." என்று சொல்லி விட்டார்.

அடித்த தானும், திட்டிய வேணுவும் இனி ஒன்றாக இணைந்து, செயற்பட முடியாது என்ற முடிவுக்கு அவர் வந்தது தான் காரணம்.

வேணு, தனியாக கம்பனி ஆரம்பித்தார். மாடர்ன் தியேட்டர்சில், இருபது படங்களுக்கு மேலாக உதவி இயக்குனராக பணியாற்றிய, கே.சோமுவை தன் முதல் படத்திற்கு இயக்குனர் ஆக்கினார். நாடகத்துறையில் அனுபவம் வாய்ந்த, ஏ.பி.நாகராஜன் கதை வசனகர்த்தாவாக உருவெடுத்தார். மாங்கல்யம், பெண்ணரசி, நால்வர் என்று பல படங்களை வேணுவும் ஏ.பி.நாகராஜனும் கூட்டுச் சேர்ந்து, வெளியிட்டனர். சம்பூர்ண ராமாயணம் அவருக்கு பெரிய வெற்றிப்படமாக அமைந்தது.

தொடர்ந்து, வேணு எடுத்த படம், முதலாளி. தன் முதலாளியை மனதில் வைத்துக்கொண்டு தான், படத்திற்கு இந்தப் பெயரை வைத்தார் என்று பேசிக்கொண்டனர். இப்படத்திற்கு கதை, வசனம், இயக்குனர் அனைவரும் புதுமுகங்கள். இயக்குனராக உருவெடுத்தது முக்தா சீனிவாசன் என்பவர். இவர் மாடர்ன் தியேட்டர்ஸில் உதவி இயக்குனராக பணியாற்றியவர். இவரது சகோதரர் முக்தா ராமசாமி. சகோதரர்கள் இருவரும், தஞ்சை மாவட்டத்தை சேர்ந்தவர்கள். பெரியவர் ராமசாமிக்கு, மாடர்ன் தியேட்டர்ஸில் டைப்பிஸ்ட் வேலை கிடைத்தவுடன், சகோதரர் சீனிவாசனுக்கு உதவி இயக்குனராக வேலை வாங்கிக் கொடுத்தார்.

இந்த சகோதரர்களும் பின்னர் சொந்தப்படக் கம்பனி ஆரம்பித்து, பல படங்களை எடுத்து, சினிமா உலகில் ஒரு நிரந்தர இடத்தை பிடித்தனர்.

(ரா. வேங்கடசாமியின் 'முதலாளி' நூலில்)

# தெரியுமா?



- அமெரிக்காவின் பல மாகாணங்களில், பெண்கள் தங்கள் உள்ளாடைகளை வெளியே உலர்த்தத் தடை உள்ளது.
- சவுதி அரேபியால் உள்ளாடைகளை வாங்கச் செல்லும்போது, கணவன் உள்பட ஆண்கள் யாருக்கும் உடன் செல்ல அனுமதியில்லை.
- பெண்கள் ஆண்களைப் போல் முழுக்கால் சட்டை அணிய வேண்டும் என்னும் சட்டம் பாரிஸில் இருந்தது. அண்மையில்தான் இந்தச் சட்டம் விலக்கிக் கொள்ளப்பட்டது.
- ஜப்பானில் தரமான பாரம்பரிய கிமோனோ ஆடைகளை உருவாக்கவும், நேபாளத்தில் கம்பளம் தயாரிக்கவும் வாழை இலைகள் பயன்படுத்தப்படுகின்றன.
- உலகிலேயே மிகப்பெரிய ரயில்வே தங்கும் அறை (வெயிட்டிங் ரூம்) சீனாவில் உள்ள பீஜிங் ரயில்வே ஸ்டே'னில் உள்ளது. 14,000 பேர் ஒரே நேரத்தில் தங்கலாம்.
- உலகிலேயே மிகப்பெரிய பொம்மை அருங்காட்சியகம் டெல்லியிலுள்ள "இன்டர்நா'னல் ரோய்ஸ் மியூசியம்" ஆகும்.
- ஹொங்கொங்கில் அம்புலன்ஸ், தீயணைப்பு நிலையம், பொலீஸ் மூன்றிற்கும் ஒரே தொலைபேசி எண் 999 ஆகும்.
- அமெரிக்காவில் ஒவ்வொரு கிறிஸ்மஸ் பண்டிகையின்போதும் நூறு கோடி கிறிஸ்மஸ் வாழ்த்து அட்டைகள் பரிமாறிக் கொள்ளப்படுகின்றன.
- 1480ஆம் ஆண்டே பரசூட் கண்டுபிடிக்கப்பட்டுவிட்டது. ஆனால் மனிதன் இதை நன்கு பயன்படுத்த ஆரம்பித்தது 400 ஆண்டுகள் கழித்துதான்.
- எதிரிகளின் மண்டை ஓடுகளை மதுக்குப்பிகளாகப் பயன்படுத்திய பயங்கரமான ரோமானியப் பேரரசர் காலிகூலா என்பவர்.
- புத்தர் பிறந்தநாளை ஜப்பானியர்கள் ".:.பிளவர்ஸ் டே" (பூக்களின் தினம்) என்று கொண்டாடுகின்றனர்.

இன்றைய சமூகத்தையும் அதன் செல்நெறி
யையும் ஆட்டிப்படைக்கும் ஒரு வஸ்து
வாக முரண்பாடு அமைந்துள்ளது. ஒவ்வொரு
செயற்பாட்டிலும் அதன் தாக்கத்தின் மோகம்
பரிணமிக்கத்தொடங்குகின்றமை கண்டு. தனிமரம்
தோப்பாகமுடியாது. பலமரங்களின் கூட்டே தோப்
பாகும். அந்த வகையிலேயே ஒன்றுபட்டால்
உண்டுவாழ்வு என்ற பழமொழி தோன்றியிருக்
கலாம். ஆனால் இன்று ஒன்றுபடவைப்பதிலும்
ஒன்றுபட்டு இருப்பதிலும் தாக்கத்தை ஏற்படுத்து
வாக முரண்பாடு அமைந்துள்ளது. பலதரப்பினா
லும் இதன் தாக்கம் பற்றி அளவளாவப்படுகின்ற
தேயின்றி இதற்கான திர்வு முன்வைக்கப்பட
வில்லை. ஒரு பிரதேசத்தின் கட்டமைப்பு சமுதாய
அபிவிருத்தி சமூகசெல்நெறி என்பவற்றில் மாற்றத்
தைக் கொண்டுவருவதில் அங்கீகரிக்கப்பட்ட
காலமறிந்து பிரச்சினையை உணர்ந்து நிலைமை
களை அறிந்து சட்டத்துக்கு அப்பால் உதவியைச்
செய்ய முனையும் போது கடமையிலுள்ள
மற்றோர் அதுபோன்ற வாய்ப்பைத்தாமும் பெற
முனையக்கூடாது. இந்த விடயத்தில் விட்டுக்
கொடுக்கும் மனப்பான்மை வலுவடைய
வேண்டும். உதவியைப் பெறுபவரும் தொடர்ந்து
வாய்ப்பைப் பயன்படுத்த முனையக்கூடாது.
இந்தச் சந்தர்ப்பத்தில் முரண்பாடு ஊற்றெடுப்
பதைத் தவிர்க்க முடியாது. இந்த நிலையில்
பாடசாலை மேம்பாட்டுக்கான வழிகளை அதிபர்
மேற்கொள்ள முனையும் போது சகிப்புத்தன்மை
பெறுமதி வாய்ந்ததாக விட்டுக்கொடுக்கும்
மனப்பான்மையும் சகிப்புத் தன்மையும்பாடசாலை
யின் செல்நெறி வளர்ச்சிக்கு உறுதுணையாக
அமையவேண்டுமெனக்கருதப்படுகின்றது.
திட்டங்களை விரும்பத்துடன் பங்கேற்கும்
பண்புடையவர்களாகவும் திகழ்கின்றனர். எனவே
இத்தருணத்தில் செயற்பாடுகள் மந்தடையும்
போது பெற்றோரிடையே ஏற்படும் அதிருப்தி
நிலை முரண்பாட்டைத்தோற்றுவிக்கும் மாறா
கக்கல்வி பற்றிக்கொண்டிருக்கும் கருத்துக்களில்
தெளிவின்மையும் முரண்பாடுகளைத்தோற்று
விக்கலாம்.

பெற்றோரில் சிலர் பாடசாலைகளில் கற்றல்
மட்டுமே நிகழ வேண்டுமென எதிர்பார்ப்பர் சிலர்
இணைப்பாடவிதானச்செயற்பாட்டை விரும்புவர்
பலர் இரண்டையும் விரும்புவர் சிலர் ஒழுக்கம்,
பெறுமானம் மற்றும் குணவியல்புகளில் மேம்
பாட்டை விரும்புவர் ஒட்டுமொத்தமாக சிலர்
எல்லாவற்றையும் விரும்புவர் இவர்களை நாம்

# முரண்பாடுகளை உடைத்து எறிவோம்



நிறுவனமாகப்பாட
சாலைகளே அமைந்
துள்ளன. இந்தச்
செயற்பாட்டைப்பாட
சாலைகள் உச்சவிருத்
தியாக வழங்கியுள்ளன.
என்பது மறுப்பதற்கில்லை.
ஆயினும் சமகாலத்தில்
இதற்கான பங்களிப்பை
வழங்குவதில் பாட
சாலைகள் பல இழு
பறிநிலைகளைச்சந்திக்க
வேண்டியுள்ளது.
இதற்கான பல
காரணங்கள்
எடுத்தியம்பப்பட்ட
போதும் இங்கு
தலைவிரித்தாடும் உள்ளக
முரண்பாடுகளே பாரிய
தாக்கத்தை ஏற்படுத்
துகின்றன.

சமுதாயத்துக்கு நற்பிர

தவறெனக்கூறுவது
பொருத்தமற்றது எனவே
எதிர்பார்ப்புகள் நிறை
வேறாத விடத்து முரண்
பாடுகள் ஊற்றெடுப்பது
தவிர்க்க முடியாது.

**கடமைக்கு மதிப்பளிப்போம்.**

பாடசாலையிலுள்ள
மாணவர் தொகையே
ஆசிரியர் எண்ணிக்கையைத்
தீர்மானிக்கிறது. அதுவே
எமக்கு வேலைவாய்ப்
பைத்தீர்மானிக்கிறது.
வேலைவாய்ப்பால் கிடைக்
கும் ஊதியமே எமது
வாழ்வாதாரத்துக்குத்
துணையாகவிருக்கிறது.
என்பது நித்திய உண்மை
இதைப்பாடசாலைப்பணியாளர்

## காய்க்கும் மரத்துக்கு கல்லெறி அதிகம்

சைகளை விளைவிக்கும் விளைநிலமாகப்
பாடசாலைகள் அமைந்துள்ளன. இங்கு விளை
விப்பாளராகச் செயற்படுபவர்கள் ஆசிரியர்களே.
அவற்றைச் சரியாக நடைமுறைப்படுத்துதலில்
பல துறைசார்ந்தோர் பக்கத்துணையாக இருந்து
வருகின்றனர். பாடசாலை விடயங்களில் ஆசிரியர்
களுக்கும் மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும்
மற்றும் துறைசார்ந்தோர்கட்கும் வகை கூறுப
வராகச் செயற்படு தனிமனிதனாகத்திகழ்பவர்
அந்தப்பாடசாலையின் அதிபரேயாவார். அவரும்
தானாகத்தோன்றவில்லை. மாறாக ஆசிரியத்
தொழிலிலின்றும் கூர்ப்புப்பெற்ற ஒருவரே அவர்.
எனவே ஆசிரியர் தொழிலில் ஈடுபடுவதிலிருந்து
தினமும் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்
கொடுக்க வேண்டியுள்ளது அந்த விடயத்தில்
எம்மில் பலர் இலகுவாகத்தீர்வுகளை இனங்கண்டு
முரண்பாடுகளிலிருந்து விலகிக்கொள்கிறோம்.
சிலர் தீர்வுகாண முடியாமல் தவிக்கிறோம்.
பிரச்சினைகளை விளங்கிக்கொள்ளாமல்
குழம்புகின்றோம். சிலர் முரண்பாடுகளைத்
தோற்றுவிப்பதில் கண்ணுங்கருத்துமாக
இருக்கிறோம். எனவே அறியாமையும்
புரியாமையுமே முரண்பாட்டின் தோற்று
வாயாகின்றது.

### சகிப்புத்தன்மை வற்றிவிட்டதா?

பாடசாலை கட்டமைப்பிலுள்ள அனைத்துத்
தரப்பினரிடையேயும் கட்டாயம் இத்தன்மைவிர
விக்காணப்படவேண்டும். பாடசாலைக்குடும்பத்தில்
சிக்கலான உறவுகள் பரிணமிப்பதைத்தவிர்த்து
நித்திய உறவை வளர்த்து அதன் வழியாக உரிய
இலக்கை எய்த முயற்சிக்க வேண்டும். இத்தன்மை
அன்னியமாகும் போது முரண்பாடு என்ற அழுத்
தம் தனது செயற்பாட்டை ஆரம்பிக்கும் பிரச்சினை
இல்லாதவன் மனிதனல்ல. எனினும் ஒரு தனிமனி
தனுடைய பிரச்சினை தொழில் நிலையத்தில்
அகோரம் கொள்ள முடியாது. இது அதிபர்
தொடக்கம் சிற்றூழியர் வரை பொருந்தும். சில
சந்தர்ப்பங்களில் உத்தியோகத்தர் ஒருவருக்கு
உறங்கு நிலையில் உள்ள பாடசாலைகளை
விட இயங்கு நிலையிலுள்ள பாடசாலைகளி
லேயே எண்ணற்ற முரண்பாடுகள் தோற்றம்
பெறுகின்றன. என்பது ஒருபுறம் உறங்கு நிலை
யிலுள்ள பாடசாலைகளை இயங்கு நிலைக்குத்
தயாராக்கும் போது முரண்பாடுகள் தோன்றுவது
மறுபுறம் இதற்காக ஒருவர் பலவகிபங்குகளை
வகிக்க வேண்டியிருக்கும். அதைவிடப்
பாடசாலையில் பல குழுக்கள் இயங்கிக்கொண்டி
ருக்கும் இந்தக் குழுக்களிடையே வகைதெரியாத
போட்டி நிலை உருவாகும். ஒவ்வொரு தரப்பின
ரும் தத்தமது குழுக்களிடையே அதிகாரங்கள்
நிலைநாட்டப்பட வேண்டும் என்பதில் ஆர்வ
முடையவராக இருப்பர். இதனால் குழு முரண்
பாடு தலைவிரித்தாடும் இது ஆசிரியர்கள்
செயற்றிறனை மழுங்கச்செய்யும்.

### கல்வியில் ஆர்வமுள்ள பெற்றோரின் இயல்புகள்

கல்விச்செயற்பாட்டில் அதீத அக்கறையுடைய
வர்களாகச்சமகாலப்பெற்றோர்களில்
கூடுதலானோர் ஆர்வமுடையவர்களாக உள்ளனர்.
இந்தநிலையில் வலுவுள்ளோர் நகர்ப்புறத்தை
நாடிச்செல்ல மற்றையோரும்
கிராமப்புறப்பாடசாலைகளில்
அக்கறையுடையோரும் தமது
பிள்ளைகளைகளைப்பாடசாலைகளில்
இணைப்பதில் ஆர்வலாகவுள்ளனர். எனவே
பெற்றோர்களின் வகிபங்கும் பாடசாலைகளால்
தீர்மானிக்கப்படுகின்றமையும் முக்கியமான
விடயமாகும். எனவே இவர்கள் பாடசாலையின்
தொழிற்பாட்டை உன்னிப்பாக அவதானித்தும்
கொண்டிருக்கின்றனர். பிள்ளைகளின்
செயற்பாட்டில் வலுவான ஊக்குவிப்பைத்தர
முயற்சிக்கின்றனர். அதிபர் ஆசிரியர் கூறுவதைத்
தெளிவாக நம்புகின்றனர். பாடசாலைமட்டத்தில்
நல்ல பெற்றோராகத் திகழவும் பாடசாலை
விழுமியங்களைப் பின்பற்றி பாடசாலை நிகழ்ச்சித்
கள் உணர்ந்து கொள்ளவேண்டும். கடமைக்காக
வந்த நாம் கடமையை மறுதலிக்கும் போதே
பிரச்சினை உருவாகிறது. தற்காலிகமான எமக்கும்
கிடைக்கும். சலுகைகளை உரிமையாக மாற்ற
எந்தனிக்கக்கூடாது. நிறுவனத்தில் ஒருவரின்
பலவீனத்துக்காகசட்டத்துக்கு அப்பால் கருணை
காட்டும்போது பலமானவர் தானும் அதை
அனுபவிக்க நினைப்பதைத்தவிர்த்து மாண
வர்நலனில் அக்கறையுடையவராகவும்

*மு.விக்னேஸ்வரன்*
*அதிபர்*
யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்.

நிர்வாகத்துடன் ஒத்தாசையுடையவராகவும் இருக்க
வேண்டும் இல்லையேல் அசைவுகள்
ஒவ்வொன்றும் முரண்பாட்டைத்தோற்றுவிக்கின்றது.

பாடசாலை அதிபர்களின் அளவுக்கு மிஞ்சிய
அதிகாரம் ஆசிரியர்களிடத்தில் ஒத்துப்போகாத
தன்மை பெற்றோரை மதிக்காமை நெகிழ்சிப்
போக்கற்ற தன்மை போன்ற இன்னோரன்ன
காரணிகளால் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில்
தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இந்நிலையில்
பெற்றோர்கள் இப்பாடசாலையில் பிள்ளை
களைச்சேர்ப்பதில் பின்னிற்கின்றனர். இந்நிலையும்
பாடசாலையில் உள்ளக முரண்பாட்டைத்தோற்று
விக்கின்றது.

பொதுவாக கூறுமிடத்து சட்டதிட்டங்களுக்கும்
மனச்சாட்சிக்கும் மதிப்பளித்து உத்தியோகத்தர்கள்
பணியாற்றுவதன் மூலம் உள்ளக
முரண்பாட்டைத்தவிர்த்து ஆரோக்கியமான
கற்றல்சூழ்நிலையை ஏற்படுத்த நல்லதோர்
சமூகக்கட்டமைப்பையும் உருவாக்க உறுதி
பூணுவோம்.

# நுளம்பு பரவுவதற்கான காரணிகள் தனியார் வீடுகளில் அதிகம்

## தெரிவிக்கிறது ஆய்வு அறிக்கை

(யாழ்ப்பாணம்)

டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு யாழ். மாவட்டத்தில் பிராந்திய சுகாதாரசேவைகள் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளுக்கு பல அரச திணைக்களங்கள், பாடசாலைகள் மற்றும் தனியார் நிறுவனங்கள் வீடுகள், பொது இடங்கள் உள்ளாக்கப்பட்டன.

இவற்றில் பல அமைப்புக்கள் டெங்கு நுளம்பு பரவுவதற்கு ஏதுவாக அமைந்ததாக இனங் காணப்பட்டுள்ளதாக ஆய்வு அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

கடந்த 1ஆம் திகதி முதல் 7ஆம் திகதி வரையான ஒருவாரகாலம் இப்பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கமைய 425பாடசாலைகளும் 473 அரச திணைக்களங்களும் 71288 தனியார் நிறுவனங்கள் வீடுகள் என்பனவும் பரிசோதனைகளுக்கு உள்ளானதாக தரவுகள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் போது நுளம்புகள் பரவுவதற்கு ஏதுவான வகையில் 68 பாடசாலைகள் இனங்காணப்பட்டதுடன் ஒருபாடசாலையில் டெங்கு நுளம்புகளின் பெருக்கமும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 67 அரச திணைக்களங்களிலும் நுளம்பு பரவுவதற்கான காரணிகள் காணப்பட்டுள்ளதுடன் 7 திணைக்களங்களில் நுளம்பு பெருக்கம் கண்டுபிடிக் கப்பட்டுள்ளது.

இதேவேளை 8797 தனியார்இடங்களில் நுளம்பு பெருகுவதற்கான காரணிகள் கண்டு பிடிக்கப்பட்டு அவர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதுடன் 234 இடங்களில் டெங்குநுளம்பு பெருக்கத்தை கண்டு பிடித்து அழிக்கப்பட்டதாக ஆய்வு அறிக்கையின் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை ஊர்காவற்றுறையில் ஒரு பாடசாலையும், பருத்தித்துறையில் 4 அரச திணைக்களங்களும், தெல்லிப்பளை பிரதேசத்தில் 67 தனியார் வீடுகளிலும் இந்த் டெங்குநுளம்பு கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும் பருத்தித்துறை பிரதேசத்தில் 18 பாடசாலைகள் 22 அரச திணைக்களங்களில் டெங்கு நுளம்பு பரவ காரணிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும், வேலணைப் பிரதேசத்தில் 1212 தனியார் வீடுகளிலும் இவ்வாறு டெங்குநுளம்பு பரவுவதற்கான காரணிகள் கண்டு பிடிக்கப்பட்டதாகவும் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவினரின் கள ஆய்வு அறிக்கை தெரிவிக்கின்றது.

# தள்ளாத வயதிலும் தளராத வைராக்கியம்

(திருநெல்வேலி)

'பெற்ற மனம் பித்தும் பிள்ளை மனம் கல்லும்' என சொல்வார்கள் ஆனால் கைதடி அரச முதியோர் இல்லத்தில் இது மாறுபட்டுள்ளது.

கடந்த ஒரு வருடமாகக்கைதடி இல்லத்தில் அரியாலையை சேர்ந்த சுமார் 65 வயதுடைய முதியவர் ஒருவர் தங்கி வாழ்கின்றார். இவருக்கு மனைவியும், நான்கு பெண் பிள்ளைகளும் உள்ளார்கள் தினமும் நிறையக்குடித்துவிட்டு வந்து குடும்பத்தைக்கவனியாது இருந்தமையினால் இவரது குடும்பம் மிகவும் இன்னல்களுக்குள்ளானது பிள்ளைகளின் தாயாரின் சகோதரன் உதவிகளை அவ்வப்போது செய்து வந்தமையினால் பெண் பிள்ளைகளும் வளர்ந்து கல்யாணமாகிக்குடும்பத்தில் இணைந்தனர்.

கடந்த வெள்ளி இம்முதியவரின் மகள் ஒருவர் கைதடி முதியோர் இல்லத்தில் தங்கிவாழும் தனது தந்தையைப்பார்ப்பதற்கு வந்திருந்தார். தந்தையைக்கண்டதும் மகளும் மகளைப்பார்த்ததும் தந்தையும் ஒருவரையொருவர்பாசத்துடன் கட்டியணைத்து ஆனந்தக்கண்ணீர் வடித்தனர். பின்னர் தனது தந்தையைக் குடும்பத்துடன் இணைத்துக்கொள்ளத் தான் வந்திருப்பதாகவும், தந்தையை உடன் தன்னுடன் வந்து விடுமாறும் மகள் கேட்டுக்கொண்டார். ஆனால் இதற்குத் தந்தையார் மறுப்புத்தெரிவித்ததோடு தான் இறந்தாலும் தனது உடலைதன் குடும்பத்தாரிடம் கொடுக்கவேண்டும். எனவும் இல்ல உத்தியோகத்தர்களிடம் திடமாகத்தெரிவித்துக்கொண்டார். இதனைக்கேட்டதும் மகள் திகைப்படைந்ததுடன் தந்தையாரின் பிடிவாதம் குறித்தும் கண் கலங்கினார்.

பிள்ளைகளாகிய தாங்கள் தற்போது நல்ல நிலைமையில் இருக்கும் போது தமது தந்தையார் யாருமற்ற அநாதையாக எதற்காக முதியோர் இல்லத்தில் தங்கி இருக்கவேண்டும். என்பது இம் மகளினது ஆதங்கமாகும். (137)

# பட்டப் பின் கல்வி டிப்ளோமா பாடநெறிக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ். நிருபர்)

2014ஆம் கல்வி ஆண்டுக்கான் ஒருவருடகால பட்டப்பின் கல்வி டிப்ளோமா முழுநேரப்பாட நெறியைத்தொடர தகுதியானோரிடமிருந்து கல்வியமைச்சு விண்ணப்பங்களைக்கோரியுள்ளது.

யாழ்ப்பாணம், கொழும்பு, பேராதனை ஆகிய மூன்று பல்கலைக்கழகங்களில் மட்டுமே இப்பாடநெறி நடைபெறும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழியிலும், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சிங்கள மொழியிலும், கொழும்பு பல்கலைக்கழகத்தில் சிங்கள, தமிழ் ஆகிய மொழிகளிலும் இப்பாடநெறி நடைபெறும்.

விண்ணப்பதாரி 50 வயதுக்கு மேற்படாத பட்டதாரியாக இருத்தல் வேண்டும். இலங்கை ஆசிரியர்சேவை அதிபர் சேவை, கல்வி நிர்வாக சேவை ஆசிரியர்கல்வியியலாளர் சேவை ஆகிய சேவைகளில் ஒன்றில் நிரந்தரமாக இருத்தல்வேண்டும். 05.08.2013 அன்று ஒருவருடகாலத்தையாவது சேவையாகப்பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். சகல விண்ணப்பதாரிகளும் எழுத்து மூலப்பரீட்சைக்குத்தோற்ற வேண்டும். பரீட்சை கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களில் தமிழ், சிங்கள மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்ப முடிவுத் திகதி 05.08.2013 ஆகும். (10)



மண்டைதீவு திருவெண்காடு ஸ்ரீசித்திவிநாயகர் ஆலயத்துக்கான இராஜகோபுரம் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டு துரித கதியில் இடம்பெற்று வருகின்றன. (21)

# வேலை வாய்ப்புச் செய்திகள்

யாழ். நகரில் இயங்கிவரும் BioChem நிறு வனத்தின் 2ஆவது கிளை வவுனியாவில் திறக்கப்படவுள் ளது. இக்கிளையின் நிர்வாகப்பிரிவுக்கு 25பேருக்கும் குறைந்த இளைஞர், யுவதிகள் சேர்த்துக்கொள்ளப் படவுள்ளனர். தங்குமிட வசதிகள் இலவசம். தொடர்புக்கு 0773745831, 0773466511, 0776795940.

---

எங்கள் நிறுவனத்திற்கு யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களுக்கு விற்பனை விநியோகஸ்தர்கள்தேவை. (எமது பொருட்கள் சோயா, நூடில்ஸ், பப்படம், ஜாம் ஏனைய 78 வகை பொருள்கள் தகுதி வங்கி உத்தரவாதம், வாகன வசதி, அனுபவம் பத்துநாள்களுக்குள் உங்கள் விண்ணப்பங்களை இம் முகவரிக்கு அனுப்பவும். Chant Lanka (pvt) ltd, Mapolagama Ethumale, Galle, Fax: 0915634185 Field Sales njhlh: Gfs;: - R.Rajeev தொடர்புக்கு: 0752018742, 0713055894, 0772253181.

---

வாகனத்தில் பொருட்களைக்கொண்டுசென்று விநியோகிப்பதற்கு வேலையாள்கள் தேவை. தொடர்புக்கு 0777240612. முன்னனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

---

அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானத்துக்கு நித்திய பூஜைக்கு அந்தணக்குருக்கள் தேவைப்படுவதால் 17.07.2013 புதன்கிழமை மு.ப. 11 மணிக்கு விரும்பியோர் தலைமைச்சான்றிதழ்களுடன் சமூகம் தரவும். வேதனம் பேசித்தீர்மானிக்கப்படும். தலைவர் கி. கணேசமூர்த்தி.

---

பிரபல ஆங்கில மொழி மூல பாலர் பாடசாலைக்கு மானிப்பாய், அச்சுவேலி, சுன்னாகம் ஆகிய இடங்களுக்கு ஆசிரியர் தேவை. G.E.C.(O/L) பரீட்சையில் கணிதம், ஆங்கிலம் உட்பட சித்தியடைந்தவர்கள் 20.07.2013 சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் 64,கோயில் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு சுயவிபரக்கோவையுடன் நேரில் வரவும். 021 2225796, 0777009653.

---

யாழ்ப்பாண தமிழ் குடும்பமொன்றுக்கு இரண்டு பிள்ளைகளை பராமரிக்கவும் வீட்டு வேலைக்கும் பொறுப்புகளற்ற, சுறுசுறுப்பான, வயது 30 -45க்கு உட்பட்ட தமிழ் பெண்உடன்தேவை. சில வேளை வெளிநாடு செல்ல வேண்டி வரலாம். இரண்டு வருட ஒப்பந்தம், ஆரம்ப சம்பளம் 32, ரூபா தொடர்புக்கு 0773597271, 2733283.

---

வவுனியா, பிலிமத்தலாவை, கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் கிளைகளைக்கொண்டு இயங்கும் பிரபல இந்தியன், சைனீஸ் ரெஸ்டுரண்டுக்கு கிளீனர்ஸ் (Cleaners) சிச்சன் ஹெல்பர்ஸ் (kitchen Helpers) மற்றும் வெயிட்டர்ஸ் (Waiters) ஆகியோர் தேவை. தகுதிக்கும் அனுபவத்துக்கும் உங்களின்திறமைக்குமேற்ப சம்பளம் தரப்படும். சாப்பாடு, தங்குமிட வசதிகள் உண்டு. தேவையானவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். வயது 18-50 உட்பட்டவர்கள் மட்டுமே தொடர்புகளுக்கு 0777585913 (வவுனியா) or 0777222422 (பிலிமத்தலாவை) or 0777304545 (கொழும்பு & யாழ்ப்பாணம்.)

---

திருகோணமலையில் உள்ள பிரபல தொழில் நிறுவனமொன்றிற்கு உடனடியாக தொழிலாளர்கள், நிறுவன உதவி. விற்பனையாளர்கள், விற்பனை உத்தியோகஸ்தர்கள் தேவை. பொருத்தமான சம்பளம் வழங்கப்படும். உங்கள் தொடர்புகளுக்கு 0755577522.

---

கொழும்பில் உள்ள வேலை தளத்திற்கு திறமையான மேசன் பாஸ் மற்றும் உதவியாட்கள் தேவை. அன்றாட செலவு பணம் மாத சம்பளம் 0772249401.

---

கூடிய சம்பளம் நிரந்தர தொழிலை பெற்றுக்கொள்ள விருப் பமா?...டொபி,பிஸ்கட் , சொக்கலேட், பழச்சாறு, கிளவுஸ்போன்ற வற்றுக்கு உற்பத்தி, பொதியிடல், லேபல் போன்ற பிரிவுக ளுக்கு அநுராதபுரம், பொலன்னறுவை, வவுனியா உட்பட நாட்டின் அனைத்து பிரதேசங்களிலுமுள்ள 18-50 வயதான ஆண்,பெண் தேவை. உணவு, தங்குமிடம் உண்டு. வருகை தரும் நாளிலேவேலை வாய்ப்பு நண்பர் குழுக்கள், தம்பதி யினராகவும் தொடர்பு கொள்ளலாம் தொடர்புக்கு 0778176234, 0774430166.

## விருது வழங்கிக்கௌரவம்



அகில இன நல்லுறவு ஒன்றியத்தினால் வருடந்தோறும் வழங்கப்படும் சமய, சமூக, கலாச்சார சேவைகளுக்கான சாம சிறி விருது விழா கடந்த 29.06.2013 அன்று இரத்தினபுரி நகர மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் சாம சிறி "தேச கீர்த்தி" எனும் கௌரவ விருதினை இளவாலையைச் சேர்ந்த சமூக சேவைகளும் உளவளத் துணையாளருமான திரு.ஆசிர் வாதம சான்பெனற் என்பவருக்கு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கௌரவ எம்பி.பாறுக் அவர்கள் வழங்கிக் கௌரவித்தார். அருளில் இன நல்லுறவு ஒன்றிய நிர்வாகத்தினரும் காணப்படுகின்றனர்.

விருது பெற்றவர் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் பழைய மாணவர் ஆவார்.

## வன்னியில் நான்கு தேசியப் பாடசாலைகள்; புதிய திட்டத்துக்கு அமைச்சரவை சம்மதம்

யுத்தம் பாதிப்புக்குள்ளாகிய வன்னிப்பகுதியில் கல்வி அபிவிருத்தியை மேலும் வலுவாக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

இதற் முதற்கட்டமாக அந்தப் பகுதிகளில் நான்கு தேசியப் பாடசாலைகள் நிறுவப்படவுள்ளது.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் நான்கு தேசியப் பாடசாலைகளை நிறுவுவதற்கு ஏற்கனவே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதற்கமைய கிளிநொச்சி மத்திய கல்லூரி, முழங்காவில் மத்திய கல்லூரி முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி மற்றும் மல்லாவி மத்திய கல்லூரி ஆகிய பாடசாலைகளே தேசிய பாடசாலைகளாகத் தரமுயர்த்தப்படவுள்ளன. (10)

## மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள்

(சாவகச்சேரி)

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்தில் இம்முறை க.பொ.த உயர்தர பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

இன்று முற்பகல் 10 மணிக்கு வித்தியாலய அதிபர் வே.கந்தசாமியினால் வழங்கப்படவுள்ளது. எனவே பரீட்சைக்குத் தோற்றும மாணவர்களை தேசிய அடையாள அட்டையுடன் பாடசாலைக்கு இன்று சமூகமளித்து அனுமதி அட்டைகளை பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி உயர்தரப் பரீட்சை ஆரம்பமாகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

## "திவிநெகும" வேலைத் திட்டம் மன்னாரில் அமுலாகிறது

மன்னார்-முசலி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட 20 கிராம உத்தியோகத்தர் பிரிவிற்கு பழ மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை முசலி பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் தலைமையில் இடம்பெற்றது.

திவிநெகும தேசிய வேலைத திட்டத்தின் கீழ் பொருளாதார அபிருத்தி அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் கிராமங்களுக்கு பழ மரக்கன்றுகள் வழங்கும் செயற்திட்டத்திற்கமைவாக இவை வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதேச செயலகத்தில் பணியாற்றும் அபிவிருத்தி இணைப்பாளரும் முசலி பிரதேச இணக்கசபை தலைவருமான முஹம்மட் றாபியினால் பயனாளிகளுக்கு ஒருவருக்கு பழ மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

## அடையாள அட்டை இல்லாதோருக்கு யாழில் சேவை தொடரும்

தேசிய அடையாள அட்டைகள் இல்லாதவர்கள் மற்றும் பழுதடைந்த அடையாள அட்டைகளைப் புதுப்பிக்க வேண்டியவர்கள் ஆகியோருக்கு அவற்றைப் பெறுவதற்கும் புதுப்பிப்பதற்குமான விரைவான சேவைகள் ஆட்பதிவுத திணைக்களம் நடத்தி வருகிறது.

எதிர்வரும் செப்ரம்பர் மாதத்தில் நடைபெறவுள்ள 3 மாகாண சபைகளின் தேர்தல்களில் பொதுமக்கள் வாக்களிப்பதற்கு அடையாள அட்டைகள் அவசியம் என்பதால் இவற்றை துரிதமாக வழங்குவதற்கு ஆட்பதிவுத்திணைக்களம் நடவடிககைகளை மேற்கொண்டுள்ளது.

தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்வதற்கான நடமாடும் சேவைகள் பிரதேச ரீதியாக நடைபெற்று வருகிறது. இது தொடர்பான அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டம் நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த வெள்ளிக் கிழமை நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர நாயகம் சரத்குமார யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம அருமைநாயகம் ஆகியோர் அடையாள அட்டைகளைப பெற்றுக் கொள்வதற்கான நடமாடும் சேவைகள் பற்றி அதிகாரிகளுக்கு விளக்கமளித்துள்ளனர். (10)

## அனுமதிப்பத்திரங்களில் தவறுகள் இருந்தால் உடன் அறிவிக்கவும்

இம்முறை இடம்பெறவுள்ள கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கு விண்ணப்பித்த 292,706 விண்ணப்பதாரர்களுக்கான பரீட்சை அனுமதிப் பத்திரம் தபாலிடப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பாடசாலை பரீட்சார்த்திகளுக்கான பரீட்சை அனுமதிப்பத்திரம் பாடசாலை அதிபர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தனியார் பரீட்சார்த்திகளுக்கான பரீட்சை அனுமதிப்பத்திரம் அவர்களது தபால் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பாடசாலை பரீட்சாத்திகள் அதிபர்கள் ஊடாக பரீட்சைக்கான அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்ள முடியும் என பரீட்சைகள் திணைக்களம் கூறியுள்ளது.

பரீட்சைகள் நடைபெறும் காலத்தில் பரீட்சை அனுமதிப் பத்திரம் இல்லாத மாணவர்கள் பரீட்சை மண்டபத்திற்கு எந்தவொரு காரணத்திற்காகவும் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. பரீட்சை அனுமதிப்பத்திரங்களில் ஏதேனும் பிழைகள் இருப்பின் உடனடியாக அறியத்தருமாறு பரீட்சார்த்திகளிடம் அத் திணைக்களம் கோரிக்கை விடுத்துள்ளது.


இவ்வருடத்திற்கான உயர் தரப்பரீட்சைகள் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 05ஆம் திகதியிலிருந்து 31ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளன.

## விழிப்புடன் செயற்படுங்கள் மீனவர்களுக்கு கடற்படை எச்சரிக்கை

காலநிலை தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் வழங்கும் அறிவித் தல்கள குறித்து மீனவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என இலங்கை கடற்படை அறிவித்துள்ளது.

காலநிலை அறிக்கை குறித்து மீனவர்கள் கவனம் செலுத்தாமையால் உயிரிழப்பு, சொத்துச் சேதம் என்பன ஏற்படுவதாக கடற்படை சுட்டிக்காட்டியுள்ளது.

தற்போதைய சூழலில் தெற்கு மற்றும் மேற்கு கடற்பகுதியில் அதிக காற்று வீசுவதாகவும் அதனால் அலைகளின் வேகம்



அதிகரித்துள்ளதாகவும் கடற்படை கூறியுள்ளது.

எனவே மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்குச்செல்லும் முன்பாது காப்பு அங்கிகளை அணிய வேண்டும் எனவும் உரிய நேரத்தில் அதனை பயன்படுத்த வேண்டும் எனவும் இலங்கை கடற்படையினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

## திருப்பணி இன்று ஆரம்பம்

இணுவில் சைவநெறிக் கூடம் அருள் ஞானமிகு ஞானலிங்கேசுரர் திருக்கோவில் திருப்பணி வேலைகள் இன்று திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது.

இன்று காலை மூலமூர்த்திக்கு விசேட அபிஷேகம், சிறப்பு வழிபாடுகள் நடைபெற்று அதனைத்தொடர்ந்து காலை 10 மணிக்கு விரிவுபடுத்தப்படும் திருக்கோவில் அத்திபாரம் இடப்படும்.

இந்த நிகழ்வில் தமிழகத்தில் இருந்து வருகை தரும் திருமுருக கிருபானந்தவாரியாரின் மருமகன் சைவசித்தாந்த திரு மந்திரத் தமிழ்மாமணி மு.பெ. சத்தியவேல் முருகனார் கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்துவார். (10)

## தெற்கில் விபத்து இருவர் பலி

வத்தளை, தெலங்கபத சந்தியில் நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை வாகன விபத்தில் இருவர் மரணமடைந்துள்ளனர்.

வானொன்றும் மோட்டார் சைக்கிளொன்றும் மோதியே இந்த விபத்து சம்பாவித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். வத்தளையை சேர்ந்த 23 மற்றும் 30 வயதானவர்களே இந்த விபத்தில் மரணமடைந்துள்ளனர்.

இவர்கள் இராகம வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மரணடைந்துள்ளனர்.

## தவணைப் பரீட்சை நாளை ஆரம்பம்

யாழ்ப்பாண கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளின் இரண்டாம் தவ்ணைப் பரீட்சைகள நாளை 16 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை முதல் ஆரம்பித்து நடைபெறவுள்ளதாகத் தெரிவிக கப்படுகிறது.

தரம் 6 முதல் 9 வரையான வகுப்புக்களுக்குரிய பரீட்சைகள் யாவும் எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல ஆரம்பமாகி நடைபெறவுள்ளன.


பரீட்சை தொடர்பான நேரசூசிகள் யாவும் ஏறகனவே பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.





புனரமைக்கப்படாத நிலையிலுள்ள முள்ளியவளை பொதுச்சந்தையின் தோற்றம் இது. மக்கள் கூடும் இந்த சந்தைக் கட்டடத்தின் அவல நிலையக் கண்டு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களோ? என மக்கள் கேட்கின்றனர். (125)

32) நாய்க்கு முன்னால் முகம் பார்க்கும் கண்ணாடியை பிடித்த போது நாய் குரைத்தது இதற்கு காரணம் எது?
1) தன்னைப்போன்ற இன்னொரு உருவை கண்ணாடியில் கண்டதால்.
2) கண்ணாடியில் வீட்டு எஜமானின் உருவைக் கண்டதால்.
3) கண்ணாடியில் தனது உருவம் தெளிவாக தெரியாமையினால்

33) 
உருவில் உள்ள சிறிய சதுரம் ஒன்றின் பரப்பளவு $1cm^2$ எனின் பெரிய சதுரத்தின் பரப்பளவு யாது?
1) $12cm^2$    2) $16cm^2$    3) $8cm^2$

34) இலங்கை நேரம் மு.ப 5.15 மணிக்கு கொழும்பில் இருந்து புறப்பட்ட விமானம் ஒன்று மலேசியா நாட்டு நேரம் மு.ப 9.45 மணிக்கு மலேசியாவை சென்றடைந்தது. இலங்கை நேரம் மு.ப 8.00 மணியாகும் போது மலேசியா நாட்டு நேரம் மு. ப 9.00 மணியாகும். விமானம் பயணத்திற்கு எடுத்த நேரம் யாது?
1) 4 மணி 30 நிமிடம்    2) 4 மணி 15 நிமிடம்    3) 3 மணி 30 நிமிடம்

35) 6m உயரமும் 4m அகலமும் உள்ள சுவருக்கு வர்ணம் பூசுவதற்கு 4*l* வர்ணம் தேவை. 3m உயரமும் 2m அகலமும் உள்ள சுவருக்கு வர்ணம் பூசுவதற்கு தேவையான வர்ணத்தின் அளவு யாது?
1) 4*l*    2) 2*l*    3) 4*l*

**◆ 36 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்குரிய விடையை புள்ளிக்கோட்டில் எழுதுக.**

| | |
|---|---|
| திக்கு | சுளகு |
| குமரி | நிலவு |
| பணம் | வியாதி |


36) கூட்டில் சொற்கள் தரப்பட்டுள்ளவாறு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. அக்கோலத்தை இனங்கண்டு வெற்றிடத்திற்கு உரிய சொற்களை எழுதுக?

அம்மி ⟶ மிளகு ⟶ குளவி ⟶ .................⟶..................⟶


37) அமுதன், அரசன், அரவம் என்னும் சொற்கள் குறியீட்டு வடிவில் MPSA, MPVH, MDIH என எழுதப்பட்டுள்ளன. இதில் அரவம் என்பதைக் குறிக்கும் குறியீடு எது?
..................................

38) இலங்கையின் தேசிய தலைவராகிய இவர் பண்டைய நூல்களை மீள வெளியிட்டதுடன் மது ஒழிப்பு இயக்கத்தையும் ஆரம்பித்தார். சிங்கள அகராதியின் ஆசிரியராக செயற்பட்ட இவர் நையாண்டிக் கதைகளையும் எழுதினார். இவர் யார்? ..................................

39) ஒரே சதுரமுகியின் பல்வேறு பக்கங்கள் இங்கே காட்டப்பட்டுள்ளன.





எழுத்து Wக்கு எதிரே இருக்கும் பக்கத்தில் உள்ள எழுத்து எது? ..............

40) 


? இக்குறி இடப்பட்ட இடத்திற்கு வரவேண்டிய இலக்கம் எது?
..................



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013





# கல்வி முரசு

1.30 மணி



**◆ மூன்று சொற்களுக்கும் பொருத்தமான உருவை தெரிவு செய்க.**

1) வெப்பம் - பரனைட் - இரசம்.

1) 2) 3)

2) மாலுமி - பயணம் - வேகம்

1) 2) 3)


3) திருத்தமான கருத்தைத்தரும் வாக்கியத்தை தெரிவு செய்க.
1. அரசாங்கம் புத்தகங்களை வழங்குகிறது உங்களுக்கு இலவசமாக
2. இலவசமாக புத்தகங்களை உங்களுக்கு வழங்குகிறது அரசாங்கம்
3. அரசாங்கம் உங்களுக்கு இலவசமாக புத்தகங்களை வழங்குகிறது

4) பிழையான கருத்து இடம்பெறும் வாக்கியத்தை தெரிவு செய்க.
1. முப்பதாவது ஒலிம்பிக்போட்டி இலண்டனில் நடைபெறவுள்ளது.
2. அதிகளவு உடுக்கோலங்களை கண்டறிந்தவர் நியூட்டன் ஆவார்.
3. மகாத்மாகாந்தியின் சுயசரிதை சத்தியசோதனையாகும்.


**◆ தரப்பட்ட மூன்று சோடி சொற்களில் வித்தியாசமான சோடி சொல்லின் கீழ் கோடிடுக.**

5) 1) தலதா மாளிகை / கண்டி    2) தூபாராம / அனுராதபுரம்    3) எம்பக்க / பொலன்னறுவை


6) 1) மார்க்கோனி / வானொலி    2) எடிசன் / மின்குமிழ்    3) அப்துல்கலாம் / கணினி

7) 


இந்தக்கனவுருவினுள் ஒருபக்க நீளம் 2cm அளவுடைய எத்தனை சதுரமுகிகளை அடுக்க முடியும்?
1) 6    2) 12    3) 9

8) 


தரப்பட்ட உருவில் 1,2,3 பகுதிகள் குறித்து நிற்கும் கோணங்கள் முறையே,
1) விரிகோணம், செங்கோணம், கூர்கோணம்
2) செங்கோணம், கூர்கோணம், விரிகோணம்.
3) செங்கோணம், விரிகோணம், கூர்கோணம்.

9) 


உருவில் A வட்டம் 7 ஆல் மீதியின்றி வகுபடும் எண்களையும் C வட்டம் 5ஆல் மீதியின்றி வகுபடும் எண்களையும் குறிக்கிறது. எனின் B வட்டம் குறிக்கும் எண் எது?

1) 25 2) 28 3) 35

10) நீளமான நாடா ஒன்றை ஆறு துண்டுகளாக வெட்டுவதற்கு கத்தரிக்கோலை எத்தனை தடவை பயன்படுத்த வேண்டும்?

1) 5 2) 6 3) 7

◆ **கோட்டு படத்தின் உதவியுடன் 11ஆம்,12ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

| 1 முட்டை<br>1 சவர்க்காரம் |
|---|
| 41.00 |

| 3 சவர்க்காரம்<br>4 முட்டை |
|---|
| 136.00 |

11) முட்டை ஒன்றின் விலை யாது? 1) 12.00 2) 14.00 3) 13.00

12) சவர்க்காரம் ஒன்றின் விலை யாது? 1) 28.00 2) 29.00 3) 27.00

◆ **13ஆம், 14ஆம் வினாக்களில் தரப்பட்ட கூற்றுக்களுடன் தொடர்புடைய விடையை தெரிவு செய்க.**

13) A - பாதசாரிகள் வீதியில் வலது பக்கமாக செல்ல வேண்டும்
B - தட்டச்சுப்பொறி மின் சாதனமாகும்

1) A மட்டும் சரி 2) B மட்டும் சரி 3) A உம் B உம் சரியானது.

14) A - மஞ்சள்நிற காய்கறிகளில் விற்றமின் A அடங்கியுள்ளது.
B - எலி மூலம் பிளேக் நோய் பரவுகிறது.

1) A மட்டும் சரி 2) A உம் B உம் சரியானது. 3) A உம் B உம் பிழை.

15) அடுத்து வருகின்ற இரண்டு மாதங்களில் உள்ள நாட்களின் கூட்டுத்தொகை 62 ஆகும். அவ்விரு மாதங்களும் எவை?

1) பெப்ரவரி, மார்ச் 2) ஏப்ரல், மே 3) ஜுலை, ஆகஸ்ட்

16) ஒரு இடத்தில் இருந்து புறப்பட்ட இரு நண்பர்கள் எதிர் எதிர் திசைகளில் 75m தூரம் பயணம் செய்து ஒருவர் வலப்புறமும் மற்றையவர் இடப்புறமும் திரும்பி 100m பயணித்தார்கள். தற்போது இருவரும் எவ்வளவு தூரத்தில் நிற்கிறார்கள்?

1) 200m 2) 150m 3) 350m

17) ஒரு கப்பல் 3 நிமிடங்களுக்கு ஒருமுறை ஒலி எழுப்பும் மற்றைய கப்பல் 4 நிமிடங்களுக்கு ஒரு முறை ஒலி எழுப்பும் இரு கப்பல்களும் காலை 6 மணிக்கு ஒலி எழுப்பியது. எனின் மீண்டும் எத்தனை மணிக்கு ஒன்றாக ஒலி எழுப்பும்?

1) காலை 6.25 2) காலை 6.12 3) காலை 6.30

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | 5 | 4 | 9 | 8 |
| 6 | 1 | 0 | 2 | 5 |
| 9 | 8 | 3 | 0 | 7 |
| 7 | 3 | 1 | 6 | 5 |
| 4 | 5 | 9 | 1 | 2 |


18) இச்சட்டத்தில் மேலிருந்து கீழாக நான்காவது வரிசையில் இடமிருந்து வலமாக ஐந்தாவது கட்டத்தில் உள்ள இலக்கம் எது?
..........................................

19) இவ்வரிசையில் கீழிருந்து மேலாக ஐந்தாவது வரிசையில் வலமிருந்து இடமாக மூன்றாவது கட்டத்தில் உள்ள இலக்கம் எது?
..........................................

20) தாவரம் ஒன்று எப்பொழுதும்

1) உணவு தயாரிக்கும் 2) பூக்கள் பூக்கும் 3) வளரும்



21) 


இக்கோலத்தில் A,B ஆகியவற்றுக்கு பொருத்தமான எண்கள் முறையே எவை?

1) 5உம், 9உம் 2) 6உம், 8உம் 3) 5உம், 11உம்

22) பிழையான கோவையை தெரிவு செய்க?

1) $6 \times 5 \times 0 = 30$ 2) $9 + 8 + 8 = 25$ 3) $30 - 0 - 3 = 27$


> நான் ஆதவனை கண்டது ஆதிலைக் கண்ட பின்பாகும். அமலனைக் கண்டது ஆதிலை காண்பதற்கு முன்னராகும் ஆதவனைக் கண்ட பின்பே அன்ரனை கண்டேன்.

23) நான் முதலில் யாரைக்கண்டேன்? 1) அமலன் 2) ஆதில் 3) அன்ரன்

24) நான் ஆதிலை கண்ட பின்னர் எவர் இருவரையும் கண்டேன்?

1) அமலன், ஆதவன் 2) ஆதவன்,அன்ரன் 3) அன்ரன்,அமலன்

25) நான்காக மடிக்கப்பட்ட கடதாசித்துண்டு ஒன்றில் துவாரம் இடப்பட்டுள்ள முறையை இவ்வுரு காட்டுகிறது. இக்கடதாசியை விரிக்கும் போது தோன்றும் உருவை தெரிக.




◆ **26ஆம், 27ஆம் வினாக்களில் இரு ஒத்த கருத்து சொற்களும் இரு எதிர்க்கருத்து சொற்களும் உள்ளன. எஞ்சிய சொல்லின் கீழ் கோடிடுக.**

26) நோயாளி, மாசு, சுகதேகி, குற்றம், கட்டளை

27) தட்பம், குளிர், மாரி, செழிப்பு, வரட்சி

◆ **இடைவெளிக்கு பொருத்தமான சொல்லை தெரிந்து கோடிடுக.**

28) சரண்யாவும் சர்மிலாவும் .............................................. நண்பிகள்.

1) உடன் பிறந்த 2) தீவிரமான 3) இணைபிரியாத


29) நாட்டார் பாடல்கள் படித்தவர்களுக்கு மட்டுமின்றி .............................................. மக்களுக்கும் இலகுவில் புரிந்து கொள்ள முடியும்.

1) பாமர 2) கிராம 3) பண்டைய


30) காந்தியடிகள் ஏழை மக்களின் வாழ்வை உயர்த்த .............................................. கொண்டார்.

1) ஆலோசனை 2) திடசங்கற்பம் 3) விகடம்

31) முதலில் தரப்பட்ட செவ்வக வடிவத்தாளில் புள்ளிக்கோடுகள் வழியாக வெட்டி எடுக்கப்பட்ட துண்டுகளை கொண்டு அமைக்கக் கூடிய உருவை கண்டறிந்து கோடிடுக.



# நிகழ்வுகளின் பதிவுகள்....



சுன்னாகம் ஷற்றன் நஷனல் வங்கியின் 10 ஆவது ஆண்டு நிறைவையொட்டி வங்கி ஊழியர்கள் இரத்ததானம் செய்தபோது...




தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் மாற்றுவலுவுள்ளோருக்கான அனுபவப்பகிர்வு அண்மையில் குருமன்காடு காளி கோவிலில் இடம்பெற்ற போது...



வடமாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் வடமாகாண சபையின் நிர்வாக நடைமுறைகள் தொடர்பான நூல் அண்மையில் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திர சிறியினால் வெளியிட்டு வைக்கப்பட்டபோது...




நெடுங்கேணி விவசாயத் திணைக்களம் நீண்டகாலத்தின் பின்னர் திறக்கப்பட்டு செயற்பாடுகள் இடம் பெறுகின்றன. (40)



அரியாலை கிழக்கு வெள்ள வாய்க்கால் அமைத்தல் தொடர்பான கூட்டத்தில் நல்லூர் பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவரும் ஈ.பி.டி.பி. நல்லூர்ப் பிரதேச அமைப்பாளருமான இரவீந்திரதாஸன் உட்பட பலர் கலந்து கொண்ட போது...







கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையில் அண்மையில் நடைபெற்ற மணிவாசகர் விழாவின் பதிவுகள்... (10)






கரணவாய் தெற்கு செல்வபுரம் பிரதேச பொதுமக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் நல்லுறவை ஏற்படுத்தும் முகமாக இடம்பெற்ற நிகழ்வில்... (18)

# ஐ.நா. அமைதிப்படையினர் மீது சூடானில் ரொக்கட் தாக்குதல்

## ஏழு பேர் பலி





சூடானில் நடந்த தாக்குதல் சம்பவத்தில் ஐ.நா அமைதிப் படைப் பிரிவைச்சேர்ந்த ஏழுபேர் பலியாயினர். 17இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். சூடான் நாட்டில் அரசியல் குழப்பம் காரணமாக உள்நாட்டு போர் ஏற்பட்டுள்ளது. இதனை தீர்க்கும் வகையில் ஐ.நா சபையின் அமைதிப் படை பிரிவினர் பாதுகாப்பு பணியை மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில் கோர் அபெச்சி பகுதியில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த ஐ.நா பாதுகாப்புப்படையினர் மீது ரொக்கெட்குண்டுகள் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டது. இச் சம்பவத்தில் ஏழு பேர் பலியாயினர்.

இரு பெண் அதிகாரிகள் உள்ளிட்ட 17இறகும் மேற்பட்டோர காயமடைந்துள்ளனர் என பாதுகாப்பு படைப்பிரிவின் செய்தி தொடர்பாளர் கிறிஸ் சிக்மானிக் தெரிவித்துள்ளார். மேலும் இத் தாக்குதல் சம்பவத்திற்கு எந்த ஒரு தீவிரவாத இயக்கமும் பொறுப பேற்கவில்லை என கூறப்படுகிறது.

உலகச் செய்திகள்

# சிரிய போராட்டத்தில் களமிறங்கும்தலிபான்கள்



சிரியா ஜனாதிபதிக்கு எதிராக போராட பயங்கரவாதிகளை அனுப்ப பாகிஸ்தான் தலிபான்கள் திட்டமிட்டுள்ளனர். இது குறித்து தலிபான் வட்டாரங்கள் கூறுகையில், எங்கள் நபர்கள் (பயங்கரவாதிகள்) சிரியா சென்று ஜனாதிபதி பஷர் அல் அசாத்தின் படைகளை எதிர்த்து போராடுவார்கள்.

முதற்கட்டமாக, கொரில்லா போர் முறைகளில் நிபுணத்துவம் பெற்ற நபர்கள் அங்கு செல்வார்கள்.பாகிஸ்தானில் இருந்து சிரியா செல்பவர்களில் அரபு, உஸ்பெக், செசன் தீவிரவாதிகளும் அடங்குவர்.அவர்கள் ஆப்கானில் 2001ஆம் ஆண்டு அமெரிக்கா படையெடுப்பு நடத்தியதில் இருந்து, பாகிஸ்தானின் மலைப்பாங்கான பழங்குடியின்ப் பகுதிகளில் வசித்து வருகின்றனர் என்று தெரிவித்துள்ளன.


# சோலர் பனல் மோசடியில் நடிகை பானுவுக்கும் தொடர்பாம்



கேரளாவில் சோலர் பனல் மோசடி விவகாரத்தில் தாமிரபரணி பட கதாநாயகி பானுவுக்கும் தொடர்பு இருப்பதாக பரபரப்புத் தகவல்கள் வெளியாகியுள்ளன. கேரள அரசியலில் பூகம்பத்தை ஏற்படுத்தியுள்ள சோலர் பனல் மோசடி வழக்கில் நாளுக்கு நாள் பல்வேறு திடுக்கிடும் தகவல்கள் வெளிவந்த வண்ணம் உள்ளன. இந்நிலையில் பிரபல மலையாள நடிகையும், தாமிரபரணி பட கதாநாயகி பானுவுக்கும் தொடர்பு இருப்பதாக பரபரப்புத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பானுவுக்கும் (மலையாளத்தில் இவர் முக்தா என அழைக்கப்படுகிறார்). பிஜு ராதாகிருஷ்ணனுக்கும் தொடர்பு இருந்தது விசாரணையில் தெரியவந்துள்ளது. பானுவின் வீட்டிற்கு பிஜு ராதாகிருஷ்ணன் சென்றதாக அவரது கார் சாரதி ஸ்ரீஜித் பொலிஸில் தெரிவித்துள்ளார்.

# பிரபல தயாரிப்பாளர் ரவிசங்கர் அழுகிய நிலையில் சடலமாக மீட்பு



தமிழ் மற்றும் தெலுங்கில் பிரபல தயாரிப்பாளர் ரவிசங்கரின் உடலானது அழுகிய நிலையில் ஆந்திராவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.


ரவிசங்கர் தமிழ்திரை உலகின் முன்னணி தயாரிப்பாளரும், பிரசாத் ஸ்டுடியோ அதிபருமான எல்.வி.பிரசாத்தின் பேரன் ஆவார்.

இவர் தமிழில் கமல் நடித்த வசூல் ராஜா எம்.பி.பி.எஸ், விஜய் நடித்த நண்பன், தனு் நடித்த மயக்கம் என்ன போன்ற படங்களை தயாரித்து உள்ளார். தற்போது விஷால் நடிக்கும் மதகஜராஜா படத்தை தயாரித்து வந்தார். மணிரத்னம் இயக்கிய கடல் படத்தையும் வாங்கி வெளியிட்டுள்ளார். மேலும் ஆனந்த ரீஜென்ஸி என்ற பெயரில் விடுதிகளும் நடத்தி வருகின்ற்ார்.

இந்நிலையில் ஏனாமில் தனது உணவகத்தை பார்வையிட சென்ற அவர் கடந்த திங்கட்கிழமை அதிகாலை 3 மணிக்கு நடந்து போனவர் விடுதிக்கு திரும்பி வரவில்லை.இது குறித்து ஏனாம் பொலிஸில் புகார் கொடுக்கப்பட்டது. பொலிஸார் வழக்கு பதிவு செய்து ரவிசங்கர் பிரசாத் கடத்தப்பட்டாரா? அல்லது ஆற்றில் தவறி விழுந்தாரா? என்று விசாரணை நடத்தி வந்தனர்.

மேலும் சினிமா படங்கள் எடுத்து நிதி நெருக்கடியில் அவர் மாயமானாரா? அல்லது யாரேனும் கடத்தினார்களா? என்று பல்வேறு கோணங்களில் பொலிஸார் விசாரித்து வந்தனர்.இந்நிலையில் ரவிசங்கர் பிரசாத்தின் உடல் ஆந்திர மாநிலம் காக்கி நாடா மாவட்டத்தின் கோகுல லங்கா கிராமத்தில் உள்ள கவுதம ஆற்றில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. அழுகிய நிலையில் இருந்த பிரேதத்தை மீட்ட பொலிஸார் பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

# 160 வருட தந்திச்சேவையை முடித்துக்கொண்டது இந்தியா



ஆயிரக்கணக்கான மைல் தொலைவில் உள்ளவர்களுக்கும் அவசர செய்திகளை உடனுக்குடன் தெரிவிக்க உதவிய 160 ஆண்டு கால பழைமையான தந்திச் சேவை இந்தியாவில் இன்றுடன் முடிவுக்கு வருகிறது.இந்தியாவில் பரீட்சார்த்த முறையில் 1850ஆம் ஆண்டு கொல்கத்தாவில் முதன் முதலாக தந்திச் சேவை தொடங்கப்பட்ட போதிலும் 1854ஆம் ஆண்டு பொதுமக்கள் பயன்பாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டது.

அன்று முதல் நாட்டின் பல்வேறு பகுதிகளில் வசிப்பவர்கள் பிறப்பு, இறப்பு உள்ளிட்ட அவசர செய்திகளை பல்லாயிரக்கணக்கான மைல் தொலைவில் உள்ள தங்களின் உறவினர்களுக்கு தந்தி மூலமாகவே பரிமாறி வந்தனர்.செல்போன், இ.மெயில் போன்ற நவீன வசதிகள் பெருகிவிட்டதால் தந்தி சேவையின் முக்கியத்துவம் மக்களிடையே குறையத்தொடங்கியது.

இதன் விளைவாக, ஆண்டு தோறும் 100 கோடி ரூபாய் தந்தி துறையின் நிர்வாக செலவினங்களுக்காக அரசு ஒதுக்கி வந்த போதிலும் வருமானம் 75 கோடிக்கும் குறைவாகவே இருந்தது.

இந்நிலையில், நாடு முழுவதும் உள்ள 75 தந்தி அலுவலகங்களை மூடிவிட தொலைத் தொடர்பு துறை அமைச்சகம் முடிவுசெய்தது. இதனையடுத்து, 160 ஆண்டுகால பழமை வாய்ந்த இந்திய தந்திச்சேவை இன்று இரவு 9 மணியுடன் கைவிடப்பட்டது.

# ரஷ்யாவில் வாகன விபத்து 18 பேர் உயிரிழப்பு




ரஷ்யாவில் இடம்பெற்ற வாகன விபத்தில் 18 பேர் மரணமடைந்துள்ளதுடன், 25 பேர் காயமடைந்துள்ளனர்.

ரஷ்ய தலைநகரான மொஸ்கோவின் புறநகர்ப்பகுதியிலேயே நேற்று முன்தினம் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. பஸ் வண்டியொன்றும் லொறியொன்றும் மோதியே இவ்விபத்து ஏற்பட்டுள்ளது. இவ்விரு வாகனங்களின் சாரதிகளும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ்விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்காக இன்று துக்கதினம் அனுஷ்டிக்கப்படுமென்று நகர அதிகாரிகள் பிரகடனப்படுத்தியுள்ளனர்.

# பூட்டானில் தேர்தல்; எதிர்க்கட்சியிடம் ஆட்சி



© picture-alliance/dpa

பூட்டான் நாடாளுமன்றத்தேர்தலில் தற்போதைய எதிர்க்கட்சியான மக்கள் ஜனநாயகக்கட்சி அமோக வெற்றிபெற்றது. மொத்தமுள்ள 47 தொகுதிகளில் அக்கட்சி 32 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் அக்கட்சி ஆட்சியில் அமர்கிறது. இப்போதைய ஆளுங்கட்சியான துருக் பியூன்சம் ஷோக்பாவால் 15 இடங்களில் மட்டுமே வெற்றி பெற முடிந்தது. பூட்டான் நாடாளுமன்றத்தேர்தல் நேற்று நடைபெறறது. அமைதியாக நடைபெற்ற இத்தேர்தலில் 80 சதவீத வாக்குகள் பதிவாகின.

பூட்டானில் மொத்தம் 3.81 இலட்சம் வாக்காளர்கள் உள்ளனர். 850 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டன. 10,000 அலுவலர்கள் தேர்தல் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். இந்தியா சார்பில் 4,130 மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பூட்டானுக்கு பரிசாக அளிக்கப்பட்டன. இந்திய தலைமைத்தேர்தல் ஆணையர் வி.எஸ். சம்பத் பார்வையாளராக இருந்தார். மண்ணெண்ணெய் மற்றும் சமையல் எரிவாயுவுக்கு அளித்த மானியத்தை இந்தியா நிறுத்தியது தொடர்பான விவகாரம் தேர்தல் பிரசாரத்தில் முக்கிய பங்கு வகித்தது.

# மெத்தா நிறுவனத்தின் நடமாடும் சேவை

# ஊனமுற்றவர்களை பயன்பெற அறிவுறுத்து

(மன்னார்)

மன்னார் வைத்தியசாலையில இயங்கும் மெத்தா நிறுவனம் தனது 45 ஆவது நடமாடும் சேவையை மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள இலுப்பைக்கடவை வெள்ளாங்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் எதிர்வரும் 19 ஆம் திகதி நடாத்தவுள்ளது.


காலை 7.30 தொடக்கம் 10.30 வரை இலுப்பைக்கடவை பாடசாலையிலும் மதியம் 11.30 தொடக்கம் பிற்பகல் 4.30 வரை வெள்ளாங்குளம் பாடசாலையிலும் இச்சேவை பாடசாலை சிறார்களுக்கும், ஆசிரியர்களுக்கும் அந்த ஊர் பொதுமக்களுக்காகவும் நடாத்தப்படும். இதில் செய்ற்கை அவயவங்கள் பொருத்துவதற்கும் புதிய அவயவங்களுக்கு அளவு எடுக்கப்படும்.

கட்டைக்கால் போலியோ போன்றவைக்கான விசேட பாதணிகளும் நடை பயிற்சியும் இலவசமாக வழங்கப்படும்.

இதைத் தொடர்ந்து 20 ஆம், 21 ஆம் திகதிகளில் காலை 8.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணி வரை கிளிநொச்சி ஏ-9 வீதியில் உள்ள கருணை நிலையத்தில் நடைபெறும்.

நடமாடும் சேவையில் கடந்த 5,6,7 தினங்களில் மாங்குளம், முல்லைத்தீவில் அளவெடுக்கப்பட்டவர்களுக்கு செயற்கை அவயங்கள் பொருத்தப்படுவதுடன் புதிய ஊனமுற்றவர்க்கும் அளவுகள் எடுக்கப்படும். அப்பகுதியில் உள்ள ஊனமுற்ற வர்களுக்கு போதிய அறிவுறுத்தல் வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆஷஸ் முதல் டெஸ்ட் போராடித் தோற்றது ஆஸி.




(லண்டன்)

இங்கிலாந்து அணிக்கெதிரான முதலாவது ஆஷஸ் டெஸ்ட் தொடரின் முதல் போட்டியில் அவுஸ்ரேலிய அணி போராடித் தோல்வியைத் தழுவியது.

இங்கிலாந்து, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி இங்கிலாந்தின் நேட்டிங்ஹொமில் நடைபெற்றது.

இதில் இங்கிலாந்து அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 215 ஓட்டங்களையும், அவுஸ்ரேலிய அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 280 ஓட்டங்களையும் பெற்றிருந்தன.

65 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய இங்கிலாந்து அணி இயன் பெல்லின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. குறிப்பாக, இயன் பெல், ஸ்ரூவட் புராட் இணை ஆறாவது விக்கெட்டுக்காக மிகச் சிறப்பாக ஆடி 138 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றது. இறுதியில் இங்கிலாந்து அணி இரண்டாவது இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 375 ஓட்டங்களைப் பெற்றது. இதில் இயன் பெல் 109, ஸ்ரூவெட் புரொட் 65, பீற்றர்சன் 64, குக் 50 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஸ்ரார்க், பீற்றர் சிடில் தலா மூன்று, ஏகார், பட்டின்சன் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 311 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் ஆடிய அவுஸ்ரேலிய அணி, ஆரம்பத்தில் மிகவும் சிறப்பான முறையில் ஆடியது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கிய வட்சன், றோயர்ஸ் இணை மிக நிதானமாக ஆடியது. இருப்பினும் இந்த ஜோடி 84 ஓட்டங்களைப் பெற்றவேளை ஸ்ரூவட் புராட்டினால் பிரிக்கப்பட்டது. தொடர்ந்து அவுஸ்ரேலிய அணியின் விக்கெட்டுக்கள் ஒரு சீரான இடைவெளியில் வீழ்த்தப்பட்டது. இருப்பினும் ஆறாவது விக்கெட்டுக்காக களமிறங்கிய ஹடின் நிதானமாக ஆடி ஓட்டங்களைக் குவித்தார். மறுமுனையில் அண்டர்சனினால் விக்கெட்டுக்கள் சாய்க்கப்பட்டுக் கொண்டிருந்தன. ஒரு கட்டத்தில் அவுஸ்ரேலிய அணி ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 231 ஓட்டங்களைப் பெற்று படுதோல்வி உறுதி என்ற நிலை காணப்பட்டது. இந்நிலையில் பத்தாவது விக்கெட்டுக்காக ஹடினுடன் இணைந்த பட்டின்சன் நங்கூரம் போன்று ஒரு முனையில் தரித்துக் கொண்டார். இங்கிலாந்து அணிக்கு கலக்கத்தைக் கொடுத்த இந்த ஜோடி ஆஸியை வெற்றிக் கனவில் மிதக்கச் செய்தது. இருப்பினும் 65 ஓட்டங்களைப் பெற்றவேளை அண்டர்சனால் இந்த ஜோடி பிரிக்கப்பட இங்கிலாந்தின் வெற்றி உறுதி செய்யப்பட்டது. இறுதியில் அவுஸ்ரேலிய அணி இரண்டாவது இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 296 ஓட்டங்களைப் பெற்று 14 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. இதில் ஹடின் 71, வட்சன் 46, றோயர்ஸ் 52, கிளார்க் 23, பட்டின்சன் ஆட்டமிழக்காது 25 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அண்டர்சன் ஐந்து, ஸ்வான், ஸ்ரூவெட் புரோட் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இரு இனிங்ஸிலும் 10 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய அண்டர்சன் போட்டியின் ஆட்டநாயகனாகத் தெரிவானார். இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 18 ஆம் திகதி லோட்ஸில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முதல்வர்...

தீர்மானிப்பதற்காக கடந்த வியாழன், வெள்ளி ஆகிய தினங்களில் கொழும்பில் நடைபெற்ற கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களில் எந்தவித முடிவுகளும் எட்டப்படவில்லை. அதேவேளை, நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு நடைபெறவிருந்த கூட்டமும் இன்று திங்கட்கிழமை வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், கூட்டமைப்பின் முதலமைச்சர் விவகார இழுபறி தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர்களில் ஒருவரான சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்துள்ளதாவது, வடக்கில் மக்களோடு மக்களாக வாழ்ந்து, தமிழரின் விடுதலைக்காக தந்தை செல்வா வழியில் போராடிவரும் மாவை சேனாதிராஜாவையே முதலமைச்சர் வேட்பாளராகக் களமிறக்க வேண்டும் என்பதில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்டக் கிளை உறுதியாகவுள்ளது. அதேவேளை, வடக்கில் ஒவ்வொரு மாவட்டங்களிலும் உள்ள மக்களும் மாவை சேனாதிராஜாவையே முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்த வேண்டும் என்பதில் குறியாகவுள்ளனர். இந்நிலையில், வடமாகாணசபைத் தேர்தல் தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்டக்கிளை பிரேரணை ஒன்றை ஏற்கனவே அனுப்பிவைத்துள்ளது. அதில் வேட்பாளர்களின் தெரிவு அந்தந்த மாவட்டங்களின் கட்சி முக்கியஸ்தர்களிடம் ஒப்படைக்க வேண்டும், மாவட்டத்தில் தெரிவு செய்யப்படும் வேட்பாளர்கள் அம்மாவட்டத்தை சொந்த இடமாகவும், அங்கு வசிப்பவராகவும் கொண்டிருக்கவேண்டும், முதலமைச்சர் வேட்பாளராக மாவை சேனாதிராஜாவை களமிறக்கவேண்டும் ஆகிய மூன்று கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இக்கோரிக்கைகளுக்கமைய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் செயற்படவேண்டும். வடமாகாணசபைத் தேர்தலில் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளராக மாவை சேனாதிராஜாவை களமிறக்காவிட்டால் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுவை உடனடியாகக் கூட்டுமாறு வலியுறுத்துவோம். அதில் தீர்க்கமான ஒரு முடிவை நாம் எடுப்போம் என்று தெரிவித்தார்.

## மாகாண...

அவர் இவ்வாறு கூறியுள்ளார். ஜனாதிபதியைச் சந்திக்க முன்னர், கோத்தாபய ராஜபக்ஷவுக்கும், சிவ்சங்கர் மேனனுக்கும் இடையில் நடத்தப்பட்ட இந்தத் தனியான சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பாக இருதரப்பினாலும் அதிகாரபூர்வமாக எந்தத் தகவலும் வெளியிடப்படவில்லை. இந்தச் சந்திப்பில், பொலிஸ் அதிகாரங்களை பகிர்ந்தளிப்பதால், தமிழ்பேசும் சமூகத்துக்கு எந்த நன்மையும் கிடைக்காது என்றும் கொந்தளிப்பைத் தான் ஏற்படுத்தும் என்றும் கோத்தாபய ராஜபக்ஷ வலியுறுத்திக் கூறியுள்ளார்.

அதனை ஏற்றுக்கொண்ட சிவ்சங்கர் மேனன், இதற்கு தனியான பொறிமுறை ஒன்று உருவாக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். இந்தச் சந்திப்பில், இலங்கை கடற்பரப்பில் அத்துமீறும் இந்திய மீனவர்களின் விவகாரம் குறித்து பேச்சுக்கள் எதுவும் நடத்தப்படவில்லை. எனினும் முத்தரப்புக் கூட்டத்தில் ஊடுருவலைத் தடுக்கவேண்டும் என்று கோத்தாபய ராஜபக்ஷ வலியுறுத்தியிருந்தார்.

## சரணடைந்து...

படையினரிடம் சரணடைந்த 800 பேர் பேருந்து ஒன்றில் ஏற்றிச் செல்லப்பட்டதாகவும், அவர்கள் எங்கே என்பது இன்றுவரை தெரியவில்லை என்றும் மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர். அதேவேளை, போரின் இறுதியில் படையினரிடம் சரணடைந்து காணாமற்போன மேலும் பலரைக் கண்டுபிடிக்கக் கோரி, விரைவில் ஆட்கொணர்வு மனுக்கள் சமர்ப்பிக்கப்படவுள்ளன. இவ்வாறு காணாமற்போனவர்களில் யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியின் முன்னாள் முதல்வர் வண.பிதா பிரான்சிஸ் யோசெவ், மற்றும் விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள் பலரும் அடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஈ.பி.டி.பி.யின்...

உடைய வாகனத்தில் மதிய உணவு அருந்துவதற்காக வந்த இரண்டு ஆண்கள், மற்றும் இரண்டு பெண்களென நால்வர், அங்கு மதிய உணவை அருந்திவிட்டு, உணவுக்குரிய பணத்தை செலுத்தாமல் சென்றுள்ளனர். இதன்போது குறித்த ஹோட்டல் காசாளர் அவர்களிடம் பணத்தைக் கேட்கவே அவர்கள் தாம் ஈ.பி.டி.பி. என்ற சாரபபட அச்சுறுத்தும் பாணியில் நடந்துகொண்டுள்ளனர். இது விடயம் சம்பந்தமாக எமது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

எனவே எமது கட்சியின் பெயரைப் பயன்படுத்தும் எவராக இருந்தாலும், அது தொடர்பாக எமது பிரதேச அமைப்பாளர்களுக்கோ, அல்லது எமக்கோ உடனடியாக அறியத்தருமாறு கேட்டுக்கொள்கின்றேன் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மூழ்கிய...

பட்டதாக அந்த நாட்டிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகர் அட்மிரல் திஸர சமரசிங்க தெரிவித்துள்ளார். எவ்வாறாயினும் குறித்த படகு கவிழ்ந்த போது காப்பாற்றப்பட்ட குடியேற்றவாசிகளில் எத்தனை பேர் இலங்கையர்கள் என்பது இதுவரை தெரிவிக்கப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார். படகிலிருந்த 7 பேர் கடலில் மூழ்கி காணாமல் போயுள்ளனர். காப்பாற்றப்பட்ட பிரஜைகளில் ஆப்கான் மற்றும் ஈரான் பிரஜைகள் இருப்பதாக திஸர சமரசிங்க குறிப்பிட்டுள்ளார். ஆயினும் குறித்த படகு இலங்கையில் இருந்து சட்டவிரோத குடியேற்றவாசிகளுடன் பயணித்த ஒன்று அல்ல என்பது தெரியவந்துள்ளதுடன் அது இந்தோனேஷியாவில் இருந்து பயணித்தமை கண்டறியப்பட்டுள்ளது.

## 13 ஐ நீர்த்துப்போக...

இல் இலங்கை அரசு ஈடுபட்டுள்ளது. இறுதிக்கட்டப் போரில் பலரை இலங்கை இராணுவம் கொன்று குவித்த பின்பும் இலங்கைத் தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கையில் அந்த நாட்டு அரசு ஈடுபட்டுள்ளது என இதற்கு முன்பு தங்களுக்கு எழுதிய கடிதங்களில் குறிப்பிட்டு இருக்கிறேன். இலங்கையில் தமிழர்கள் மீதான கொடுமைகள், துன்புறுத்தல்கள் தொடர்ந்து நடந்துவருகின்றன.

அங்கு சிங்களவர்களுக்கு இணையான சமஉரிமை, அந்தஸ்து, தமிழர்களுக்கு வழங்குவதற்கான அடையாளங்கள் எதுவும் தெரியவில்லை. மேலும் தன்னாட்சி உரிமை மற்றும் ஜனநாயக உரிமைகளும் மாற்றம் செய்யும் நடவடிக்கை ஏற்பட்டுள்ளது. அதேநேரத்தில் இலங்கைத் தமிழர்களுக்கு தன்னாட்சி உரிமை வழங்கும் 13 ஆவது திருத்தச்சட்டத்தை திருத்த வலியுறுத்தி சிங்களத் தீவிரவாதிகள் போராட்டம் நடத்தினார்கள்.

எனவே, அந்தச் சட்டத்தை திருத்த நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு ஜனாதிபதி ராஜபக்ஷ அனுப்பியுள்ளார். வரும் செப்ரெம்பரில் வடக்கு மாகாணசபைக்குத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் இலங்கை பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ இந்தச் சட்டத்தை திருத்த வேண்டும் என பகிரங்கமாகவே தெரிவித்துள்ளார். சமீபத்தில் இந்தியா வந்த பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, இந்திய வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்துப் பேசியபோது சட்டத்திருத்தம் செய்வதை நியாயப்படுத்தினார்.

1987 ஆம் ஆண்டு உருவான இந்திய - இலங்கை உடன்பாட்டின்படி 13 ஆவது சட்டப்பிரிவு உருவானது. அதன் மூலம் இலங்கைத் தமிழர்களுக்கு சமஉரிமை, பாதுகாப்பு, மதிப்பு, மரியாதை ஏற்படும் வாய்ப்பு உள்ளது. ஆனால் இலங்கை அரசு தமிழர்களுக்கு அதிகாரம் வழங்குவதில் தீவிர நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை ஒன்றிணைத்து ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரவேண்டும் என்றும் இந்த 13 ஆவது சட்டப்பிரிவில் உள்ளது. ஆனால், ஜனதா விமுக்தி பெரமுன கட்சியின் வழக்கின் மூலம் 2007 ஆம் ஆண்டு இலங்கை உயர் நீதிமன்றம் இந்த முடிவை இரத்து செய்தது.

அதனால் 2 மாகாணங்களும் இணைக்கப்படவில்லை. இதுவே இந்திய - இலங்கை உடன்பாட்டுக்கு பின்னடைவை ஏற்படுத்தியது. இலங்கைத் தமிழர்களின் வாழ்வு மற்றும் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியமாகும். அது 13 ஆவது சட்டப்பிரிவினால் மட்டுமே முடியும். தற்போதுள்ள சூழ்நிலையில், தமிழர்களுக்கு அரசியல் உரிமைகளை வழங்குவதில் இலங்கை அரசு விதிவிலக்காக உள்ளது. எனவே, 13 ஆவது சட்டப்பிரிவில் திருத்தம் கொண்டு வராமல் தடுக்க மத்திய அரசு அனைத்து வகையான நடவடிக்கையும், நெருக்கடிகளையும் கொடுக்கவேண்டும். என்று கூறப்பட்டுள்ளது.

# கிழக்கு மாகாண நிர்வாகத்தில் ஆளுநர் தேவையற்று தலையீடு

## ஆளுங்கட்சி உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் முறையீடு

கிழக்கு மாகாண சபை நிர்வாகத்தில் தேவையற்ற வகையில் ஆளுநர் தலையீடு செய்வதனால் மாகாணசபை நிர்வாகத்தை முன்னெடுப்பதில் தமக்கு நெருக்கடிகள் உள்ளதாக கிழக்கு மாகாண ஆளும்கட்சி உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளனர்.

கண்டியிலுள்ள ஜனாதிபதியின் அதிகார பூர்வ இல்லத்தில் நேற்று முன்தினம் இரவு ஜனாதிபதியுடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் இருக்கும் நிலையில் கிழக்கு மாகாண சபை முதலமைச்சரும், அமைச்சர்களும் அந்த அதிகாரங்களைப் பயன்படுத்துவதில் எந்தத் தடைகளும் கிடையாது என்று தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் ஜனாதிபதியுடன் நடந்த இந்தச் சந்திப்பு தொடர்பாக கருத்து தெரிவித்த மாகாண அமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட், மாகாண சபைக்குரிய ஐந்து அமைச்சுக்களுக்கும் உரிய அமைச்சர்களே பொறுப்பாக இருப்பது மட்டுமன்றி பொறுப்புக் கூறுப்வர்களாகவும் இருக்க வேண்டும் என்பதை ஜனாதிபதி வலியுறுத்தியதாகக் குறிப்பிட்டார்.

அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர் உள்ளடக்கிய மாதாந்த கூட்டங்களை மாகாண அமைச்சர்களே கூட்ட வேண்டும் என்று ஜனாதிபதி தங்களுக்கு பணிப்புரை விடுத்ததாகவும் அவர் கூறினார்.

இந்தச் சந்திப்பில் ஜனாதிபதியினால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் மற்றும் விடுக்கப்பட்ட பணிப்புரைகளை பொறுத்தவரை மாகாண நிர்வாகத்தில் வேறு தலையீடுகள் இன்றி சுமுகமாக தம்மால் இனி செயற்பட முடியும் என்ற நம்பிக்கை தமக்கு உருவாகியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதியின் ஆலோசகர்களில் ஒருவரான முன்னாள் மாகாண முதலமைச்சரும் மாகாண சபை உறுப்பினருமான சிவநேச துரை சந்திரகாந்தன் இது குறித்துக் கூறுகையில்,

கிழக்கு மாகாண சபையின் ஆட்சி சீராக நடைபெறுவதற்கு ஆளுநர், முதலமைச்சர் மற்றும் ஆளும் கட்சி உறுப்பினர்கள் கூட்டாகச் செயல்பட வேண்டியதன் அவசியம் பற்றி ஜனாதிபதி வலியுறுத்தியதாகத் தெரிவித்தார்.

# சிறுவர்கள் மத்தியில் பரவும் வைரஸ் காய்ச்சல்

சிறுவர்களுக்கு வைரஸ் காய்சசலொன்று பரவி வருவதாக சிறுவர் நோய் தொடர்பான வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இடைக்கிடை காய்ச்சலுடன் வாந்தி மற்றும் வயிற்றோட்டம் ஆகியன இந்த நோயின் அறிகுறிகளாக காணப்படுவதாக சிறுவர் நோய் தொடர்பான வைத்தியர் திபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

காய்ச்சல் ஏற்பட்டுள்ள சிறுவர்களை பாடசாலைகள் மற்றும் முன்பள்ளிகளுக்கு அனுப்புவதன் ஊடாக ஏனைய மாணவர்களுக்கும் இந்தக் காய்ச்சல் பரவுவதற்கான வாய்ப்பு உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிறுவர்களின் கைகளை சுத்தமாக வைத்திருப்பதன் ஊடாக இந்தக் காய்ச்சல் தொற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்ள முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# மூழ்கிய கப்பலிலிருந்து பதினொரு பேர் தப்பினர்

## மூவர் இலங்கையர்

சோமாலியாவில் கடந்த இரண்டு ஆண்டுகளாக கடற்கொள்ளையர்களின் பிடியிலிருந்தபோது, கடந்தவாரம் கடலில் மூழ்கிய கப்பலில் இருந்த 11 கப்பல் பணியாளர்கள் உயிர்தப்பியுள்ளதாக அந்தப் பிராந்திய கடற்பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த 11 பேரில் இலங்கையர்கள் 3 பேர் என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

கடற்கொள்ளையர்களின் பிடியிலுள்ள இன்னொரு மீன்பிடி கப்பலுக்கு இவர்கள் கடைசி நேரத்தில் மாற்றப்பட்டுள்ளதாக கிழக்கு ஆபிரிக்க கடற்பிராந்திய பாதுகாப்புக்கான செயலகத்தின் தலைவர் ஜோன் ஸ்டீட் பி.பி.சி. யிடம் தெரிவித்தார்.

கிழக்கு ஆபிரிக்க கடற்பிராந்திய பாதுகாப்புக்கான சர்வதேச செயலகத்தின் தலைவர்

கப்பலில் இருந்துள்ள 4 பேரின் கதி என்னவென்று தெரியவில்லை என்று கூறிய ஜோன் ஸ்டீட், காணாமற்போன 4 பேருமே இலங்கையர்கள் என்றும் கூறினார்.

எல்பேடோ என்ற இந்தக் கப்பல் மூழ்கியபோது அதிலிருந்து வெளிப்பட்ட அவசர உதவி உயிர்காப்பு படகுகள் பல நீண்ட தூரம் கடந்து கரையொதுங்கியுள்ளதை ஐரோப்பிய கடற்படையினர் உறுதிசெய்துள்ளனர்.

அந்தப் படகுகள் மூலம் கடற்கொள்ளையர்கள் அல்லது கப்பல் பணியாளர்கள் உயிர்தப்பியிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

மூழ்கிய எல்படோ வர்த்தகக் கப்பலில் இருந்து 11 பணியாளர்கள் நாய்ஹம் - 3 என்ற மீன்பிடிக் கப்பலுக்கு மாற்றப்பட்ட நிலையில், ஏற்கனவே 29 பேருடன் பிடித்து வைக்கப்பட்டிருந்த நாய்ஹம்-3 கப்பலும் மூழ்கும் அபாயத்தில் உள்ளதாக ஜோன் ஸ்டீட் பிபிசியிடம் தெரிவித்தார்.

இவர்கள் அனைவரையும் விடுவிப்பதற்கான பேச்சுவார்த்தைகள் நடத்தப்படுவதாகவும், பணயம் வைக்கப்பட்டுள்ள சில கப்பல் பணியாளர்களை குடும்பத்தினருடன் பேச கொள்ளையர்கள் அனுமதித்துள்ளதாகவும் கிழக்கு ஆபிரிக்க கடற்பிராந்திய பாதுகாப்புக்கான செயலகத்தின் தலைவர் மேலும் கூறினார்.

# பொருட்களின் வரி அதிகரிப்பு வாழ்வாதாரத்தில் பாதிப்பு

## ஐ.தே.க. தெரிவிப்பு



(கொழும்பு)

மகிந்த சிந்தனை நடைமுறைப்படுத்தப்பட்ட காலப் பகுதியிலிருந்து நாட்டு மக்களின் குடும்ப வருமானம் பாரியளவில் குறைவடைந்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் பொருளாதார வல்லுநருமான ஹர்ச டி சில்வா தெரிவித்துள்ளார்.

அரிசி, பெரிய வெங்காயம் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருடகள் மீதான வரி அதிகரித்துள்ளமையின் காரணமாக பொதுமக்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த வருடத்தின் முதல் நான்கு மாதங்களில் அத்தியாவசியப் பொருட்கள் மீதான வரித்தொகை 39 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக் காட்டினார்.

அரசாங்கம் பொது மக்கள் மீதான வரித்தொகையை பாரிய அளவில் அதிகரித்து வருவதாக அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

# ஆறாயிரம் மாத்திரைகளுடன் பாகிஸ்தான் பிரஜை கைது

(கொழும்பு)

பாகிஸ்தான் பிரஜை ஒருவர் 6 ஆயிரம் மாத்திரைகளுடனும் சுன்னத் செய்வதற்கான உபகரணங்களுடனும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நேற்றுக் காலை 7.30 மணியளவில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மஸ்கட்டிலிருந்து ஓமன் ஏர் வேஸ் விமானத்தில் வந்த 37 வயதுடைய பாகிஸ்தான் பிரஜையிடமிருந்தே 3 இலட்சத்து 50 ஆயிரம் பெறுமதியான குறித்த மாத்திரைகளும் சுன்னத் செய்வதற்கான ஆயிரத்துக்கும் மேற்பட்ட கருவிகளும் சுங்கப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இம்மாத்திரைகள் மனநோயாளிகளின் சிகிச்சைக்காக பயன்படுத்தப்படும் என்பதோடு மாணவர்கள் இதனை கூடுதலாக பயன்படுத்தும் போது ஒருவித போதை ஏற்படுவதாகவும் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

குறித்த நபருக்கு 10 ஆ[illegible] தண்டம் விதித்துள்ளதுடன் மே[illegible]திக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சந்தேக நபர் இதற்கு முன்னரும் சுங்கப் பிரிவினரால் இவ்வாறான மாத்திரைகளை கடத்தி வந்த போது கைது செய்யப்பட்டவர் எனவும் இவர் கொழும்பு பிரதேசத்தில் உள்ள பெண்ணொருவரை திருமணம் செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# தொலைபேசியில் அச்சுறுத்தலா? உடனடியாக அறிவிக்கலாம்

தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அச்சுறுத்தி கப்பம் பெறும் முயற்சிகள் அதிகரித்துள்ள நிலையில், அவ்வாறான அழைப்புக்கள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் அது குறித்து அருகிலுள்ள பொலிஸ் நிலையத்துக்கு உடனடியாக அறிவிக்குமாறு பொலிஸார் அறிவித்துள்ளனர்.

தொலைபேசி மூலமாக பலரை அச்சுறுத்தி பணம் பறிப்பது தொடர்பில் அதிகளவான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ள நிலையில், பொலிஸ் தலைமையகம் விசேட அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அவ்வறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தமிழ், முஸ்லிம் வர்த்தகர்கள் உட்பட பல பேரிடம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, அவர்களை அச்சுறுத்தி பணம் பறிப்பது தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இவ்வாறு, பணம் கேட்டு அச்சுறுத்தும் நபர்கள் பற்றி உடனடியாக அருகில் இருக்கும் பொலிஸ் நிலையத்தில் அல்லது பொலிஸ் முறைப்பாட்டுப் பிரிவின் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு முறைப்பாடு செய்யவும்.

இவ்வாறு பணம் பறிக்கும் நபர்கள் தொடர்பில் இரகசிய பொலிஸார், பயங்கரவாத தடுப்பு பிரிவு அதிகாரிகள், கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் விசாரணைகளை நடத்தி வ[illegible]வதோடு சந்தேகநபர்களைக் [illegible]து செய்வதான நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில், மேற்கண்டவாறான தொலைபேசி அழைப்புக்கள் கிடைக்கப்பெறும் பட்சத்தில், அது குறித்து எவ்வித தயக்கமுமின்றி பொலிஸில் முறையிடவும். அல்லது கீழ் காணும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு அறிவிக்கவும்.

011 - 2444480 அல்லது 011 - 2818283 ஆகிய இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு அறிவிக்குமாறு பொலிஸ் தலைமையகம் தனது அறிக்கை மூலம் பொது மக்களை கேட்டுக்கொண்டுள்ளது.

# யால சரணாலய பகுதியில் கஞ்சா சேனை கண்டுபிடிப்பு

யால தேசிய சரணாலயப் பகுதிகளில் பாரிய சோதனை ஒன்றின் போது நன்கு காய்ந்த 330 கிலோ கஞ்சா மற்றும் கட்டுத்துவக்கு உள்ளிட்ட கஞ்சா விதை 20 கிலோ போன்ற பொருட்களுடன் மூவரை கைது செய்துள்ளதாக மொனராகலை பிரதேச விசேட அதிரடிப் படையினர் தெரிவித்துள்ளனர்.

மொனராகலை மாவட்டத்தின் யால தேசிய சரணாலயப் பகுதிக்குச் சொந்தமான வனப் பகுதிகளில் பாரியளவிலான கஞ்சா சேனை பயிரிடப்பட்டு வருவதாக கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் அப்பிரதேசத்துக்குச் சென்ற கலால் திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்ட விசேட அதிரடிப் பொலிஸ் பிரிவினர் பாரிய சுற்றிவளைப்பின் போது இரு ஏக்கரில் பயிரிடப்பட்ட கஞ்சா சேனையினை கண்டுபிடித்து அங்கு நன்கு காய வைத்திருந்த 330 கிலோ கஞ்சா மூடைகள் கட்டுத்துவக்கு அதற்கு பயன்படுத்தப்படும் வெடி மருந்துகள் இரு பொதிகள் மற்றும் காய்ந்த கஞ்சா விதை இருபது கிலோ உள்ளிட்ட பொருட்களை கைப்பற்றியதோடு மூன்று சந்தேக நபர்களை கைது செய்துள்ளனர்.

நீண்ட காலமாக குறித்த சந்தேக நபர்களால் பயிரிடப்பட்ட சுமார் $4^1/_2$ அடி மற்றும் 5 அடி உயரங்கொண்ட மூவாயிரத்திற்கு அதிகமான கஞ்சா செடிகளை தீயிட்டு கொழுத்தியுள்ள அதே வேளை சந்தேகநபர்களை மொனராகலை மாவட்ட நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாக மொனராகலை விசேட அதிரடி படை பொறுப்பதிகாரி பெரேரா தெரிவித்துள்ளார்.

# டெங்கு முகாமை நிலையம் நீர்கொழும்பில் இன்று திறப்பு

டெங்கு நோயாளர்களுக்கு விசேட சிகிச்சைகளை வழங்கும் வசதிகளுடன் தேசிய டெங்கு முகாமைத்துவ நிலையமொன்று இன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

நீர்கொழும்பு பொது வைத்தியசாலை வளாகத்தில் இந்த நிலையம் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் பாலித்த மகிபால கூறியுள்ளார்.

டெங்குக் காய்ச்சலுக்கான அறிகுறிகள் தென்படும் நோயாளர்களுக்கு இந்த நிலையத்தின் ஊடாக விசேட சிகிச்சைகள் வழங்கப்படவுள்ளன.

18 நோயாளர்களுக்கு ஒரே தடவையில் சிகிச்சைகளை வழங்கக்கூடிய சர்வதேச தரத்திலான நவீன வசதிகளுடன் கூடிய பிரிவொன்றும் இந்த நிலையத்தில் நிறுவப்பட்டுள்ளது.

டெங்குக் காய்ச்சல் தொடர்பான சிகிச்சைகளுக்கு வைத்தியர்கள் மற்றும் தாதியர்கள் இந்த நிலையத்தில் பயிற்றுவிக்கப்படவுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 யூலை 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.